விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(சி-7889)

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 பங்குனி 11 வெள்ளிக்கிழமை (24.03.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 095

## கலப்பு நீதிமன்றை ஏற்க மாட்டோம்!

### உறுதியாக உள்ளோம் - அமை. லக்ஷ்மன்



(கொழும்பு)

போர்க்குற்ற விசாரணைக்கு கலப்பு நீதிமன்றத்தையோ சர்வதேச நீதிபதிகளையோ ஏற்றுக் கொள்ளப்போவது இல்லையென இல

24ஆம் பக்கம் பார்க்க....

## போர்க்குற்றங்களை விசாரித்தால் நாட்டில் மீளவும் யுத்தம் ஏற்படும்!

### ஆகவே விசாரணை நடத்த முடியாது – நீதியமைச்சர்

(கொழும்பு)

இராணுவத்திற்கு எதிராக போர்க்குற்ற விசாரணைகளை முன்னெடுத்தால் அது தமிழ் சிங்கள மக்களிடையே விரிசலை மட்டும் ஏற்படுத்தாது, மீண்டும் ஒரு யுத்தத்திற்குக் கூட வழியமைத்துவிடும் என நீதியமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்தோடு, போர்க்குற்ற விசாரணைகள் குறித்து சர்வதேசத்திலிருந்து வரும் அழு

24ஆம் பக்கம் பார்க்க....



## கடற்படை படகு மோதி உள்ளூர் மீனவர் பலி

### மன்னாரில் நேற்றிரவு சம்பவம்

(மன்னார்)

இலங்கை கடற்படையினரின் அதிவேக படகு மோதியதில் உள்ளூர் மீனவர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்

23ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவிடம் இன்று விசார்ணை

(கொழும்பு)


முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்றைய தினம் பாரிய ஊழல் மோசடிகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகவுள்ளார்.

கடந்த ஜனாதிபதி

24ஆம் பக்கம் பார்க்க....

# இரு வருட அவகாசம் இலங்கைக்கு கிடைத்தது

## வாக்கெடுப்பின்றி தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேற்றம்



(ஜெனிவா)

2015 ஆம் ஆண்டு இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட ஐ.நா தீர்மானங்களை அமுல்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்துக்கு மேலும் இரண்டு வருட கால அவகாசம் வழங்கும் தீர்மானம் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் வாக்கெடுப்பின்றி நேற்றையதினம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

(04-ம் பக்கம்...)

## முள்ளிக்குளம் மக்கள் கவனயீர்ப்பு போர்



(பரந்தன்)

இலங்கை கடற்படையினரால் அபகரிக்கப்பட்டு தற்போது கடற்படை பயிற்சி முகாமாக

23ஆம் பக்கம் பார்க்க....

### முல்லையில் தொடரும் கவனயீர்ப்பு

## காணாமலாக்கப்பட்டோரின் விபரங்கள் இன்று கையளிப்பு



(மல்லாவி)

முல்லைத்தீவில் இராணுவத்திடம் ஒப்ப

23ஆம் பக்கம் பார்க்க....

## விபரங்கள் இல்லை!

(கொழும்பு)

1972 ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இடம் பெற்ற யுத்தத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த போராளிகளின் எண்ணிக்கை தொடர்பான

23ஆம் பக்கம் பார்க்க....

## போர்க்குற்றமே இடம்பெறவில்லை! பிறகு எதற்கு கலப்பு நீதிமன்றம்?

### ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அடியோடு நிராகரிப்பு

(கொழும்பு)

ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இடம்பெற்றுவரும் நிலையில், இலங்கையில் போர்க் குற்றம் என்ற ஒன்று இடம்பெறவே இல்லை என்று நல்லாட்சி அரசாங்கத்தின் முக்கிய பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

போர்க் குற்றம் என்ற ஒன்று இடம் பெறாததினால் சர்வதேச நீதிபதிகளுக்கும், கலப்பு நீதிமன்றத்திற்குமான அவ

24ஆம் பக்கம் பார்க்க....

## ஆபத்தான வெடிபொருட்களுடன் பிலக்குடியிருப்பு மக்கள் வாழ்வு

(பனிக்கன்குளம்)

அண்மையில் ஒருமாத கால தொடர் போராட்டத்தின் மூலம் தமது சொந்தக்காணிகளுக்குள் குடியமரச் சென்ற முல்லைத்தீவு கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்கள் தற்போது அவர்களது காணியில் ஆபத்தான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

மேற்படி விடுவிக்கப்பட்ட காணிகளில் மற்றும் கிணறுகளில் வெடிக்காத வெடிபொருட்கள் காணப்படுவதாகவும் இதனால் தமது

23ஆம் பக்கம் பார்க்க....

### துப்பாக்கிச் சூட்டில் மாணவர்கள் பலி

## மேலதிக விசாரணை அறிக்கை யாழ்.நீதிமன்றில் சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கொக்குவில் குளப்பிட்டிப் பகுதியில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பல்கலைக் கழக மாணவர்கள் இருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணை அறிக்கை யாழ் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி கொக்குவில் குளப்பிட்டிப் பகுதியால்சென்று கொண்டிருந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியிருந்

24ஆம் பக்கம் பார்க்க....

தரம் - 5
புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இன்றைய வலம்புரியில்...

மாகாண சபைகளின் அரசியல் அமைப்பு ரீதியான வரையறை

ஆறுதல் நிறுவனத்தினால் நடத்தப்பட்டு வருகின்ற கருத்தூன்றல் களத்தின் பன்னிரண்டாவது கலந்துரையாடலில் "மாகாண சபைகளின் அரசியல் அமைப்பு ரீதியான வரையறை" (Constitutional Framework of Provincial Council) என்ற தொனிப் பொருளில் வடக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தனது கருத்துக்களை முன்வைக்கவுள்ளார்.

இடம் : ஆறுதல் நிறுவனம்.
இல.51 வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
காலம் : 26.03.2017 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணி
அன்புடன் அழைக்கின்றோம்
(C-7896)
தொடர்புகளுக்கு : 021 221 7092


## முக்கிய தீர்மானம்

(கொழும்பு)

அரசியல் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த சில தீர்மானங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் மேற்கொள்ள உள்ளதாக இராஜாங்க நிதி அமைச்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதிக்கு வரலாற்றுப் பரிசு



23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கிழக்கில் டெங்கை கட்டுப்படுத்த வடக்கிலிருந்து இரு குழு விரைவு

## கிழக்கு முதலமைச்சர் நன்றி பாராட்டு

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்தில் டெங்கு நோய் தீவிரமாக பரவி வரும் நிலையில் வடக்கிலிருந்து தேர்ச்சி பெற்ற இரண்டு புகைவிசுறும் குழுவினரை அனுப்பியமைக்காக கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர அஹமட்டினால், வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் சுகாதார அமைச்சர் மருத்துவர் பா.சத்தியலிங்கம் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள இடங்களுக்கு இந்தக் குழுவினர் வடக்கிலிருந்து பயணிக்கவுள்ளதுடன் அங்கு இவர்கள் புகைவிசுறும் நடவடிக்கையினை முன்னெடுக்கவுள்ளனர்.

அண்மையில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம் நசீர் மற்றும் வட மாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கத்துக்குமிடையில் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது,

கிழக்கு மற்றும் வட மாகாண சுகாதாரத் துறைசார் அதிகாரிகள் இணைந்து டெங்கு ஒழிப்பு தொடர்பான தமது நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளனர்.

கிளிநொச்சியில் டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்பட்ட நிலையில் அதனை வெற்றிகரமாக கட்டுப்படுத்திய நிபுணத்துவம் மிக்க புகைவிசுறும் நடவடிக்கைகளை இந்தக் குழுவினர் முன்னெடுத்துள்ள விடயம் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இதேபோன்று கிழக்கில் வேகமாக டெங்கு பரவுவதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு வட மாகாண புகைவிசுறும் குழுவின் நடவடிக்கை பாரிய தூண்டு கோலாய் அமையும் என கிழக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்

சிறுபான்மையினரை பெரும்பான்மையாகக் கொண்ட மாகாண சபைகள் இரண்டும் ஒன்றிணைந்து செயற்படுவது சிறுபான்மை சமூகங்களுக்கே முன்னுதாரணமாக அமைந்துள்ளதுடன் சிறுபான்மை சமூகங்களின் இந்த நடவடிக்கையில் பெரும்பான்மை சமூகம் பாடம் கற்கவேண்டிய நிறைய விடயங்கள் உள்ளதாகவும் கிழக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்,

இரு மாகாண சபைகளுக்குமிடையேயான நல்லுறவு இரு மாகாணங்களில் வாழும் மக்களுக்கு பாரிய நன்மையாக அமைவதுடன் சிறுபான்மையினரின் உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கான பயணத்தில் பாரிய உந்து சக்தியாக அமைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார், -

கிழக்கு மாகாண மக்களுக்கு நெருக்கடியான தருணத்தில் உதவ முன்வந்த வட மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், வட மாகாண சுகாதார அமைச்சர் பா. சத்தியலிங்கம் மற்றும் வட மாகாண சபை உறுப்பினர்களுக்கு கிழக்கு முதலமைச்சர் நசீர் அஹமட் கிழக்கு மாகாண சபை சார்பாக தமது நன்றிகளையும் இதன் போது தெரிவித்துக் கொண்டார். (செ-9)

# சட்டவிரோத மணல் அகழ்வு; கைப்பற்றப்பட்டது ஹன்ரர்


(சாவகச்சேரி)

வறணி இயற்றாலைப் பகுதியில் சட்ட விரோதமாக மணல் ஏற்றிக் கொண்டு செல்ல முயற்சித்த ஹன்ரர் வாகனம் ஒன்று கொடிகாமம் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளது.

நேற்று இரவு 8 மணியளவில் வறணி இயற்றாலைப் பகுதியில் மணல் கொள்ளை இடம்பெறுவதாக கொடிகாமம் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து குறித்த பகுதியை பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர். இதன்போது மணல் கடத்தலில் ஈடுபட்டவர்கள் மணல் ஏற்றிக் கொண்டிருந்த தமது வாகனத்தை கைவிட்டு விட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இந்நிலையில் வாகனத்தின் உரிமையாளர் யார் என்பதைக் கொண்டு கடத்தலில்



ஈடுபட்டவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். மேலும் இந்த மாதத்தில் மட்டும் அப்பகுதியில் மூன்று மணல் கடத்தல்கள் முறியடிக்கப்பட்டதாக கொடிகாமம் பொலிஸார் தகவல் வெளியிட்டனர். (செ-89)

# இலங்கையில் இறைச்சிக்காக பல இலட்சம் உயிர்க் கொலை

## கிராமிய பொருளாதார அமைச்சு தகவல்

இலங்கையில் வருடமொன்றுக்கு 50 ஆயிரம் ஆடுகளும் ஓர் இலட்சத்து 67 ஆயிரம் மாடுகளும் 13 கோடியே 20 இலட்சம் கோழிகளும் இறைச்சிக்காக கொல்லப்படுகின்றன என்று கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு தகவல் வெளியிட்டது.

அத்தோடு பொதுநுகர்வுக்காக மட்டும் 31 ஆயிரத்து 625 மெட்ரிக்தொன் எடையிலான மாட்டிறைச்சியும் ஓர் இலட்சத்து 65 ஆயிரம் மெட்ரிக் தொன் அளவிலான கோழியிறைச்சியும் வருடமொன்றுக்கு தேவைப்படுகின்றது என்றும் அமைச்சு குறிப்பிட்டது.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போது ஆளும்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரான புத்திக பத்திரண, இலங்கையில் வருடாந்த நுகர்வுகளுக்காக தேவைப்படும் இறைச்சி வகைகளின் தொகை, இறக்குமதி செய்யப்படுகின்ற நாடுகள், இறைச்சி ஏற்றுமதி செய்யப்படும் தொகை, இதற்காக கொல்லப்படுகின்ற மிருகங்களின் எண்ணிக்கை, இவற்றின் ஊடாக நாட்டுக்கு கிடைக்கும் வருமானம் என்பன தொடர்பில் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சிடம் கேள்விகளை முன்வைத்திருந்தார்.

இதற்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்ட தரவுகளை மேற்படி அமைச்சு வெளியிட்டது. அதாவது ஆண்டொன்றுக்கு நுகர்வுக்காக மட்டும் ஆயிரத்து 696 மெட்ரிக் தொன் ஆட்டிறைச்சியும் ஓர் இலட்சத்து 65 ஆயிரம் மெட்ரிக் தொன் அளவிலான கோழி இறைச்சியும் 131 மெட்ரிக் தொன் செம்மறி ஆட்டிறைச்சியும் 31 ஆயிரத்து 625 மெட்ரிக் தொன் மாட்டிறைச்சியும் தேவைப்படுகின்றது.

இந்த அளவுக்கு இறைச்சியை உற்பத்தி செய்யும் ஆற்றல் இலங்கையில் இல்லாத காரணத்தினால் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளிடமிருந்து 297 மெட்ரிக்தொன் ஆட்டிறைச்சியும் 131 மெட்ரிக் தொன் அளவில் செம்மறி ஆட்டிறைச்சியும் 85 மெட்ரிக்தொன் அளவிலான மாட்டிறைச்சியும் 2016ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்டது.

அதேநேரம் 0.008 மெட்ரிக்தொன் ஆட்டிறைச்சியும் ஆயிரத்து 473 மெட்ரிக்தொன் கோழியிறைச்சியும் 67 மெட்ரிக் தொன் மாட்டிறைச்சியும் கடந்த வருடத்தில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்யப்பட்டது. இதன் ஊடாக மட்டும் ரூபாய் 166.9 மில்லியன் வருமானம் நாட்டுக்கு கிடைத்தது.

இவ்வாறான செயற்பாடுகளுக்காக வருடாந்தம் 50 ஆயிரம் ஆடுகளும் ஓர் இலட்சத்து 67 ஆயிரம் மாடுகளும் 13 கோடியே 20 இலட்சம் கோழிகளும் கொல்லப்படுகின்றன என்று அமைச்சு தகவல் வெளியிட்டது. (செ-11)


**கணிப்பீட்டறிக்கை, தேர்ச்சியறிக்கை**

பாடசாலை அதிபர்களுக்கு, மாணவர் கணிப்பீட்டறிக்கை தேர்ச்சியறிக்கை தரம் 01 முதல் 11 வரை வெளிவந்துவிட்டது. எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். **தயா அச்சகம்** 575, கே.கே.எஸ் வீதி, (நாச்சிமார் கோவிலடி) யாழ்ப்பாணம். T.P:-0773965214. (8396)


## சிறுவர் நிகழ்வு

கொக்குவில் பொது நூலகத்தால் வாராந்தம் நடைபெறும் சிறுவர்களுக்கான நிகழ்வும் கலந்துரையாடலும் இன்று மாலை 3 மணிக்கு கொக்குவில் பொது நூலகத்தில் நடைபெறவுள்ளதால் சிறுவர் வட்ட அங்கத்தவர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (செ-9)

## குடும்பஸ்தர் காயம்

வீதிக்கு குறுக்காக திடீரென வயோதிபப் பெண் ஒருவர் பயணிக்க முற்பட்ட வேளை அவ்வீதியால் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் ஏ9 வீதி - கிளிநொச்சி நகருக்கும் முறிகண்டிக்கும் இடைப்பட்ட பகுதியில் நடைபெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி சண்முகம் (வயது-68) என்பவரே படுகாயமடைந்தவராவார். (செ-30)


**கண்ணீர் அஞ்சலி**



திரு.முத்துக்குமாரு சோமசுந்தரம்

எமது பாடசாலை அதிபர் திருமதி கமலராணி சிவராஜா அவர்களின் அன்பு மாமனார் திரு.முத்துக்குமாரு சோமசுந்தரம் அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டுத் துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவர்களின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/செட்டித்தெரு மெ.மி.த.க பாடசாலை (C-7897) பாடசாலைச் சமூகம்



**யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்கம்**

**28வது வருடாந்த பொதுக்கூட்டம்**

தலைவர் : Prof. சி. சிறிசற்குணராஜா
இடம் : யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி (பேராசிரியர் அ. துரைராசா மண்டபம்)
காலம் : 26.03.2017 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணி

**நிகழ்ச்சி நிரல்**

01. மங்கல விளக்கேற்றல்
02. இறைவணக்கம்
03. கூட்டத்தை கூட்டும் அறிவிப்பு
04. தலைமையுரை
05. அதிபர் உரை
06. 27வது வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கை
07. செயலாளர் ஆண்டறிக்கை
08. நுண்கலைமன்றச் செயலாளர் அறிக்கை
09. பொருளாளர் அறிக்கை
10. பிரேரணைகள்
11. புதிய ஆண்டுக்கான செயற்குழு தெரிவு
12. பொதுச்சபையின் கருத்து
13. புதிய ஆண்டுக்கான செயற்றிட்டங்கள்
14. நன்றியுரை

பழைய மாணவர் சங்கம்
யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி
வல்வெட்டித்துறை. (C-7894)

பொ. குகதாஸ்
செயலாளர்



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




எங்கள் இனிய நண்பர் திரு. சி. சிதம்பரநாதன் அவர்களின் அன்பு மகள்

செல்வி

**சி. இலக்கியா**

The Sustainabilitv Research Network USA எனும் நிறுவனத்தால் சர்வதேச அளவில் நடத்தப்பட்ட "போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இரசாயன தாக்கங்களும் தீர்வுகளும்" எனும் ஆய்வுக் கட்டுரை போட்டியில் முதலிடம் பெற்று கௌரவிக்கப்பட்டமைக்காக பாராட்டுவதுடன் இவர் மேலும் பல சாதனைகள் புரிந்து உயர்ந்திட வாழ்த்துகிறோம்.

ச. பாலச்சந்திரன், நா. கிருஷ்ணமூர்த்தி, ஆ. சங்கர் கட். நெல்.ப.நோ.கூ. சங்கம், கரவெட்டி.

ழ்ப்பாண பொதுநூலகம்



# வடக்கு முதலமைச்சருக்கு கிழக்கு முதலமைச்சர் நன்றி

கிழக்கில் டெங்கு நோய் தீவிரமாக பரவி வரும் நிலையில் வடக்கிலிருந்து தேர்ச்சி பெற்ற இரண்டு புகைவிசிறும் குழுவினரை அனுப்பியமைக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் வடமாகாண முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரனுக்கும் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்திற்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள இடங்களுக்கு இந்தக் குழுவினர் பயணிக்கவுள்ளதுடன் அங்கு இவர்கள் புகைவிசிறும் நடவடிக்கையினை முன்னெடுக்க உள்ளனர்.

அண்மையில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம்.நசீர் மற்றும் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்துக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

கிளிநொச்சியில் டெங்கு நோய் பரவும் அபாயம் இருந்த நிலையில் அதனை வெற்றிகரமாக கட்டுப்படுத்தி நிபுணத்துவம் மிக்க புகைவிசிறும் நடவடிக்கைகளை இந்தக் குழுவினர் முன்னெடுத்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

அந்த வகையில் கிழக்கில் டெங்கு பரவுவதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு வடமாகாண புகைவிசிறும் குழுவின் நடவடிக்கை பாரிய தூண்டுகோலாய் அமையும் என கிழக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்

இரு மாகாண சபைகளுக்குமிடையேயான நல்லுறவு இரு மாகாணங்களில் வாழும் மக்களுக்கு பாரிய நன்மையாக அமைவதுடன் சிறுபான்மையினரின் உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கான பயணத்தில் பாரிய உந்துசக்தியாக அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண மக்களுக்கு நெருக்கடியான தருணத்தில் உதவ முன்வந்த வட மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் மற்றும் வட மாகாண சபை உறுப்பினர்களுக்கு கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் கிழக்கு மாகாண சபை சார்பாக தமது நன்றிகளை தெரிவித்துக்கொண்டுள்ளார். (இ-7)

## விமலின் உண்ணாவிரதம் நேற்றும் தொடர்ந்தது

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்சவின் உண்ணாவிரதம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது. விமல் வீரவன்ச கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்திருந்தார்.

70 நாட்கள் கடந்த நிலையிலும் தன்னுடைய பிணை மனுவை நிராகரித்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து. மூன்று வேளை உணவையும் தவிர்த்து குறித்த உண்ணாவிரதத்தை முன்னெடுப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

தனது போராட்டத்திற்கு தீர்வு வழங்கும் வரை "சாகும் வரை" உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக நேற்று முன்தினம் அறிவித்திருந்தார்.

அரசவாகனங்களை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டுக்காக விமல் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார். மேலும், இவரை எதிர் வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




# மனித உரிமைகள் விவகாரத்தில் சர்வதேச தலையீடு தேவையற்றது

## இலங்கை அரசு கூறுகிறது




நாட்டின் மனித உரிமை சம்பந்தமாக தேடிப்பார்ப்பத ற்கு விசேட பிரதிநிதியொருவரை நியமிக்குமாறு ரியர் எட்மிரல் சரத் வீரசேகரவி னால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் கவ லையடைவதாக அமைச்சர் மகிந்த அமரவீர கூறினார்.

ஜெனிவாவில் இடம்பெறு கின்ற மனித உரிமைகள் கூட்டத் தொடரில் சரத் வீரசேகர இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

நாட்டின் மனித உரிமை விவகாரம் சம்பந்தமாக தேடிப்பார்ப்பதற்கு சர்வதேச தலையீடுகள் தேவையற்றது என்று அமைச்சர் மகிந்த அமரவீர கூறியுள்ளார்.

மனித உரிமை விவகாரம் சம்பந்தமாக நாட்டுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் இருப்பின் அது தொடர்பில் உள்நாட்டு பொறிமுறை ஒன்றினால் விசாரணை செய்ய முடியும் என்று அவர் கூறியுள்ளார். (இ-3)

# சர்வதேச நீதிபதிகளை அழைக்கும் ஒரே நாடு இலங்கையே- மகிந்த




(கொழும்பு)

யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள சர்வதேச நீதிபதிகளை அழைக்கும் ஒரே நாடு இலங்கையாகவே இருக்க வேண்டும் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பொரளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார். எவ்வாறாயினும், இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவை வலியுறுத்தி வருகின்றது.

இருப்பினும், சர்வதேச நீதிபதிகள் விசாரணை மேற்கொள்வது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் மறுப்பு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நிலையான அபிவிருத்தி பேரவை அமைக்க நடவடிக்கை - பிரதமர்



நிலையான அபிவிருத்தி பேரவையை அமைப்பதற் கான சட்டமூலத்தை இல ங்கை தயாரித்திருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவது தொடர்பான வேலைத்திட்ட ங்கள் பற்றி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான செயலமர்வு பாராளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே பிரதமர் இதனை தெரிவித்தார்.

கனடாவின் சட்டத்தின் போது கவனத்தில் கொள்ளப்படவிருக்கிறது. இந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கான முறையான பொறி முறைகள் இலங்கையிடம் காணப்படுவதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# இராசி பலன்

24.03.2017
(பங்குனி 11, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு
ஏகாதசி முற்பகல் 11.53 மணிவரை
திருவோணம் பிற்பகல் 2.50 மணிவரை
சுபநேரம் 6.16-7.46 மணிவரை
இராகுகாலம் 10.46-12.16 மணிவரை
உலக காசநோய் தினம்
ஏகாதசி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத, சுக் | செவ் | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>புனர்பூசம், பூசம்<br>இரவு 3.01 மணிக்கு<br>கும்-சந் | | |
| சந் | | | ராகு |
| | சனி | | குரு |

**மேடம்** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்** வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், சுபகாரியங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, உறவினர்களின் வருகையுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மிதுனம்** நட்பு பகையாகாதிருக்க கவனம் தேவை, உடல் நலனில் கவனம் தேவை, தொழில் வளர்ச்சியில் சிறுசிறு தடைகள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்** களஸ்திர நன்மையுண்டு, எண்ணிய காரியம் கைகூடும் வாய்ப்புண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், போசன சுகமுண்டு.

**சிம்மம்** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், மறைமுகப் போட்டிகள் மாறும், செய் தொழில் மேன்மையுண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், எதிர் பார்த்த தன வரவுகள் வந்து சேரலாம், பொதுநல ஈடுபாடு கூடும் நாள், பூர்வீக சொத்துக்களால் ஆதாயம் உண்டு.

**துலாம்** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள்.

**விருச்சிகம்** இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**தனுசு** புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், உங்கள் கருத்துக்களை பலரும் கேட்டு நடப்பர்.

**மகரம்** மன அமைதி கூட மகத்தான வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கலாம், போசன நன்மையுண்டு.

**கும்பம்** குடும்ப பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயனசுகக் குறைவான நாள்.

**மீனம்** ஆடம்பரம் பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, செல்வாக்கு மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு, போசன நன்மையுண்டு, குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

# தரம்சாலா டெஸ்டில் ஹோலி விளையாடுவது சந்தேகம்?



இந்திய அணியில் ஷ்ரேயாஸ் அய்யர் அவசரமாக அழைக்கப்பட்டுள்ளார். இதனால் தரம்சாலா டெஸ்டில் விராட் ஹோலி விளையாடுவது சந்தேகமாகியுள்ளது.

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. மூன்று போட்டிகள் முடிந்த நிலையில் 1-1 என தொடர் சமநிலையில் உள்ளது.

போட்டியை தீர்மானிக்கும் 4-வது மற்றும் கடைசி போட்டி தரம்சாலாவில் 25-ந் திகதி (சனிக்கிழமை) நடக்கிறது. ராஞ்சியில் நடைபெற்ற 3-வது போட்டியின்போது இந்திய அணி தலைவர் விராட் ஹோலியின் தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. இந்த காயம் இன்னும் சரியாகவில்லை என்று தெரிகிறது.

இதை உறுதிப்படுத்தும் வகையில் தரம்சாலாவில் நேற்று நடைபெற்ற பயிற்சியில் விராட் ஹோலி ஈடுபடவில்லை. உடற்தகுதி இருந்தால் மட்டுமே அணியில் விளையாட முடியும். இதனால் ஷ்ரேயாஸ் அய்யர் இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். இவர் தரம்சாலாவிற்கு இன்று விரைகிறார்.

இதனால் விராட் ஹோலி தரம்சாலா போட்டியில் விளையாடுவது சந்தேகம் என தெரிய வருகிறது. (க)

# நியூசிலாந்து டெஸ்ட் அணியிலிருந்து போல்ட், சவுத்தி நீக்கப்பட்டுள்ளனர்



காயம் காரணமாக தென்னாபிரிக்காவிற்கு எதிரான கடைசி டெஸ்டில் இருந்து நியூசிலாந்து அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களான சவுத்தி மற்றும் போல்ட் நீக்கப்பட்டுள்ளனர்.

நியூசிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் டெஸ்ட் சமநிலையில் முடிந்தது 2வது டெஸ்டில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றது.


இதனால் மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் தென்னாபிரிக்கா 1-0 என முன்னிலையில் உள்ளது. இந்நிலையில் 25-ந் திகதி (சனிக்கிழமை) 3-வது மற்றும் கடைசி டெஸ்டில் வெற்றி பெற்றால்தான் தொடரை சமன் செய்ய முடியும். இல்லையெனில் சொந்த மண்ணில் தொடரை இழக்க வேண்டும் என்ற நிலையில். வெற்றி பெற்றே தீரவேண்டும் என்ற நோக்கத்தில் நியூசிலாந்து அணி வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த அணியின் முன்னணி வேகபந்து வீச்சாளரான ட்ரெண்ட் போல்ட் காயம் காரணமாக 2-வது போட்டியில் விளையாடவில்லை. இதனால் டிம் சவுத்தி அணியில் இடம்பிடித்தார். தற்போது பயிற்சியின்போது டிம் சவுத்திக்கு காயம் ஏற்பட்டுள்ளதால் 3-வது டெஸ்டில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். இந்த செய்தி நியூசிலாந்து அணிக்கு பெரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

அந்த அணியில் நீல் வாக்னர், மேட் ஹென்றி, கொலின் டி கிராண்ட்ஹோம், ஜிம்மி நீஷம் ஆகிய நான்கு வேகப்பந்து வீச்சாளர்கள் உள்ளனர். இவர்களில் மூன்று பேர் 3-வது போட்டியில் களம் இறங்குவார்கள். இதில் நீல் வாக்னர், மேட் ஹென்றி ஆகியோர் கடந்த இரண்டு போட்டிகளில் இடம்பெறவில்லை.

அதேபோல் தென்னாப்பிரிக்கா அணியின் விக்கெட் காப்பளர் டி கொக்கும் காயத்தால் அவதிப்பட்டு வருகிறார். அவர் அணியில் இடம்பெறுவாரா? என்பது குறித்து இன்னும் அதிகாரப்பூர்வ தகவலை அந்த அணி வெளியிடவில்லை. (க)

# 2019 இல் உலகக்கிண்ணம்; தோனியின் அதிரடிப் பதில்




இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், நட்சத்திர வீரருமான தோனி தனது எதிர்கால திட்டம் குறித்து பரபரப்பு பேட்டியளித்துள்ளார்.

சமீபத்தில் அணித்தலைவர் பதவியிலிருந்து விலகிய தோனி 2019 உலக கிண்ணம் வரை நீடிப்பாரா என்ற கேள்வி நிலவி வந்த நிலையில், தோனி தனது எதிர்கால திட்டத்தை வெளிப்படுத்தி ரசிகர்களுக்கு நிம்மதி அளித்துள்ளார்.

ஒரு தனியார் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட தோனி 2019 உலக கிண்ணம் குறித்த கேள்விக்கு பதிலளித்ததாவது.

எல்லாம் தனது திட்டத்தின் படி நடந்தால், 2019 உலக கிண்ணத்தில் பங்கேற்பேன் என்ற நம்பிக்கை உள்ளதாக தெரிவித்துள்ளார். (5)

# துப்பாக்கி சுடும் போட்டி இந்திய வீரர் தங்கம்



மெக்சிகோவில் நடைபெற்று வரும் உலகக்கோப்பை துப்பாக்கி சுடும் போட்டியில் இந்திய வீரர் அங்கூர் மிட்டல் உலக சாதனையுடன் தங்க பதக்கம் வென்றார்.

மெக்சிகோவின் அகாபுல்கோவில் உலகக்கோப்பை துப்பாக்கி சுடும் போட்டி நடைபெற்று வருகிறது. ஆண்களுக்கான டபுள் ட்ரப் போட்டியில் இந்தியாவின் அங்கூர் மிட்டல் தங்க பதக்கம் வென்று அசத்தினார்.

6 பேர் பங்கேற்ற இறுதிப் போட்டியில் 80 புள்ளிகளுக்கு 75 புள்ளிகள் பெற்று முதல் இடம் பிடித்தார். அவுஸ்திரேலியாவின் வில்லெட் வெள்ளி பதக்கமும், சீனாவி யிங் வெண்கல பதக்கமும் வென்றார்.

சமீபத்தில் டெல்லியில் நடைபெற்ற துப்பாக்கி சூட்டில் வில்லெட் தங்கமும், அங்கூர் வெள்ளி பதக்கமும் வென்றிருந்தனர். தற்போது அங்கூர் தங்க பதக்கமும் வென்றதுடன், 75 புள்ளிளுடன் உலக சாதனையும் படைத்து அசத்தியுள்ளார்.

தகுதிச் சுற்றில் 150-க்கு 138 புள்ளிகள் பெற்று 2-வது இடம் பிடித்திருந்தார். (க)

# சம்பியனாக முடிசூடிய இலங்கை



மொரிஷியஸ் நாட்டில் இடம் பெற்ற சர்வதேச கடற்கரை கபடி தொடரின் இறுதிப்போட்டியில் ஓமான் அணியை வீழ்த்தி இலங்கை அணி சம்பியனாக முடிசூடியுள்ளது.

மொரிஷியஸ் நாட்டில் சர்வதேச கடற்கரை போட்டித் தொடர் நடைபெற்றது. இதில் இந்தியா, இலங்கை, ஓமான் உட்பட ஆறு நாடுகள் பங்கேற்றது. தலைநகர் போட் லொய்ஸ் நகரில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் இலங்கை - ஓமான் அணிகள் மோதின.

இதில் இலங்கை அணி ஓமான் அணியை வீழ்த்தி சம்பியனாக முடிசூடி தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது.

வெற்றிபெற்ற இலங்கை கபடி அணிக்கு பிரதி அமைச்சர் ஹரீஸ், மொரீஷியஸ் நாட்டு உப ஜனாதிபதியினால் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது. (5)

# இரு வருட அவகாசம்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 34வது கூட்டத் தொடர் ஜெனிவாவில் இடம்பெற்று வருகின்ற நிலையில், இலங்கைக்கு இரண்டுவருட கால அவகாசம் வழங்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறித்த தீர்மானத்தை மொண்டெனேகுரோவுடன் இணைந்து அமெரிக்கா சமர்பித்துள்ளது.

இதற்கு பிரித்தானியா, மெஸிடோனியா, அயர்லாந்து ஆகிய நாடுகள் பிரதான அனுசரணை வழங்கியிருப்பதோடு இம்முறையும் இலங்கை இத்தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கியுள்ளது.

நல்லிணக்க செயற்பாடுகளை மேலும் வலுப்படுத்தல், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமை காப்பு விடயங்கள் என்பன தொடர்பாக 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக அமுல்படுத்த இரண்டுவருட கால அவகாசத்தை இலங்கை அரசாங்கம் கோரியிருந்தது.

எனினும் கலப்பு நீதிமன்றமோ அல்லது சர்வதேச நீதிபதிகள் விடயமோ உள்வாங்கப்பட மாட்டாது என்றும் இலங்கை அரசாங்கம் குறிப்பிட்டிருந்தது.

இந்த நிலையில் கால அவகாசம் வழங்குவதற்காக ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் யோசனை சமர்பிக்கப்பட்ட நிலையில் நேற்று வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த தீர்மானத்துக்கு இலங்கை உள்ளிட்ட 36 நாடுகள் இணை அனுசரணை வழங்கியிருந்தன.

இந்த தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாக விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது.

தீர்மானத்தை முன்வைத்த நாடுகளின் சார்பில் அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் உரையாற்றினர். இந்த தீர்மானம் மூலம் இலங்கைக்கு 2 ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்படுவதாகவும், நீதியை நிலைநாட்டுவதற்கு அதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அமெரிக்கப் பிரதிநிதி வலியுறுத்தினார்.

பிரித்தானியப் பிரதிநிதி பேசியபோது, 31/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கிடைத்துள்ள 24 மாத வாய்ப்பை இலங்கை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அத்துடன் இலங்கைக்கு தொடர்ந்து ஒத்துழைப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதையடுத்து, இலங்கையின் சார்பில் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷ டி சில்வா உரையாற்றினார். அவர் இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும், ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகத்துடன் இணைந்து செயற்படும் என்று உறுதியளித்தார்.

இதையடுத்து, தீர்மானத்தில் திருத்தங்கள் முன்வைப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. எந்த திருத்தமும் முன்வைக்கப்படாத நிலையில், வாக்கெடுப்பு நடத்தும் கோரிக்கை இருக்கிறதா என்று பேரவைத் தலைவர் கோரினார்.

எனினும் எந்த நாடும் வாக்கெடுப்பு நடத்தக் கோராத நிலையில், தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப் பட்டது. இதைத்தொடர்ந்து

இலங்கை தொடர்பான தீர்மானத்தை 2018ஆம் மற்றும் 2019 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் அமுல்படுத்துவதற்கு 3 இலட்சத்து 62 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அலுவலகம் தெரிவித்துள்ளது. (செ-11)

# இலங்கை நீதிமன்றத்தில் நீதிக்கு வாய்ப்பு இல்லை

## செல்வம் எம்.பி ஜெனிவாவில் பேச்சு

(ஜெனிவா)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின்போது நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்களை உள்ளூர் நீதிமன்றத்தில் விசாரித்தால் நீதியை எதிர்பார்க்கமுடியாது என நாடாளுமன்ற குழுக்களின் தலைவரும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் கடந்த 2015-ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டபடி, போர்க்குற்ற விசாரணைக்கு சர்வதேச நீதிபதிகள் கொண்ட கலப்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்திருந்தார். இந்த ஆண்டு தற்போது நடைபெறும் வருடாந்த மனித உரிமை ஆணையக கூட்டத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை பேசும்போதும் அவர் அந்தக் கருத்தை வலியுறுத்தினார். பல்வேறு உலக நாடுகளும் அதே கருத்தை வலியுறுத்தியுள்ளன.

இந் நிலையில், இது தொடர்பாக ஊடகங்களுக்கு பேட்டியளித்த செல்வம் அடைக்கலநாதன், "போர்க் குற்றங்களை விசாரிக்க அரசு எந்த வித நடவடிக்கையையும் எடுக்காத சூழல்தான் இலங்கையில் உள்ளது. உள்ளூர் நீதிபதிகளை கொண்டு போர்க் குற்றங்களை விசாரிப்பதாக அரசு சொல்வதில் எந்தவித நம்பிக்கையும் இல்லை," என்றார்.

"நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் மீது ஆதாரம் இருந்தும் அவர்கள் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டது போல பல விஷயங்களை எங்களால் சொல்ல முடியும். உள்ளூர் நீதிமன்றங்களில் நீதியை எதிர்பார்க்க முடியாது என்பதால்தான் கலப்பு நீதிமன்றம் தேவை என்பதை நாங்கள் வலியுறுத்துகின்றோம்." என்றார் செல்வம் அடைக்கலநாதன்.

சமீபத்தில் வெளியுறவு துறை கலப்பு நீதிமன்றம் அமைப்பதற்கான வசதிஅரசியலமைப்பில்இல்லை என்று தெரிவித்துள்ளது பற்றிய கேள்விக்கு, "முதலில் ஐ.நா.சர்வதேச நீதிபதிகள் கொண்ட அமர்வு போர் குற்றங்களை விசாரிக்க வேண்டும் என்று கூறியபோது அரசு அதை எதிர்க்கவில்லை. அப்போது இது போன்ற காரணங்களை கூறவில்லை, ஐநாவின் தீர்மானத்தை ஏற்று அதை நடத்துவதாக ஒத்துக்கொண்டது. தற்போது புதிது புதிதாக காரணங்களை தேடுகிறது." என அவர் பதில் தெரிவித்தார். (செ-11)

புதிய

LINK NATURAL

# கேஷா

Extra Rich

மூலிகைக் கூந்தல் தைலம்

8 மூலிகைச் சாறு



தேங்காய் எண்ணெய் கோஷ்டம் பொன்னாங்கணி கரிசலாங்கண்ணி வல்லாரை நீலஅவுரி நெல்லி மஞ்சாடி வெட்டிவேர்

## அம்மாவின் பாசப்பரிவின் பராமரிப்பு

8 மூலிகைகளினதும் தூய தேங்காய் எண்ணெயினதும் குணநலம் மற்றும் விட்டமின் ஈ குணாம்சங்கள் அடங்கிய லிங்க் கேஷா, கூந்தலுக்கு போசாக்கூட்டி உங்களுக்கு ஆரோக்கியமான மற்றும் பொலிவான கூந்தலை வழங்கிடும்.

Kesha Jasmine Extra Rich

ரூ.150/-

லிங்க் நெச்சுரல் புரொடக்ட்ஸ் (பிரைவேட்) லிமி.,
தொலைபேசி: +94 11 240 9294 வெப்: www.linknaturalproducts.com

(I-078)





## கச்சேரி நல்லூர் வீதி, பாணன்குளம் நாச்சி அம்மன் ஆலய

# வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்-2017

அம்பிகை அடியார்களே!

நிகழும் மங்களகரமான துர்முகி வருடம் பங்குனி திங்கள் 15 ஆம் நாள் (28.03.2017) செவ்வாய்க்கிழமை முதல் பங்குனித்திங்கள் 29 ஆம் நாள் (11.04.2017) செவ்வாய்க்கிழமை வரையான (15) பதினைந்து தினங்கள் மஹோற்சவ விழாவும் தொடர்ந்து பூங்காவனம், வைரவர் சாந்தி, ஏவிளம்பி வருஷ திருவிழா என்பனவும் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. திருவிழா காலத்தில் அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தந்து அம்பிகையை வணங்கி அருளைப் பெறுவீர்களாக.

## கிரியா கால நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 28.03.2017(செவ்வாய்க்கிழமை) | முற்பகல் 10.00 மணி |
| தினசரி உற்சவம் | | காலை 7.30 மணிக்கு அபிஷேக ஆரம்பம் |
| | | காலை 9.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை |
| | | மாலை 5.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை |
| வேணுகோபாலர் உற்சவம் | 08.04.2017 | காலை 6.00 மணி |
| | சனிக்கிழமை | |
| சப்பற உற்சவம் | 09.04.2017 | காலை 9.30 மணிக்கு கர்ப்பூரச்சட்டி வழிபாடு |
| | ஞாயிற்றுக்கிழமை | மாலை 6.00 மணி சப்பறத்திருவிழா |
| தேர் உற்சவம் | 10.04.2017 | காலை 7.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை |
| | திங்கட்கிழமை | காலை 8.00 மணி அம்பாள் தேரில் ஆரோகணித்தல் |
| | | முற்பகல் 10.30 மணிக்கு தேரால் அவரோகணித்தல் |
| | | தொடர்ந்து நவசக்தி அர்ச்சனையும் பிராயச்சித்த அபிஷேகமும் |
| | | மாலை 3.30 மணிக்கு திருவிளக்கு பூஜையும் மாலைத்திருவிழாவும் |
| தீர்த்தோற்சவம் | 11.04.2017 | காலை 9.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை |
| | செவ்வாய்க்கிழமை | தொடர்ந்து தீர்த்தோற்சவம் |
| | | மாலை 5.30 மணிக்கு கொடியிறக்கம், |
| | | சண்டேஸ்வரர் உற்சவம் |
| | | தொடர்ந்து ஆச்சாரிய சம்பாவனை |
| பிராயச்சித்த அபிஷேகம் | 12.04.2017 | காலை 7.00 மணி |
| பூங்காவனம் | புதன்கிழமை | மாலை 4.30 மணிக்கு அபிஷேகப் பூஜையும் |
| | | தொடர்ந்து திருவூஞ்சலும் |
| | | பூந்தண்டிகை திருவிழாவும் நடைபெறும். |
| வைரவர் உற்சவம் | 13.04.2017 | மாலை 5.00 மணி |
| | வியாழக்கிழமை | மாலை 6.00 மணி |
| ஏவிளம்பி வருடத்திருவிழா | வெள்ளிக்கிழமை | |

(த-7893)

கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் — ஆலய பரிபாலன சபை



## சீ பேங்க் சேவிங்க்ஸ் ப்ளஸ் நிதியம்

# உங்கள் சேமிப்புக்கு கவர்ச்சிகரமான வருவாய்

# 10.7% (P:A) சீ பேங்க் சேவிங்க்ஸ் ப்ளஸ்

வருடாந்த மொத்த விளைவு (28 பெப்பிரவரி 2017 இல்)

- பாரம்பரிய சேமிப்புக் கணக்கினை விட மேலதிக விளைவுகள்
- வரி இலவச விளைவுகள்
- பணத்தினை இலகுவாக மீளப்பெறும் வசதி

மேலதிக தகவலுக்கு

குமுது 071 066 2007 சுபாஷினி 071 066 2077

பொறுப்பாளர் NSB — பங்குதாரர் BANK OF CEYLON BOC Bankers to the Nation, Sri Lanka Insurance, Carson Cumberbatch PLC, uti

Ceybank ASSET MANAGEMENT LTD
54/C1, வோர்ட் பிலேஸ்,
கொழும்பு 07.
வெப்: www.ceybank.com
ஈ மெயில்: info@ceybank.com

*தற்போதய வருடாந்த வருவாய் விகிதம் சந்தை நிலைமைகளுக்கேற்ப எதிர்காலத்தில் மாற்றமடையலாம். கடந்த கால வருவாய் வீதங்கள், எதிர்கால வருமானங்களுக்கான குறிகாட்டி அல்ல.

(I-077)




வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் உள்ள சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான நியமனக்கடிதங்களை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று முன்தினம் அவரது அலுவலகத்தில் வைத்து வழங்கி வைத்தார். வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் காணப்பட்ட சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கான 7 வெற்றிடங்களை நிரப்புவதற்காக வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் கடந்த 27 ஆம் திகதி போட்டிப்பரீட்சை நடத்தப்பட்டது. அதன் பின்னர் நடைபெற்ற நேர்முகத்தேர்வின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக்கடிதங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் முதலமைச்சரின் அமைச்சின் செயலாளர் திருமதி.வி.கேதீஸ்வரன், அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர் ஜோ.லோரன்ஸ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர். (படங்கள்: பொ.சோபிகா)

# யாழ்.நகர தந்திரோபாய திட்டத்திற்கு நிதியுதவி வழங்க உலக வங்கி சம்மதம்

## வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ். நகர தந்திரோபாய நடவடிக்கை எனும் திட்டத்துக்கு நிதியுதவி வழங்க உலக வங்கி சம்மதம் தெரிவித்துள்ளதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கும் வடமாகாண முதலமைச்சருக்கும் இடையிலான திடீர் சந்திப்பொன்று கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

உலக வங்கியின் 55 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியின் கீழ் 5 வருடத்தில் முன்னெடுக்கப்படவுள்ள யாழ். நகர தந்திரோபாய நடவடிக்கை என்னும் திட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்படயிருந்தது. இது தொடர்பிலான கலந்துரையாடலே நேற்று முன்தினம் இடம்பெற்றது.

குறித்த திட்டத்தின் கீழ் பருத்தித்துறை- கொடிகாமம், பொன்னாலை-காரைநகர் ஆகிய வீதிகள் புனரமைக்கப்படவுள்ளதுடன், யாழ்ப்பாணம் பழைய பூங்கா, யாழ். மந்திரிமனை ஆகியன பழைமை மாறாது புனரமைக்கப்படவுள்ளன.

மேலும்; யாழில் உள்ள குளங்கள் புனரமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்கலந்துரையாடலில் உலக வங்கியின் அதிகாரிகள், பொறியியலாளர்கள், ஆலோசகர்கள் ஆகியோர் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-4)

# சுற்றாடலைப் பேணுவோம் விழிப்புணர்வுப் பேரணி





(படங்கள்:- கிஷோர்)



(யாழ்ப்பாணம்)

சுற்றாடலைப் பேணுவோம் என்னும் தொனிப்பொருளில் சாவகச்சேரி நகராட்சி மன்றமும் சுகாதார பணிமனையும் இணைந்து ஏற்பாடு செய்த பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வுப் பேரணி நேற்றுக்காலை இடம்பெற்றது.

மீசாலை நூல் நிலையத்தில் இருந்து ஆரம்பமாகி பேரணியாக சாவகச்சேரி நகரை வந்தடைந்தது. இதன் போது பிரதான வீதியின் இருமருங்கிலும் காணப்பட்ட பொலித்தீன் பிளாஸ்ரிக் பொருட்களை நகரசபை ஊழியர்கள் அப்புறப்படுத்தினார்கள். இப் பேரணியில் நகர சபை செயலாளர், உத்தியோகத்தர்கள், முன்னாள் நகரசபை உறுப்பினர்கள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல மாதுக்கள், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-89)

# மந்திரிமனை விரைவில் புனரமைப்பு

## வடமாகாண சபை அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

நல்லூர் மந்திரிமனையை தனியாரிடம் இருந்து பெறுவது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு விரைவில் புனரமைக்கப்படும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளர்.

யாழ். நகர் தந்திரோபாய நகர அபிவிருத்தி வேலைத் திட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பான விடயம் பற்றி ஆராய்வதற்கு உலக வங்கியில் இருந்து வருகை தந்திருந்த பிரதிநிதிகள் நேற்று முன்தினம் வடமாகாண முதலமைச்சரை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

அந்த கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நகர் அபிவிருத்தியில் ஒரு பகுதியாக பழைமையையும் புதுமையையும் ஒருங்கிணைப்பது தொடர்பாக ஆராய்ந்து வருகிறார்கள். ஆனால் மந்திரிமனையை தற்போது தனியார் ஒருவர் உரிமை கோரி வருவதால் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு தாமதமாகி வருகிறது. எனவே அதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

உலக வங்கியினரின் உதவியுடன் ஆரம்பிக்கும் இந்த அபிவிருத்தித் திட்டத்தில் மந்திரிமனையை அவர்களிடம் கையளித்தால் அதனை மிக அழகாக புனரமைத்து, விருத்தி செய்து தருவார்கள் என்ற நம்பிக்கை எமக்குள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# பொதுக்கூட்டம்

யாழ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி பழைய மாணவர் சங்க 28ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் பேராசிரியர் அ.துரைராசா மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத்தலைவர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம் பெறும். (இ-19)

★★★★★★★★

நாரந்தனை சைவ மகா சபையின் விசேட பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய மண்டபத்தில் சபைத்தலைவர் வே.துரைராசா தலைமையில் இடம் பெறும். (இ-3)




# சிரிக்க சிந்திக்க சில வரிகள்' நூல் வெளியீட்டு விழா

கலாபூஷணம் மு.மாசிலாமணியின் "சிரிக்க சிந்திக்க சில வரிகள்" நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் க. தேவராஜா தலைமையில் இடம்பெறும். (இ-12)

# சங்காபிஷேகம்

தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய கும்பாபிஷேக தின சங்காபிஷேகம் எதிர்வரம் 30ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 8 மணிமுதல் இடம்பெற்று சுவாமி வீதி வலம் வருதலும் இடம் பெறும். (இ-3)

# விபத்தில் இளைஞர்கள் மூவர் காயம்



பலாலி வீதி ஊரெழு அம்மன் ஆலயத்துக்கு அண்மையில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர்கள் மூவர் காயமடைந்துள்ளனர். இச் சம்பவம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம் பெற்றது.

பலாலி வீதி வழியாக யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் அவ்வழியாக பயணித்த கனரக வாகனம் கரந்தன் வீதிக்கு திரும்ப முற்பட்ட வேளை மிக வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் கனரக வாகனத்துடன் மோதியதிலேயே இவ்விபத்து இடம் பெற்றது.

ஒரு மோட்டார் சைக்கிளில் மூன்று இளைஞர்கள் மிக வேகமாக பயணித்துக் கொண்டிருந்த நிலையில் சடுதியாக வேகக் குறைப்பை மேற்கொள்ள முடியாததால் கட்டுப்பாட்டையிழந்து கனரக வாகனத்துடன் மோதியுள்ளது.

இச்சம்பவத்தில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்ததுடன் ஒரு இளைஞன் காயங்களுடன் வீதியில் பயணித்தவர்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். இளைஞர்கள் பயணித் மோட்டார் சைக்கிள் முன்பகுதி பாரியளவு சேதமடைந்துள்ளது. (இ-87)

# லஞ்சீற்றிற்கு பதிலாக இனி வாழை இலை,

## கரவெட்டியில் புதிய நடைமுறை

(கரணவாய்)

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பொலித்தீன் பாவனையினைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சுதோ ஸ்குமார் தெரிவித்தார். இதன் அடிப்படையில் உணவுசாலைகளில் பிளாஸ்ரிக் கப்பிற்கு பதிலாக சில்வர் கப்பினையும் லஞ்சீற்றிற்கு பதிலாக வாழை இலைகளைப் பயன்படுத்துவது தொடர்பில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மேலும் வீடுகளில் சேரும் பிளாஸ்ரிக் பொருட்களை ஒரு இடத்தில் சேகரித்து வைத்து பிரதேச சபைகளின் வாகனங்கள் மூலம் அகற்றுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இயன்றவரை பிளாஸ்ரிக் உபயோகத்தினை குறைப்பதனூடாக எதிர்காலத்தில் அதனை இல்லாமல் செய்வதற்கான சூழல் உருவாகும் என அவர் கூறினார். (இ-60)

# மகளிர் தினம் இன்று

யாழ். மாவட்ட சர்வமதப் பேரவையின் மகளிர் தினம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் தியாகி அறக் கொடை நிறுவன சொர்ணாம்பிகை மண்டபத்தில் இடம் பெறும். யாழ்.மாவட்ட சர்வமதப்பேரவைத் தலைவர் அருட்தந்தை சி.ஜி.ஜெயக்குமார் அடிகளார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுகுணரதி தெய்வேந்திரம், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முதுகல்விமாணி பட்டப் படிப்புகள் பீட இணைப்பாளர் கலாநிதி ஜெயலக்ஷ்மி இராசநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# குருபூசை

கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீட மகாதேவா சுவாமிகள் ஆச்சிரம வேதாந்த மட ஸ்ரீமத் சாஜன் சுவாமிகளின் குருபூசை நாளைமறுதினம் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கந்தர்மடத்தில் அமைந்துள்ள சிவகுருநாதர் குருபீடத்தில் இடம்பெறும். (இ-3)

# வடமராட்சிக் கிழக்கிற்கு புதிய தண்ணீர் பௌசர்



வரட்சி மற்றும் தண்ணீர் பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் நோக்குடன் வடமராட்சிக்கிழக்கு பிரதேச செயலகத்திற்கு தண்ணீர் பௌசர் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் பௌசரை அனர்த்த முகாமைத்துவ சேவைகள் அமைச்சு வழங்கியுள்ளது. யாழ்.மாவட்டத்திற்கு நான்கு தண்ணீர் பௌசர்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்த தண்ணீர் பௌசர் ஒன்றின் பெறுமதி சுமார் 17 இலட்சம் ரூபாய் எனவும் மருதங்கேணி பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார். (இ-64)

10

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?

தமிழர்களின் இழப்பே இப்போது அவர்களுக்கான பலம். எனினும் இந்த உண்மையை ஏற்றுக்கொள்வதற்கு கூட்டமைப்பின் தலைமை தயாரில்லை.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது கட்சிப் பெயராக இருந்தாலும் ஒரு சிலரின் சர்வாதிகாரப் பிடிக்குள் அக்கட்சி அகப்பட்டு விட்டதென்பதே உண்மை.

யாரெல்லாம் கேள்வி கேட்பார்களோ அல்லது அதட்டிக் கதைப்பார்களோ அவர்களை எல்லாம் கட்சியிலிருந்து ஓரங்கட்டி விட்டால் எல்லாம் சரியாகும் என்ற கூட்டமைப்பின் தலைமை எடுத்த முடிவு அவர்களின் விருப்பம் போல சாத்தியப்படலாயிற்று.

விடுதலைப்புலிகள் இருக்கின்ற காலத்திலேயே வீ.ஆனந்தசங்கரி கூட்டமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டார். தொடர்ந்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூட்டமைப்பைவிட்டு வெளியேறினார்.

சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு பாராளுமன்ற ஆசனத்தைக் கிடைக்காமல் செய்ததன் ஊடாக கூட்டமைப்பின் கூட்டங்களில் அவர் கலந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்பட்டு விட்டது.

தவிர, ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனுக்குப் பதவியை வழங்கி அவரைப் பூரண சரணாகதியடைய வைத்தனர். இவற்றில் வெற்றி கண்ட கூட்டமைப்பிற்கு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவராக இருந்த பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்கள் மிகப் பெரும் சவாலாக இருந்தார்.



எவருக்கும் பயப்படாத, நியாயம் எதுவோ அதை நெருப்பாக எழுந்து நின்று சொல்லக் கூடியவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்கள்.

இவர்களைத் தமிழரசுக் கட்சியின் கூட்டங்கள் நடக்கின்ற போதெல்லாம் தமிழரசுக் கட்சியின் தவறான போக்கை அவர் விமர்சித்தார், கண்டித்தார். எனினும் அவருக்குப் பதிலளிப்பதற்கு தமிழரசுக் கட்சி பயந்தது என்பது உண்மை.

கேள்வி கேட்கக்கூடியவர்களை எல்லாம் ஓரங்கட்டியவர்களுக்கு வீட்டிற்குள் இருக்கக்கூடிய ஒருவர் நியாயம் கேட்பது தமிழரசுக் கட்சிக்கு மிகுந்த இடைஞ்சலைக் கொடுத்தது.

இந்நிலையில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்களை எப்படியும் கட்சியில் இருந்து வெளியேற்ற வேண்டும் என தமிழரசுக் கட்சி முடிவு கட்டியது. இதற்காக அவர்கள் கையாண்ட முதல் தந்திரோபாயம் அவருடன் சேர்ந்து சென்று அவரை வெட்டி விடுவது என்பதாக இருந்தது.

2015 ஆம் ஆண்டில் நடந்த பொதுத்தேர்தலில் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் பேராசிரியர் சிற்றம்பலத்திற்கு தேசியப் பட்டியலின் முதன்மை வேட்பாளர் என்ற இடம் கொடுக்கப் பட்டது.

வட்டுக்கோட்டைத் தொகுதியில் நடந்த தேர்தல் பிரசாரக்கூட்டமொன்றுக்கு பேராசிரியர் சிற்றம்பலம் அவர்கள் தலைமை தாங்கினார். அத்தேர்தல் கூட்டம் தொடர்பில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரமொன்றில்,


தலைமை:- பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் (தேசியப் பட்டியல் முதன்மை வேட்பாளர், இலங்கைத் தமிழரசுக்கட்சி) எனப் பதிவாகியிருந்தது.

இப்பிரசாரக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா; பாராளுமன்ற உறுப்பினர் என்ற பதவிக்கு உரித்தாகிவிட்ட தலைவர் பேராசிரியர் சிற்றம்பலம் என விளித்துப் பேசினார்.

தேர்தல் நடந்தது. கூட்டமைப்பு வெற்றி பெற்றது. தேசியப்பட்டியல் மூலம் இரண்டு எம்.பி. பதவி கிடைக்கும் வாய்ப்பை கூட்டமைப்பு தனதாக்கிக்கொண்டது.

இங்கு தான் சேர்ந்து சென்று பேராசிரியரைத் தட்டிவிடும் சம்பவம் நடக்கிறது.

ஆம், தேசியப் பட்டியலின் முதன்மை வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பேராசிரியர் சிற்றம்பலம் அவர்களுக்கு எம்.பி. பதவியை வழங்காமல் கூட்டமைப்பு காலைவாரி விடுகிறது.



கிடைக்கப்பட்ட இரண்டு தேசியப் பட்டியல் எம்.பி. பதவிகளும் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, திருகோணமலையைச் சேர்ந்த துரைரட்ணசிங்கம் ஆகியோருக்கு வழங்கப்படுகிறது.

தொடர்ந்து தமிழ் மக்கள் பேரவையில் பேராசிரியர் சிற்றம்பலம் இடம்பெற்றார் என்ற குற்றச்சாட்டை முன் வைத்து அவரைத் தமிழரசுக் கட்சியில் இருந்து விலக்கவும் முடிவெடுக்கப்பட்டது.

பேராசிரியர் சிற்றம்பலம் இவர்களைத் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர். எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அ.அமிர்தலிங்கத்துடன் இணைந்து நின்று கட்சியின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர். இந்த உண்மைகள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசாவுக்கு நன்கு தெரிந்திருந்தும் பேராசிரியர் சிற்றம்பலத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தவில்லை.

உண்மையில் மாவை. சேனாதிராஜா மீது தமிழ் மக்களுக்கு நம்பிக்கை இருந்த தாயினும் அவர் கூட்டமைப்பின் தலைமையுடன் சேர்ந்து செல்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார் என்பதே உண்மை.

இதற்குப் பல சான்றுகளை முன்வைக்க முடியும்.

ஒருமுறை தமிழ்மக்கள் பேரவையின் பிரதிநிதிகள் அவரைச் சந்தித்தனர். அச் சந்திப்பின் பின்னர் அவர் நடந்து கொண்ட முறை பேரவையின் பிரதிநிதிகளுக்கு மிகுந்த மனக் கவலையை ஏற்படுத்தியிருந்தது.

தமிழ்மக்கள் பேரவை என்பது ஒரு மக்கள் இயக்கம். தமிழர் தாயகத்திலும் மற்றும் புலம் பெயர்ந்தும் இருக்கக் கூடிய தமிழ் அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் இவற்றை ஒன்று சேர்த்து அரசியல் என்ற எல்லைகளைக் கடந்து தமிழ் மக்களின் உரிமை மற்றும் நலன் சார் விடயங்களில் எங்களிடம் ஒற்றுமைப் பலத்தை ஏற்படுத்துவதே தமிழ்மக்கள் பேரவையின் இலக்காகும்.

எனினும் தமிழ்மக்கள் பேரவையின் அவதரிப்பை இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் இருக்கக்கூடிய சிலர் தமக்கு எதிரான அமைப்பாகவே கருதினர்.

இந்நிலையில் உண்மை நிலையை விளக்குவதே பேரவையின் நோக்கத்திற்கும் அதன் செயற்பாட்டிற்கும் நல்லது என்ற அடிப்படையில் தமிழ்மக்கள் பேரவையின் பிரதிநிதிகள் மாவை. சேனாதிராசாவைச் சந்திப்பது எனத் தீர்மானித்தனர். இச் சந்திப்பை ஏற்படுத் துவதில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி டாக்டர் ரவிராஜ் அவர்கள் துணை நின்றார். சந்திப்பு இலங்கைத் தமிழ ரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

(திங்கள் வளரும்)

-புருசோத்தமன்-

# இரட்டை இலை முடக்கம்

# அ.தி.மு.க. என்ற கட்சி பெயரை பயன்படுத்த இரு தரப்பினருக்கும் தடை



ஆர்.கே.நகர் தொகுதி இடைத் தேர்தலில் அ.தி.மு.கவின் இரு அணிகளில் யாரும் இரட்டை இலைச் சின்னம் மற்றும் அ.தி.மு. என்ற கட்சிப்பெயரையும் பயன்படுத்த தேர்தல் ஆணையம் தற்காலிக தடை விதித்துள்ளது.

ஆர்.கே.நகர் தொகுதி இடைத் தேர்தலில் அ.தி.மு.கவின் இரு அணிகளில் யாரும் இரட்டை இலைச் சின்னம் மற்றும் அ.தி.மு.க. என்ற கட்சிப்பெயரையும் பயன்படுத்த தேர்தல் ஆணையம் தற்காலிக தடை விதித்துள்ளது.

முதலமைச்சராகவும் அ.தி.மு.க. பொதுச் செயலாளராகவும் இருந்த ஜெயலலிதாவின் மறைவுக்கு பின் சசிகலா தலைமையில் ஓர் அணியாகவும் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் ஓர் அணியாகவும் அ.தி.மு.க. செயற்பட்டு வருகிறது.

இந்த நிலையில் ஏப்ரல் 12 ஆம் திகதி நடைபெற இருக்கும் ஆர்.கே. நகர்த்தொகுதி இடைத்தேர்தலில் அ.தி.மு.கவின் இரட்டை இலை சின்னத்தை தங்களுக்கே ஒதுக்க வேண்டும் என்று இரண்டு அணியினரும் டில்லி சென்று தலைமை தேர்தல் ஆணையத்திடம் மனு அளித்தனர்.

இரட்டை இலைச் சின்னம் யாருக்கு? என்பது குறித்து இறுதி முடிவு எடுப்பதற்காக தேர்தல் கமிஷன் ஓ.பன்னீர்செல்வம் தரப்பினரையும், சசிகலா தரப்பினரையும் நேற்று முன்தினம் நேரில் அழைத்து விசாரணை நடத்தியது. தலைமை தேர்தல் நசீம் ஜைதி மற்றும் தேர்தல் கமிஷநர்கள் ஏ.கே. ஜோதி, ஓ.பி.ராவத் ஆகியோர் விசாரணை நடத்தினார்கள்.

நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணிக்கு தொடங்கிய விசாரணை மாலை 5.30 மணிக்கு முடிவடைந்தது.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட தேர்தல் ஆணையம், அவர்கள் தெரிவித்த கருத்துகள் பற்றி நீண்ட நேரம் ஆலோசித்தது.

பின்னர், ஆர்.கே.நகர் தொகுதி இடைத்தேர்தலில் இரட்டை இலை சின்னத்தை சசிகலா அணிக்கோ அல்லது ஓ.பன்னீர்செல்வம் அணிக்கோ ஒதுக்குவது இல்லை என்றும், அந்த சின்னத்தை முடக்கி வைப்பது என்றும் முடிவு செய்தது.

இந்த தகவல் நேற்று முன் தினம் இரவு 11 மணிக்கு இரு அணியினருக்கும் தெரிவிக்கப் பட்டது.

அத்துடன் அ.தி.மு.க. என்ற கட்சியின் பெயரை இரு அணியினரும் பயன்படுத்தக்கூடாது என்றும் உத்தரவிட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்தின் இந்த முடிவு பற்றி தெரிய வந்ததும், இரு தரப்பினரும் தங்கள் அடுத்து கட்ட நடவடிக்கை குறித்து தனித்தனியாக அவசர ஆலோசனை மேற் கொண்டனர்.

முன்னதாக ஓ.பன்னீர்செல்வம் அணியின் சார்பில் மூத்த சட்டத்தரணிகள் சி.எஸ். வைத்தியநாதன், குரு கிருஷ்ணகுமார், மனோஜ் பாண்டியன், பாலாஜி சீனிவாசன் ஆகியோர் தேர்தல் கமிஷன் முன்பு ஆஜராகி தங்கள் தரப்பு கருத்துக்களை தெரிவித்தனர்.

ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதங்கள் பற்றிய விபரம் வருமாறு:-

சட்ட விதிமுறைகளின் அடிப்படையில், சசிகலா ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டு சிறையில் இருக்கிறார். அ.தி.மு.கவின் சட்ட விதிகளுக்கு உட்பட்டு அவர் பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்படவில்லை. அவருடைய நியமனமே தவறு என்ற நிலையில் அவரால் பரிந்துரைக்கப்படும் நபரை எப்படி வேட்பாளராக அங்கீகரிக்க முடியும்? அந்த வேட்பாளருக்கு இரட்டை இலைச் சின்னத்தை ஒதுக்கக் கோரும் படிவத்தில் சசிகலா எப்படி கையெழுத்திட முடியும்?

மேலும், ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்ட சசிகலாவுக்கு தேர்தலில் நிற்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஒருவர் தேர்தலில் நிற்பதற்கே தடை விதித்துள்ள போது அவரால் முன்னிறுத்தப்படும் நபர் எப்படி தேர்தலில் போட்டியிட முடியும்? அவரால் எப்படி சின்னத்தை ஒதுக்குவதற்கான படிவங்களில் கையெழுத்திட முடியும்? அதற்கு சட்டரீதியான முகாந்திரம் கிடையாது.

இவை தவிர, கடந்த 2014 ஆம் ஆண்டில் அ.தி.மு.க. உட்கட்சி தேர்தல் முடிவடைந்ததும் அந்த தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளின் பட்டியலை தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பி வைத்தனர். அந்தப் பட்டியலில் பொதுச் செயலாளர் பதவிக்கு ஜெயலலிதா பெயர் உள்ளது. அதைத் தொடர்ந்து இரண்டாவதாக கட்சியின் மூத்த தலைவர் மதுசூதனன் அவைத் தலைவராக நியமிக்கப்பட்டதாகவும் உள்ளது.

எனவே,ஜெயலலிதாவின்மறைவை தொடர்ந்து கட்சியின் அடுத்த, மூத்த தலைவர் என்ற அடிப்படையில் மதுசூதனனுக்கே இரட்டை இலை சின்னத்தை கோருவதற்கு முழுமையான அதிகாரம் உள்ளது. மேலும் அவரே ஆர்.கே.நகர் தொகுதியின் வேட்பாளர் என்பதால் அவருக்குத்தான் இரட்டை இலை சின்னத்தை ஒதுக்க வேண்டும்.

தற்போது நாங்கள் 5,706 பிரமாண பத்திரங்களை தாக்கல் செய்து இருக்கிறோம். இதன் மூலம் 43 இலட்சம் அ.தி.மு.க. உறுப்பினர்களின் ஆதரவையும் தேர்தல் ஆணையம் முன்பு கொடுத்து இருக்கிறோம். எனவே எங்கள் தரப்புக்குத்தான் இரட்டை இலை சின்னத்தை ஒதுக்க வேண்டும்.

இவ்வாறு ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் வாதங்கள் முன்வைக் கப்பட்டன.

பின்னர் சசிகலா தரப்பில் சட்டத்தரணிகளான சல்மான் குர்ஷித், அரிமா சுந்தரம், மோகன் பராசரன், வீரப்ப மொய்லி ஆகியோர் ஆஜரானார்கள். பாராளுமன்ற துணை சபாநாயகர் தம்பிதுரை, நவநீதகிருஷ்ணன் உள்ளிட்ட எம்.பிக்களும் விசாரணையின் போது உடனிருந்தனர்.

சசிகலா அணியினர் தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதங்கள் பற்றிய விபரம் வருமாறு,

அ.தி.மு.கவில் பிளவு எதுவும் கிடையாது. கருத்து வேற்றுமைகள் உள்ளன. அதேநேரத்தில் எங்கள் தரப்புக்குத்தான் பெரும்பான்மையான உறுப்பினர்களின் ஆதரவு உள்ளது. அவர்களிடம்பெரும்பான்மை கிடையாது. பெரும்பான்மையான எம்.எல்.ஏக்கள் மற்றும் எம்.பிக்கள், பெரும்பாலான பொதுக்குழு உறுப்பினர்கள் எங்களுக்குத்தான் ஆதரவு அளிக்கின்றனர். சின்னத்தை தங்களுக்கு ஒதுக்குமாறு ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் கோருவதற்கு எந்த உரிமையும் கிடையாது.


ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் கூறுவது போல 43 இலட்சம் உறுப்பினர்களின் ஆதரவு அவர்களுக்கு இருப்பதாக ஒரு வாதத்துக்கு எடுத்துக் கொண்டாலும், அ.தி.மு.க. கட்சியின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை சுமார் ஒன்றரைக் கோடி ஆகும். ஓ.பன்னீர் செல்வம் தரப்பே தங்கள் தரப்புக்கு 43 இலட்சம் உறுப்பினர்களின் ஆதரவு உள்ளது என்றால், எங்களுக்கு ஒரு கோடி உறுப்பினர்களின் ஆதரவு உள்ளது என்பதை அவர்களே ஒப்புக் கொள்கிறார்கள். எனவே, எங்களுக்குத்தான் 1,912 பொதுக்குழு உறுப்பினர்களின் ஆதரவும், 122 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவும், 37 எம்.பி.க்களின் ஆதரவும் இருக்கிறது.

ஓ.பன்னீர்செல்வம் தரப்பின் மனுவை ஏற்றுக்கொள்ள முகாந்திரம் ஏதும் இல்லை. பொதுக்குழு கூட்டம் நடைபெற்ற போது பதிவு செய்யப்பட்ட 6 வீடியோ சி.டி.க்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அந்த கூட்டத்தில் பொதுச்செயலாளர் நியமனத்துக்கு சசிகலாவின் பெயரை முன்மொழிந்ததே இவர்கள்தான். முன்மொழிந்தவர்களே புகார் அளித்துள்ள நிலையில் அந்த புகாரை ஏற்றுக்கொள்ள எந்த முகாந்திரமும் கிடையாது.

டி.டி.வி.தினகரனுக்கு இரட்டை இலை சின்னத்தை ஒதுக்கக்கூடாது என்றும், அவர் அ.தி.மு.க. உறுப்பினரே அல்ல என்ற வகையிலும் பன்னீர்செல்வம் தரப்பு வாதங்கள் அமைந்து இருந்தன. அவர் அ.தி.மு.கவின் அடிப்படை உறுப்பினராக இணைந்து பல ஆண்டுகளாக சீரிய முறையில் கட்சிக்கு பணி புரிந்து, கட்சியின் எம்.பியாக இருந்துள்ளார். தற்போது துணை பொதுச்செயலாளராகவும் பதவி வகித்து வருகிறார்.

இவ்வாறு சசிகலா தரப்பில் வாதங்கள் முன்வைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-12)

## ஓ.பி.எஸ். அணிக்கு இரட்டை மின்கம்பம் சசிகலா அணிக்கு தொப்பி




(சென்னை)

ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் இரட்டை மின்கம்பம் சின்னம் ஓ.பி.எஸ். அணியினருக்கு ஒதுக்கப்பட்டது. சசிகலா அணிக்கு தொப்பி சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அ.தி.மு.க.கட்சி சின்னமான இரட்டை இலை முடக்கப்பட்டதால், ஓ.பி.எஸ். சசிகலா அணியினர் இதில் போட்டியிட முடியாத நிலை உருவாகியுள்ளது.



இரட்டை மின்கம்பம் சின்னம் கேட்டு தேர்தல் ஆணையத்திடம் சசிகலா, ஓ.பி.எஸ். அணியினர் போட்டி போட்டனர். ஏனென்றால் அது இரட்டை இலைச் சின்னம் போன்றே இருந்தது. இரட்டை மின்கம்பம் சின்னம் ஓ.பி.எஸ்.அணியினருக்கு ஒதுக்கப்பட்டது. சசிகலா அணிக்கு தொப்பி சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.




ஓ.பி.எஸ்.அணியின் கட்சிப் பெயர் அ.இ.அ.தி. மு.க. புரட்சித் தலைவி அம்மா, சசிகலா அணியின் கட்சிப் பெயர் அ.இ.அ.தி. மு.க. அம்மா என பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. (இ-12)

## பா.ஜ.கவில் எஸ்.எம்.கிருஷ்ணா



காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகிய கர்நாடக முன்னாள் முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணா நேற்று முன்தினம் பா.ஜ.கவில் முறைப்படி இணைந்தார்.

இதன் மூலம் கர்நாடகவில் பா.ஜ.கவின் பலம் அதிகரித்துள்ளதாக கட்சியின் தேசிய தலைவர் அமித்ஷா தெரிவித்துள்ளார். கர்நாடக மாநிலம் மண்டியாவைச் சேர்ந்த எஸ்.எம்.கிருஷ்ணா 50 ஆண்டுகளுக்கு மேலாக காங்கிரஸ் கட்சியில் முக்கிய தலைவராக செயற்பட்டவர். முன்னாள் பிரதமர்கள் இந்திராகாந்தி, ராஜீவ் காந்தி, மன்மோகன் சிங் அமைச்சரவையில் மத்திய அமைச்சராகவும் கர்நாடக முதல்வராகவும் மகாராஷ்டிர ஆளுநராகவும் பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-12)

# டெங்கு நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்த சிரமதானப்பணி



வவுனியா நகர சபைக் குட்பட்ட பகுதிகளில் வர்த்தக நிலையங்கள், வீடுகள் ஆகிய வற்றில் டெங்கு நுளம்பு பெருக்கம் ஏற்படக்கூடிய இடங்கள் அடையாளம் காணப் படுமிடத்து அதற்கு தண்டப் பணம் அல்லது வழக்குத் தாக்கல் செய்யப்படும் என வவுனியா சுகாதார பணி மனையின் பொதுச் சுகாதார பரிசோதகர் மே.ஜெயா தெரி வித்துள்ளார்.

இதையடுத்து வவுனியா நகரத்தில் டெங்கு நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதி யாக வவுனியா சிறு வியா பாரிகள் சங்கமும் வவுனியா பொலிஸ் நிலைய சூழல் பாது காப்பு பிரிவினர் ஆகியோர் இணைந்து டெங்கு நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்து வதற்காக சிரமதானப் பணி யில் ஈடுபட்டிருந்தனர்.

வவுனியா பொலிஸ் நிலை யத்திற்கு முன்பாகவுள்ள சிறு வியாபாரிகள் கடைத் தொகுதி பகுதிகளிலேயே இந்த சிரம தானப் பணிகள் வவுனியா சிறு வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் யு.அயூப் கான் தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்றது.

சிறு வியாபாரிகளின் கடைத் தொகுதி உரிமையாளர்கள், ஊழியர்கள் இச் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

வவுனியா நகரசபைக் குட்பட்ட பகுதிகளில் வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுக ளில் டெங்கு நுளம்பு பெருக் கம் ஏற்படக்கூடிய இடங்கள் அடையாளம் காணப்படுமி டத்து அதற்கு தண்டப்பணம் அல்லது வழக்குத் தாக்கல் செய்யப்படும் என வவுனியா சுகாதாரப்பணிமனையின் பொதுச் சுகாதார பரிசோதகர் மே.ஜெயா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# வவுனியாவில் 32 பேருக்கு இன்புளுவென்சா தொற்று

## வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் கு.அகிலேந்திரன் தெரிவிப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் கடந்த சில தினங்களில் 32பேருக்கு இன்புளுவென்சா தொற்று ஏற்பட்டுள்ளதாக வவுனியா பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் கு.அகிலேந்திரன் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது.

வவுனியாவில் இன்புளு வென்சா தொற்றுக் காரண மாக இதுவரை 32 பேர் வவுனியா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ள னர். அவர்களுக்கு வைத் திய சிகிச்சைகள் அளிக்கப் பட்டு வருகின்றன. இதில் 20 பேர் வரையில் சிகிச்சையின் பின் வீடு திரும்பியுள்ளனர். ஏனையோர் வைத்தியசாலை யின் விடுதியில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்ற னர்.

மேலும் தொற்று ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளதால் சிறியவர்களை தேவையின்றி வைத்தியசாலையில் தங்கி யுள்ள உறவினர்களைப்பார்வை யிடுவதற்கு அழைத்து வருவ தைத் தவிர்க்கவும். குறிப் பாக கர்ப்பிணித்தாய்மார், சிறுவர்கள் அவதானமாக இருக்குமாறும் அவர் தெரி வித்துள்ளார்.

இதேவேளை, இன்புளு வென்சா வைரஸ் தொற்று காரணமாக அண்மையில் வவுனியா வைத்தியசாலை யில் இளம் குடும்பப் பெண் ஒருவர் மரணமடைந்திருந் தமை குறிப்பிடத்தக் கது. (2-250)




# நேரம் காலம் பாராது பணியாற்றியதன் பயனாக டெங்கை கட்டுப்படுத்த முடிந்தது

## கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவை பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

(பரந்தன்)



கிளிநொச்சியில் டெங்கு நோயைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கு பிரதேச சபைச் சிற்றூழியர்களின் உழைப்பு மகத்தானது. நேரம் காலம் பாராது பணியாற் றியதன் பயனாக கிளிநொச்சி யில் டெங்கு நோயை பெரு மளவில் பரவவிடாது கட்டுப் படுத்தக் கூடியதாக இருந்தது என கிளிநொச்சி பிராந்திய சுகா தார சேவைகள் பிரதிப் பணிப் பாளர் வைத்தியர் கார்த்தி கேயன் தெரிவித்துள்ளார்.

கரைச்சிப் பிரதேசசபையில் நேற்று முன்தினம் சிற்றூழி யர்களின் பணியைப் பாராட்டி அவர்களுக்கு நன்றி தெரிவிக் கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சியில் குறிப்பாக கரைச்சிப் பிரதேச சபையின் சிற்றூழியர்கள் அர்ப்பணிப்பு மிக்க உழைப்பை வழங்கி வருகின்றார்கள். நேரம் காலம் பாராது அவர்கள் மேற்கொண்ட உழைப்பின் காரணமாகத்தான் நாட்டின் ஏனைய பிரதேசங்கள் போன்று அல்லாது கிளிநொச்சியில் டெங்கு தீவிரமாக பரவாது கட்டுப்பாட்டிற்குள் வைத்தி ருக்க முடிகிறது.


டெங்கு நோயைக் கட்டுப் படுத்துவது என்பது ஒரு கூட்டு உழைப்பு. அதில் பிரதேச சபையின் சிற்றூழியர்களின் பங்களிப்பு முதன்மையானது.

கிளிநொச்சி மாவட்டத்தை பொறுத்தவரை மக்களும் டெங்கு நோய் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு தங்க ளின் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றார்கள். எனவே இவ்வாறான ஒத்து ழைப்பும் விழிப்புணர்வும் மேலும் தொடரும் போதே மாவட்டத்தில் டெங்கு நோயை முற்றாக கட்டுப்படுத்த முடி யும் எனவும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் கரைச்சி பிரதேச சபையின் செயலா ளர் க.கம்சநாதன், சுகாதார பரிசோதகர்கள், பிரதேச சபையின் சிற்றூழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டி ருந்தனர். (2-312)

# பொதுமக்கள் குடிநீர் பெறமுடியாதவாறு பொதுக்கிணறு மூடிக்கட்டப்பட்டுள்ளது

## காணி ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு வவு. நகரசபை செயலாளர் கடிதம்



வவுனியா கந்தசுவாமி கோவில் வீதியில் அமைந் திருந்த பொதுக்கிணறு ஒன்று தனிநபரினால் கையகப்படுத் தப்பட்டுள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வவுனியா நகரசபை எல் லைக்குள் கந்தசுவாமி கோவில் வீதியில் அமைந்துள்ள வீடொன் றின் முன்பகுதியில் வீதியோ ரமாக அமைக்கப்பட்டிருந்த பொதுக்கிணற்றை அவ்வீட் டில் குடியிருக்கின்ற நபர் ஒருவர் கிணற்றின் மேற் பகுதியயை சீமெந்தினால் மூடி தமது வீட்டின் சொந் தக்கிணறாகப் பயன்படுத்தி வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் அப்பகுதி வர்த் தகர்கள் உட்பட பொதுமக்கள் குடிநீரிரை பெற்றுக்கொள் வதில் சிரமங்களை எதிர் கொள்வதுடன் அருகில் உள்ள கந்தவாமி ஆலயத்திலேயே குடிநீரிரைப்பெற வேண்டி யுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா நகரசபை செயலா ளர் இ.தயாபரனிடம் தொடர்பு கொண்டு வினவிய போது,

குறித்த கிணறு தொடர் பாக எமக்கும் பொதுமக்க ளால் முறைப்பாடு கிடைக்கப் பெற்றது. இதனையடுத்து கடந்த 17 ஆம் திகதி வெள் ளிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டேன். நேற்று முன்தினம் நகர சபையி னால் குறித்த காணியின் வரைபடம் மற்றும் ஆவ ணங்களை சமர்ப்பிக்குமாறு வீட்டு உரிமையாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டதுடன், இது தொடர்பாக விசாரணை கள் நடைபெற்று வருகின்றன என தெரிவித்தார். (2-250)

# மடு பிரதேச செயலகப் பிரிவில் 48 ஏக்கர் காணி படையினர் வசமுள்ளது

(குருமன்காடு)

மடு பிரதேச செயலக பிரி வில் 48 ஏக்கர் காணி பாது காப்புத் தரப்பினரிடம் உள்ள தாக மடு பிரதேச செயலக புள்ளிவிபரத் தகவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வவுனியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் அன்புக்கும் நட்புக்குமான வலையமைப்பு குறித்த பிர தேச செயலக பிரிவில் பாது காப்பு தரப்பால் கையகப் படுத்தப்பட்டுள்ள காணி விப ரங்களை தகவல் அறியும் சட்டம் மூலம் விண்ணப் பித்திருந்தது. அதற்கு குறித்த பிரதேச செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே மேற்படி தக வல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி மன்னார், மடு பிரதேச செயலக பிரிவில் இராணுவம் மற்றும் பொலிஸ் ஆகிய பாதுகாப்பு தரப்பினரே 48 ஏக்கர் காணியை கைய கப்படுத்தி வைத்துள்ளனர். இதன்படி தம்பனைக்குளம் பகுதியில் தனியாருக்கு சொந் தமான ஒரு ஏக்கர் காணி இராணுவத்தாலும், பரசன் குளம், தட்சணாமருதமடு, தம்பனைக்குளம், பன்ன வெட்டுவான், மடுவீதி ஆகிய இடங்களில் அரச காணிகள் 27 ஏக்கரை இராணுவமும், தம்பனைக்குளம் மற்றும் மடு வீதி ஆகியவற்றில் 6 ஏக்கர் அரச காணியை பொலிஸாரும் கையகப் படுத்தியுள்ளனர்.

அத்துடன், சின்னப் பண்டிவிரிச்சான், தட்சணா மருதமடு, கீரிசுட்டான் ஆகிய பகுதிகளில் வனஇலாகா விற்கு சொந்தமான 14 ஏக்கர் காணியை இராணுவமும் சுவீகரித்து வைத்துள்ளது. இவ்வாறாக மடு பிரதேச செயலக பிரிவில் 48 ஏக்கர் காணி பாதுகப்புத் தரப்பால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலையிலுள்ளது என தெரி விக்கப்பட்டுள்ளது. (2-250-15)

# கிளியில் 32வது நாளாகவும் போராட்டம் தொடர்கின்றது




கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் ஆரம் பிக்கப்பட்ட காணாமல் ஆக் கப்பட்டவர்களின் கவன யீர்ப்புப் போராட்டம் நேற்று வியாழக்கிழமை 32 ஆவது நாளாகவும் தீர்வின்றி தொடர்ந்தது.

கிளிநொச்சி மாவட்டத் தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடு தலையையும் வெளிப்படுத் தலையும் வலியுறுத்தி காணா மல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கடந்த 20 ஆம் திகதி காலை கிளி நொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவனயீர்ப்பு ஒரு மாதம் கடந்த நிலையிலும் தொடர்கின்றது.

இரவு- பகலாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர் களின் உறவினர்கள் கிளி நொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுப்பட்டு வருகின்றனர்.

இராணுவத்தினரிடம் ஒப் படைத்த எமது பிள்ளைக ளுக்கு என்ன நடந்தது? நல் லாட்சி அரசு உறுதியான முடிவு சொல்ல வேண்டுமென வலியுறுத்தியே போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றது. (2-15-312)

# இலங்கை மீது மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடும் அதிருப்தி

இலங்கை அரசாங்கம் கடந்த 2 ஆண்டுகளில் நடைமுறைப்படுத்த வேண்டிய பல விடயங்களில் பெரும் தாமதம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை குறித்து சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், இலங்கை அரசாங்கம் கடந்த 2 ஆண்டுகளில் ஐக்கிய நாடுகளின் கட்டமைப்புடன் ஏற்படுத்திக் கொண்ட தொடர்பு மற்றும் ஒத்துழைப்புக்கு சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வரவேற்பு தெரிவித்துள்ளது.

ஆனால் அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டிய பல விடயங்களில் பெரும் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம், அரசாங்கத்தினால் உறுதியளிக்கப்பட்ட காணாமல் போனோர் அலுவலகம் உள்ளிட்ட பல பொறிமுறைகள் இன்னும் அமுலாக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. எனவே, இந்த தாமதம் குறித்து இலங்கை அரசாங்கம் அவதானம் செலுத்தப்பட வேண்டும் என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

உறுதிமொழிகளின் அமுலாக்கம் குறித்த நேரஅட்டவணை ஒன்றை அரசாங்கம் உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் இலங்கை அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டுள்ளது. (இ-7)

# 20 அரசாங்க வைத்தியசாலைகளுக்காக நவீன தொடர்பாடல் முறை ஸ்தாபிக்க நடவடிக்கை

இலங்கையின் 20 அரசாங்க வைத்தியசாலைகளுக்காக இலத்திரனியல் படக்காப்பகம் மற்றும் நவீன தொடர்பாடல் முறை ஸ்தாபிக்கப்படவுள்ளது.

வைத்தியசாலைகளின் வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் வைத்திய சாலைகளுக்காக இலத்திரனியல் படக்காப்பகம், நவீன தொடர்பாடல் முறை என்பவற்றை தெரிவு செய்யப்பட்ட 20 அரச வைத்திய சாலைகளில் ஸ்தாபிக்கும் வேலைத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

அத்துடன், வைத்தியசாலைகளில் மற்றும் பிரதேச வைத்திய சேவை வழங்குநர் பிரிவுகளில் வசதிகளை மேம்படுத்தவும் நடடிக்கை எடுக்கப்படவுள்ளது.

712 மில்லியன் ரூபா மதிப்பீட்டு செலவில் 134 வைத்தியசாலைகளில் மற்றும் 26 பிரதேச வைத்திய வழங்குநர் பிரிவுகளில் மருந்துப் பொருட்கள் களஞ்சியசாலை வசதிகள் விருத்தி செய்யப்படவுள்ளன.

மேலும், 954 மில்லியன் ரூபா மதிப்பீட்டு செலவில் பிரதேச வைத்தியசாலை மட்டம் வரை வைத்திய வழங்குநர் முகாமைத்துவ தகவல் தொகுதியினை வியாபிக்கும் வேலைத்திட்டமும் செயற்படுத்தப்படவுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்காக சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் ராஜித சேனாரட்னவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (இ-7)

# சதுரங்க விளக்கமறியலில்

(கொழும்பு)

களுத்துறை சிறைச் சாலை பேருந்து மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பண்டி எனப்படும் சதுரங்க புஸ்பகுமாரவை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட வேளை, எதிர்வரும் 28ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

செல்லக் கதிர்காமம் பகுதியில் மறைந்திருந்த நிலையில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கடந்த 21ம் திகதி சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கீழ் மாடியில் தபால் பெட்டிகள் கட்டாயம்

தொடர்மாடி வீடுகளை நிர்மாணிக்கும் போது, கீழ் மாடியில் தபால் பெட்டிகளை கட்டாயமாக வைப்பதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் அளித்துள்ளது.

தொடர்மாடி வீடுகளில் காணப்படும் தபால் சேவை குறைப்பாட்டை நிவர்த்திக்கும் நோக்கிலேயே தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர் எம்.எச்.எம். ஹலீமினால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

வீட்டின் இலக்கங்களின் அடிப்படையில் தபால் பெட்டிகளைக் கொண்ட பிரதேசமொன்றை கீழ் மாடியில் ஸ்தாபிப்பதற்கும் குறித்த பெட்டிகளின் திறப்புகளை குறித்த வீட்டு உரிமையாளர் களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. (இ-7)

# இலங்கை நிறைவேற்ற வேண்டிய விடயங்கள் இன்னமும் உள்ளன

## கனடா சுட்டிக்காட்டு

இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டிய விடயங் கள் இன்னமும் இருப்பதாக கனடா மனித உரிமை ஆணையம் தெரிவித் துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவை யின் 34ஆவது கூட்டத் தொடரில் கலந்து கொண்டு கருத்துரைத்துள்ள, கனடா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் பிரதிநிதி,

மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 34ஆவது கூட்டத் தொடரில் ஆணையாளர் செயிட் ராட் அல்ஹுசைன் கொண்டுவந்துள்ள அறிக்கையினை வரவேற்கிறோம். அதற்கான ஆதரவினை கனடா வழங்கும் எனவும் தெரிவித்தார். (இ)


# University of Jaffna, Sri Lanka
# Faculty of Graduate Studies

**Admission for Postgraduate Research Programme**
**Master of Philosophy (M.Phil) & Doctor of Philosophy (Ph.D.) – 2017**

Applications are invited from qualified persons for enrollment to the Master of Philosophy (M.Phil.) and Doctor of Philosophy (Ph.D.) research programmes offered by the Faculty of Graduate Studies, University of Jaffna in the disciplines listed below.

***Agriculture Related Fields:***
Agricultural Biology, Agricultural Chemistry, Agricultural Economics, Agricultural Engineering, Animal Science, Agronomy

***Arts Related Fields:***
Christian Civilization, Economics, English Literature, Fine Arts (Art History & Aesthetic), Geography, Hindu Civilization, History, Linguistics, Philosophy, Psychology, Sanskrit, Sociology, Tamil

***Engineering Related Fields:***
Civil Engineering, Computer Engineering, Electronic & Electrical Engineering, Mechanical Engineering

***Management Related Fields:***
Management [Human Resource Management / Accounting / Financial Management / Marketing]

***Science Related Fields:***
Biochemistry, Botany, Chemistry, Computer Science, Fisheries Science, Mathematics, Statistics, Physics, Zoology.

**Medium** Tamil / English
**Duration** Full Time (M.Phil. – 02 years : Ph.D. – 03 years) / Part Time (M.Phil. – 03 years : Ph.D. – 04 years)

**Total Fees**

| | Local Student | SAARC Countries | Other Countries |
|---|---|---|---|
| M.Phil. (Social Science Field) | 128,000.00 | US $ 2000 | US $ 3000 |
| M.Phil. (Applied Science Field) | 188,000.00 | US $ 3000 | US $ 4000 |
| **NOTE**: *Extension Fee for additional year (s) : 25,000.00 per year US $ 400 (for foreign students)* | | | |
| Ph.D. (Social Science Field) | 183,000.00 | US $ 3000 | US $ 4000 |
| Ph.D. (Applied Science Field) | 243,000.00 | US $ 4000 | US $ 5000 |
| **NOTE**: *Extension Fee for additional year (s) : 30,000.00 per year US $ 500 (for foreign students)* | | | |

**Applications**

Relevant information and prescribed application forms could be obtained from the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna (T.P. : 021 222 3608) either in person or post, on a payment of Rs. 1500/- per application form on submission of receipt in support of the payment to the University Account number

**162-1-001-6-0000880** at the People's Bank.

Those who wish to obtain application forms by post are requested to send a money order for Rs. 1500/- per application form drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a **self-addressed stamped envelope** 22.5 x 10 c.m. (9" x 4") in size.

Application forms and other details will also be available in the Faculty web site: www.jfn.ac.lk/grad. Those who wish to send the downloaded application form should attach a money order for Rs. 1500/- drawn in favour of the Bursar, University of Jaffna or the receipt in support of the payment to the University Account number

**162-1-001-6-0000880** at the People's Bank.

Duly completed applications should be sent to the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna, Thirunelvely by registered post or by hand in the office hours. The research programme applied for should be indicated as ***"Application for M.Phil. / Ph.D.– 2017"*** on the top left hand corner of the envelop.

**Incomplete or Illegible applications will not be considered.**

**Note :**
**Applicant will be selected on the basis of**
**(1) availability of supervisor in the particular topic of research or**
**(2) availability of admission in the particular field of research or Laboratory facilities**

**Registrar**
**21/03/2017**

(C-7292)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர் பட்டப்படிப்புகள் பீடம்
## புதிய அனுமதிகள்

1.கல்வியியல் முதுமாணி **(MED)– 2017/18** (அணி V) வவுனியா பிராந்திய நிலையம்

2.பட்டப்பின் கல்வித் தகைமை கற்கை நெறி **(PGD in Education) - 2017/18** (அணி VI) வவுனியா பிராந்திய நிலையம்

மேற்படி சுயநிதிக் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**கல்வியியல் முதுமாணி (MED)**

அனுமதிக்குரிய தகைமைகள்

➢ "அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமும், பட்டப்பின் கல்வி டிப்ளோமாவும்"

அத்துடன்

➢ ஒரு பாடசாலையில் அல்லது யாதேனும் கல்வி நிறுவனத்தில் குறைந்த பட்சம் ஐந்து ஆண்டுகள் கற்பித்தல் அனுபவம் அல்லது மேற்படி கற்கைநெறிக்குப் பொருத்தமான கல்விசார் பணிகளில் குறைந்த பட்சம் ஐந்து ஆண்டுகள் அனுபவம்.

தெரிவு முறைமை:

எழுத்துத் தேர்வும் நேர்முகத் தேர்வும்

(எழுத்துத் தேர்வு கல்விசார் பொதுத் தகைமையை பரீட்சிப்பதாக அமையும்.)

கற்கைக் காலம்: ஒரு வருடம்

மொழி மூலம் : தமிழ்

கற்கைநெறிக் கட்டணம் : **100,000/-**

விண்ணப்பப் படிவக் கட்டணம்: **1,000/-**

**பட்டப்பின் கல்வித் தகைமை கற்கை நெறி (PGD in Education)**

அனுமதிக்குரிய தகைமைகள்

➢ அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்தும் கல்வி நிர்வாகிகளிடமிருந்தும் கோரப்படுகின்றன.

➢ விண்ணப்பதாரிகள் 50 வயதுக்கு குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

தெரிவு முறைமை :

எழுத்துத் தேர்வும் நேர்முகத் தேர்வும்

எழுத்துத் தேர்வு (பொது விவேகம், கல்வியியல் பொதுத்தகைமை) மற்றும் நேர்முகத் தேர்வு இரண்டினதும் பெறுபேறுகளுக்கமைய தெரிவுகள் இடம்பெறும்.

கற்கைக் காலம்: இரண்டு வருடங்கள்

மொழி மூலம் : தமிழ்

கற்கைநெறிக் கட்டணம் : **85,000/-**

விண்ணப்பப் படிவக் கட்டணம்: **1,000/-**

விண்ணப்பப் படிவம் பெறும் முறை:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் பணம் வைப்பிலிடும் பத்திரத்தைப் பெற்று மக்கள் வங்கி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கிளையில் 162-1001-8-0000902 எனும் கணக்கு இலக்கத்திற்கு கட்டணத்தை செலுத்தி உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு விண்ணப்பப் படிவத்திற்குரிய பெறுமதியான காசுக்கட்டளையுடன் 15/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரியிடப்பட்ட 23 x 10 செ.மீ. அளவுள்ள கடித உறையையும் இணைத்து உதவிப்பதிவாளர் உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்கள் www.jfn.ac.lk/grad எனும் பல்கலைக்கழக வலைத்தளவசதியூடாகவும் (website) பெற்றுக்கொள்ளலாம். வலைத்தளமூலமாக தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்புபவர்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா 1000/- பெறுமதியான காசுக்கட்டளையை/ மக்கள் வங்கியில் மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்கு செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கற்கை நெறியின் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் 30.04.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு உதவிப்பதிவாளர், உயர்பட்டப்படிப்புகள் பீடம்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு:- விண்ணப்பப்படிவங்களை வவுனியா வளாக முதல்வர் அலுவலகத்தில் பணம் வைப்பிலிடும் பத்திரத்தைப் பெற்று மக்கள் வங்கியில் 162-1001-8-0000902 எனும் கணக்கு இலக்கத்திற்கு விண்ணப்பப்படிவக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலமும் விண்ணப்பப்படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கற்கை நெறியின் பெயரினைக் குறிப்பிட்டு வளாக முதல்வர், வவுனியா வளாகம் என்ற முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.

உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள், சரியாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதிவாளர் (சி-7291)

---

போதைப்பொருள் கடத்தல்

# இலங்கைப் பெண் பெங்களூரில் கைது

(டில்லி )

போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டிருந்த இலங்கைப் பெண் ஒருவர் பெங்களூர் சரவதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். 64 இலட்சத்திற்கும் அதிகமான பெறும தியுடைய போதைப் பொருளுடன் 39 வயதுடைய இலங்கைப் பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பெண் கொழும்பில் இருந்து பெங்களூர் ஊடாக சென்னை செல்ல முற்பட்டிருந்த போது கைது செய்யப்பட்டதாக இந்திய ஊடகச் செய்திகள் கூறுகின்றன.

இலங்கையிலிருந்து வழங்கப்பட்ட தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 01 கிலோ 640 கிராம் நிறையுடைய ஹேசிஸ் என்ற போதைப் பொருள் அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த பெண் நேற்று நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டதையடுத்து விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார். (இ-7)

**வலம்புரி விளம்பரத்தொடர்பு**
**021 221 7603**
**021 321 0815**

---

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(நல்லூர்)

உரும்பிராய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம், புதிய நிர்வாகத் தெரிவு என்பன இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு உரும்பிராய் திருக்குமரன் சனசமூக நிலைய மண்டபத்தில் உரும்பிராய் மேற்கு கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் கி.கிருஷ்ணானந்தன் தலைமையில் இடம்பெறும். இக்கூட்டத்தில் உரும்பிராய் மேற்கு கிராம சேவையாளர் செ.செல்வச்சந்திரன், கோப்பாய் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தி.ஜெயசுதாசன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர். (இ-3, 134)

**மீள்பாவனை, வாடகை**

சகல வாகனங்களின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் மீள்பாவனைக்கு உட்படுத்தித் தரப்படும். கல்வி பயிலும் மாணவிகளுக்கு அறை வாடகைக்கு உண்டு.
கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.
075 542 8128
(8386)

**இந்திய விபூதி விற்பனைக்கு**

எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1kg), மொத்தமாகவும் (ரூ.100), சில்லறையாகவும் (ரூ.110) பெற்றுக்கொள்ளலாம். (சி-7588)

**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரத்துச் சந்திக்கு அருகில்) - 021 222 2567

**இவர்களுக்கு மணமகள் தேவை** — **கல்யாண மாலை** — **இவர்களுக்கு மணமகன் தேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/நிரந்தர தொழில் அவுஸ்திரேலியா<br>தொ.இ: B/7101 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: G/7102 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:BBA/சொந்ததொழில்<br>தொ.இ: B/7106 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 42<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BSc, MSc, QS/ விரிவுரையாளர்<br>தொ.இ: G/7103 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 48<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:Civil Eng, QS/ அரசதொழில்<br>தொ.இ: B/7108 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 13<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BA<br>தொ.இ: G/7104 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 39 செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BBA/ உதவிமுகாமையாளர்<br>தொ.இ: B/7112 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 42<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L/தனியார்தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/7105 |

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:-kalyanamalai.jaffna@gmail.com**
**குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.**
**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.**

## எனது எண்ணம் பிரிட்டன் பற்றியே உள்ளது


# சர்வதேச சமூகம் தீவிரவாதத்துக்கு எதிராக உடன் ஒன்றிணைய வேண்டும்

## மகிந்த ராஜபக்ஷ அழைப்பு

சர்வதேச சமூகம் தீவிர வாதத்துக்கு எதிராக ஒன்றி ணைந்து செயற்பட வேண் டுமென முன்னாள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ அழை ப்பு விடுத்துள்ளார்.

பிரித்தானிய பாராளு மன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தீவிர வாத தாக்குதல் குறித்து அவர் தனது உத்தியோகபூர்வ டுவிட் டர் தளத்தில் மேற்கண்ட வாறு குறிப்பிட்டுள்ளார்.

எனது எண்ணம் அனை த்தும் பிரித்தானிய மக்களை பற்றியே உள்ளது. இலங்கை மக்களுக்கு தீவிரவாதம் தொடர்பில் நன்றாக அறிந்த வர்கள். தீவிரவாதத்துக்கு எல்லையென்பது கிடையாது.





ஆகவே சர்வதேச சமூகம் தீவி ரவாதத்தை எதிர்க்க ஒன்றி ணைய வேண்டும் என கேட் டுக்கொண்டுள்ளார். (இ-7)

### வடமராட்சி அபிவிருத்திக்கு புதிய அமைப்பு உருவாக்கம்

(கரணவாய்)

வடமராட்சியின் கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி பிரதேசங்களை உள்ளடக்கிய பகுதிகளைச் சேர்ந்த கல்வி மான்கள் ,அறிஞர்கள், துறை சார் வல்லுநர்கள் இணைந்து எதிர்கால வடமராட்சி அபிவி ருத்திவேலைத்திட்டங்கள் தொட ர்பில் ஓர் அமைப்பினை உரு .வாக்கி அதன் வேலைத்திட்டங் களை முன்னெடுப்பதற்கு ஏது வாக கூட்டம் ஒன்று இடம் பெற் றது. இக் கூட்டத்தின் தலை வராக முன்னாள் மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன் செயலாளராக சி.குணராசா, பொருளாளராக சி.சிவரஞ்சன் மற்றும் 11 பேர் கொண்ட நிர் வாக சபை தெரிவு செய்யப்பட்டு இடைக்கால நிர்வாக செயற் பாடுகளை முன்னெடுத்துவருவ துடன் இவ் வேலைத்திட்டங்கள் தொடர்பில் கிராமமட்ட அமைப் புக்கள், அரச திணைக்களங் கள், அரசசார்பற்ற நிறுவன ங்கள், பிரதேச மக்களை பிரதி நிதிப்படுத்துபவர்கள் ஆகியோ ரிடம் அபிவிருத்தி தொடர்பான ஒத்துழைப்பைக் கோரி நிற்பது டன் எதிர்கால வடமராட்சியின் அபிவிருத்தி யில் ஆர்வமு ள்ள வடமராட்சி வாழ் பிரஜை கள் வெளிநாட்டவர்களுடன் இணைந்து கைகோர்க்குமாறு இவ் அமைப்பு அறிவித்துள் ளது. நிறுவ னத்துடன் இணை ந்து கொள்ள விரும்புபவர்கள் 077 876 0992 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் என அவ்வமைப்பு அறிவித்துள் ளது. (இ-3,60)



கீரிப்பல்லி விக்னேஸ்வரா வீதியில் கோழி இறைச்சிக் கழிவுகள் வீசப்பட்டதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டு ள்ளது. (இ-60)

# விசேட தீர்ப்பாயம் மூலமே உண்மையான நீதி கிடைக்கும்

## ஜெனிவாவில் கஜேந்திரகுமார் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

ஐ.நா. மனித உரிமைப் பேரவை ஆணையாளரி னால் இந்தத்தடவை சமர்ப் பிக்கப்பட்ட அறிக்கையில் கூட, கலப்பு நீதிமன்றம் குறி த்தான தனது சிரத்தையை விசேடமாக அழுத்தித் தெரி வித்திருந்த போதிலும், இலங்கையின் அதிகாரப் படிநிலையின் உச்சத்தில் இருக்கின்ற ஜனாதிபதியும் பிரதமரும் பல முக்கிய அமைச்சர்களும் மீண்டும் மீண்டும் இந்த கலப்பு நீதி மன்றை நிராகரித்திருக்கி றார்கள் எனத் தெரிவித்துள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன் னணியின் தலைவர் கஜே ந்திரகுமார் பொன்னம்ப லம்.

சர்வதேச நீதிமன்றுக்கு இலங்கையை பரிந்துரை ப்பது அல்லது ஒருவிசேட தீர்ப்பாயம் ஒன்றை அமைப் பதுதான் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கான உண்மையான நீதிக்கான வழியென்பதை ஆணையாளர் ஏற்றுக்கொள் கிறாரா? என கேள்வியெழுப் பியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை யின் மனிதவுரிமை பேர வையில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவி த்தார்.

இலங்கையின் நீதித்துறை மற்றும் பாதுகாப்புத்துறை என்பவற்றின் கட்டமைப்பு சார் சிதைவு மற்றும் ஊழல் போன்றவற்றால் தகைமை இழந்து போயிருக்கும் இலங் கையின் நீதிக்கட்டமைப்பு கள், குற்றவியல் விசாரணை யையும், அதனைத் தொடர் ந்த குற்றவியல் வழக்கு தொடு த்தலையும் கொண்டு நடத் தக்கூடிய உள்ளகப் பொறிமு றையொன்றிற்கு பொருத்த மற்றது என்பதே, 2015 செப் டெம்பரில்வெளியிடப்பட்ட ஐ.நா. மனித உரிமை பேரவையின் அலுவலக விசாரணை அறிக் கையின் முக்கிய வெளிப்படு த்தலாக இருந்தது.

இந்த பின்னணியிலேயே மனித உரிமை பேரவை ஆணையாளர், உள்ளக நீதி விசாரணைப் பொறிமுறை யொன்றை நிராகரித்து ஒரு கலப்பு நீதிமன்றை கோரி நின்றார்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவை ஆணையாளரால் இந்தத்தடவை சமர்ப்பிக் கப்பட்ட அறிக்கையில் கூட , கலப்புநீதிமன்றம் குறித்தான தனது சிரத்தையை விசேட மாக அழுத்தித் தெரிவித்தி ருந்த போதிலும், இலங்கை யின் அதிகாரப்படிநிலையின் உச்சத்தில் இருக்கின்ற ஜனா திபதியும் பிரதமரும் பல முக் கிய அமைச்சர்களும், மீண் டும் மீண்டும் இந்த கலப்பு நீதிமன்றை நிராகரித்திருக் கிறார்கள்.

2015 ஒக்டோபர் ஐ.நா. மனித உரிமைப் பேரவை யின் 30/1 தீர்மானம் நிறை வேற்றப்பட்டதிலிருந்தே அவர் கள் மிகத்தெளிவாக இதை நிராகரிப்பதை தெரிவித்து வந்துள்ளார்கள்.

இவற்றைவிட, இலங் கையின் எந்த ஒரு படைவீர னும் எந்த ஒருநீதிப் பொறி முறையின் கீழும் தண் டிக்கப் படாமல் இருப்பதை நான் உறுதிப்படுத்துவேன் என ஜனாதிபதியே தெரிவித்திருப் பதுதான் இங்கு எச்சரிக் கையுடன் குறித்துக்கொள்ள வேண்டிய மிகவும் முக் கியமான விடயமாகும்.

நடைமுறை யதார்த்த த்தம் இப்படியாக இருக்கை யில்.

ஐ.நா.மனித உரிமை பேரவையின் 2015 ஒக்டோ பர் தீர்மானத்தில் , ஏற்க னவே மிகத்தெளிவாக அரசா ங்கத்தால் நிராகரிக்கப்பட்ட, கலப்பு நீதிமன்றம் குறித்த பகுதியை நடைமுறைப்ப டுத்துவதற்கென மேலும் இர ண்டு வருட கால அவகாசம் கொடுப்பதென்பது உண்மை யில் இலங்கையின் தற்போ தைய அரசாங்கம் தனது கடப்பாடுகளிலிருந்து தப்பித் துச் செல்லவே வழிவகுக் கக்கூடும் என்பதை ஆணை யாளர் அவர்கள் ஏற்றுக் கொள்கிறாரா?

இரண்டாவதாக, ரோம் சாசனத்தினை ஏற்றுக்கொ ண்டு கையெழுத்திடுமாறு ஆணையாளர் இலங்கையை வேண்டியிருக்கும் நிலையில் சர்வதேச நீதிமன்றுக்கு இலங்கையை பரிந்துரை ப்பது அல்லது ஒரு விசேட தீர்ப்பாயம் ஒன்றை அமைப் பதுதான் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கான உண்மையான நீதிக்கான வழியென்பதை ஆணையாளர் ஏற்றுக் கொள்கிறாரா? என அவர் மேலும் கேள்வியெழுப்பியு ள்ளார். (இ-4)

## டெங்கு ஒழிப்புக்கு ஒத்துழையுங்கள்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் டெங்கு ஒழிப்பிற்கான நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதால் குப்பையேற்றும் வாகனங்கள் கழிவுகளை ஏற்ற வரும் போது அவற்றில் பொலித்தீன் பைகளை வேறுபடுத் தியும் பிளாஸ்டிக் பொருட்களை வேறுபடுத்தியும் தரம்பிரித்து வைத்து சபை நடவடிக்கைகளுக்கு நெல்லியடி நகரப்பகுதி கடை உரிமையாளர்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலாளர் ஏ. வினோராஜ் அறிவித்துள்ளார். (இ-3-60)





நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபை பாலர் பாடசாலையின் மழலைகள் கண்காட்சி நேற்று முன் தினம் நடைபெற்றது.

### போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட

# மேஜர் ஜெனரல் சாஜி கல்லகேக்கு நுழைவிசைவு வழங்க ஆஸி மறுப்பு



போர்க்குற்றங்களை இழைத்தார் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கும், இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் சாஜி கல்லகேக்கு நுழைவிசைவு வழங்க அவுஸ்திரேலியா மறுத்துள்ளது.

அவுஸ்திரேலிய குடியுரிமை பெற்றுள்ள தனது சகோதரரைப் பார்ப்பதற்காகவே, மேஜர் ஜெனரல் சாஜி கல்லகே ஒரு மாத கால அவுஸ்திரேலிய நுழை விசைவுக்கு விண்ணப்பித்திருந்தார்.

எனினும், இறுதிப் போரின் போது, 2009 மே 7ஆம் திகதி தொடக்கம், 2009 ஜூலை 20ஆம்திகதி வரை 59 ஆவது டிவிசனுக்குத் தலைமை தாங்கினார் என்பதாலேயே மேஜர் ஜெனரல் சாஜி கல்லகேயின் நுழைவிசைவு விண்ணப்பம் அவுஸ்திரேலியாவினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

தனது தலைமையில் இலங்கை படையினர் நிச்சயமாக போர்க் குற்றங்களையும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களையும் இழைத்துள்ளனர் என்று அவுஸ்திரேலிய தூதுரகம் தெரிவித்ததாக மேஜர் ஜெனரல் சாஜி கல்லகே தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கை இராணுவத்தின் காலாட்படைகளின் பணிப்பாளராக பணியாற்றும் மேஜர் ஜெனரல் சாஜி கல்லகே, இறுதிக்கட்டப் போரில் முக்கிய பங்கு வகித்த படைத் தளபதிகளில் ஒருவராவார்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் அறிக்கையை மேற்கோள்காட்டியே அவுஸ்திரேலிய குடிவரவு மற்றும் எல்லை பாதுகாப்பு திணைக்களம் மேஜர் ஜெனரல் சாஜி கல்லகேயின் நுழைவிசைவு கோரிக்கையை நிராகரித்துள்ளது.

அத்துடன், இலங்கையில் 40 ஆயிரம் பொதுமக்கள் வரையில் இறுதிக்கட்டப் போரில் கொல்லப்பட்டிருக்கலாம் என்று குறிப்பிட்டிருந்த, 2011 மார்ச் 31ஆம் திகதி வெளியிடப்பட்ட ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையையும் அவுஸ்திரேலியா மேற் கோள்காட்டியிருக்கிறது.

இறுதிக்கட்டப் போரில் இலங்கை படையினர், ஆளில்லா வேவு விமானங்களின் மூலம் திரட்டிய நிகழ்நேரப் படங்கள் மூலம், களமுனைத் தளபதிகள் இலக்குகளைத் தீர்மானித்தனர் என்று மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா கூறியிருந்த கருத்தை மேற்கோள்காட்டிய அவுஸ்திரேலியா, மூன்றாவது போர் தவிர்ப்பு வலயம் மீது ஆட்லறி தாக்குதலை நடத்துகிறோம் என்று மேஜர் ஜெனரல் சாஜி கல்லகே அறிந்திருந்தார் என்றும் குற்றம் சாட்டியுள்ளது.

மேஜர் ஜெனரல் கல்லகே, போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை திட்டமிட்டு, நடைமுறைப்படுத்தி, ஆதரவளித்தார் என்று அவுஸ்திரேலியா குற்றம்சாட்டியிருக்கிறது.

தமது கட்டுப்பாட்டில் இருந்த படையினர் போர்க் குற்றங்களில் ஈடுபடுவதைத் தடுக்கத் தவறி விட்டார் என்றும் அவுஸ்திரேலியா குற்றம் சாட்டியுள்ளது.

மேஜர் ஜெனரல் சாஜி கல்லகேக்கு எதிராக அவுஸ்ரேலியா போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களை இழைத்தார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்துள்ளதானது, தமிழ் பொதுமக்கள் மீது இலங்கை படையினரால் திட்டமிட்ட தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்பதை அவுஸ்திரேலியா நம்புகிறது என்பதை வெளிப்படுத்துவதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது. (இ-3)

### போர்க்குற்ற விசாரணையில்

# வெளிநாட்டு நீதிபதிகள் குறித்து இலங்கை அரசு நழுவலான பதில்




இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக வெளிநாட்டு நீதிபதிகளை உள் ளடக்கிய சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்ற ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் கோரிக்கை தொடர்பாக இலங்கை நழு வலான பதிலையே அளித்துள்ளது.

ஜெனிவாவில் நடந்து வரும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் நேற்று இலங்கை தொடர்பாக ஐ.நா மனித உரிமை ஆணையாளர் செயிட்ராட் அல்ஹூசைன் அறிக்கையை முன்வைத்தார்.

"மோசமான குற்றங்கள் தொடர்பாக விசாரணை நடத்தி தண்டனை வழங்குவதில் இலங்கை தோல்வியடைந்துள்ளதானது ஒரு பரந்துபட்ட தயக்கத்தை பிரதிபலிப்பதாக அல்லது, பாதுகாப்புப் படைகள் மீது நடவடிக்கை எடுக்க அஞ்சுவதாக தோன்றுகிறது.

கடந்தகால மீறல்கள் தொடர்பாக நீதி முறைமையின் நம்பகத்தன்மை குறைபாடு மற்றும் தண்டனையில் இருந்து தப்பிக்கும் நிலைக்கு முடிவுகட்ட விரும்பமின்மை அல்லது இயலாமை காரணமாக, நீதிப் பொறிமுறையில் அனைத்து லகப் பங்களிப்பு தேவைப்படுகிறது. இது நம்பகமானதாக இருப்பதற்கு, வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் வழக்குத் தொடுநர்கள், அங்கீகரிக்கப்பட்ட சட்டவாளர்கள், விசாரணையாளர்களை உள்ளடக்கியதாக ஒரு சிறப்பு நீதிமன்றம், அமைக்கப்பட வேண்டும்" என்று அவர் தனது அறிக்கையில் தெரிவித்தார்.

அதையடுத்து. அந்த அறிக்கை மீது விவாதம் இடம் பெற்றது. இதன்போது இலங்கைக்கு பதிலளிக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டது.

இதன்போது உரையாற்றிய இலங்கையின் பிரதி வெளிவிவகார அமைச்சர், ஹர்ஷ டி சில்வா வெளிநாட்டு நீதிபதிகள் என்ற ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் பரிந்துரை பற்றி எதையும் கூறவில்லை.

"எமது சமூகத்தின் எல்லாத் தரப்பினருடனும் தொடர்ந்து ஆலோசனை நடத்தி புதிய பொறிமுறைகள் உருவாக்கப்படும். அனைத்துலக நிபுணத்துவத்தையும், உதவி யையும் நாம் கோருவோம். அந்தப் பொறுப்பை எல்லா நாடுகளும் நிறைவேற்ற முடியும்" என்று மாத்திரம் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு நீதிபதிகள் பற்றிய பரிந்துரையை இலங்கை பகிரங்கமாக நிராகரிக்காத போதிலும், வெளிநாட்டு நிபுணத்துவமும், உதவியும் மாத்திரம் கோரப்படும் என்று கூறி நழுவியுள்ளது.

அதேவேளை, அறிக்கை மீதான விவாதத்தின் முடிவில் பதிலுரை ஆற்றிய ஐ.நா. மனித உரிமை ஆணையாளர், 'வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய பரிந்துரை தொடர்பாக கூறும் போது, கலப்பு நீதிமன்றம் என்ற பதத்தையும் பயன்படுத்தியிருந்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### தந்து விட்டுத் தவிக்கும் பெற்றோர்

நாம் பெற்ற பிள்ளைதானே, நம்மைக் கைவிட்டு விடவா போகிறது? என்கிற நம்பிக்கை பல பெற்றோருக்கு உண்டு.

ஒரு பிள்ளை, திருமணம் ஆகும் வரை பெற்றோரை நன்குதான் கவனிக்கிறான். திருமணமான பின் மனைவியின் பேச்சைக் கேட்டு மாறிவிடுகிறான். அல்லது, தன்னை அண்டி அல்லது தன்னை மட்டுமே நம்பி வாழ்வதால் தன் மனைவி,தன் பிள்ளைகள் என்ற இரக்க குணம் ஏற்பட்டு, அதுவே சுய நலமாக மாறி, அவர்களை அதிகமாகக் கவனிக்க ஆரம்பித்து பெற்றோர்களைக் கைவிட்டு விடுகிறான்.

வசதியில்லாதவர்கள் தாம் இப்படி செய்கிறார்கள் என எண்ணுகிறீர்களா?

அதுதான் இல்லை.

வசதி படைத்த பலரே கூட பெற்றோரைக் கைவிட்டு விடுகிறார்கள். மாதச் செலவுக்கு 50 உம் 100 உம் அனுப்புகிறார்கள். காரணம் சொல்லுவார்கள். ஒன்றும் ஏற்றுக் கொள்ளும்படியான காரணங்களாக இருக்காது.

ஐந்து – ஆறு– ஏழு பிள்ளைகளை ஒரு பெற்றோர் கவனிக்கிறார்கள்; வளர்க்கிறார்கள்; பராமரிக்கிறார்கள்; அவர்களே நம் உலகம் என்று வாழ்கிறார்கள்.

ஆனால் இத்தனை பிள்ளைகளை ஒரு பெற்றோர் கவனிக்கிறார்களா? என்றால் மிகமிகக் குறைவு என்றே சொல்ல வேண்டும், இவ்வளவு ஏன்? இத்தனை பிள்ளைகளில் ஒன்றுகூட அவர்களைக் கவனிக்காத கதைகளும் நம் கண்ணெதிரே நடக்கத்தான் செய்கின்றன. இளைய மகன் உதவ முன்வந்தால் கூட அவனின் மனைவி, "ஏங்க! உங்க அண்ணனுக்கு இல்லாத அக்கறை உங்களுக்கு எதுக்குங்க?" என்று கட்டை போடுவாள், காரியத்தை கெடுப்பாள்.

வயதான காலத்தில் வயிற்றை மட்டுமல்ல, மரியாதையையும் காப்பாற்றிக் கொள்ள சில வழிகள் இருக்கின்றன.

ஒன்று; அன்பைக்காட்டி அவர்களை வசப்படுத்துவது அல்லது கண்டிப்புக்கு வசப்படுகிற பிள்ளைகளாகவாவது அவர்கள் இருக்க வேண்டும். இந்த இரண்டிற்கும் சரிப்பட்டு வராத பிள்ளைகள் பெற்றோரிடம் உள்ள வசதிக்கும் காசுக்கும் தான் கட்டுப்பட்டு நடக்கும். இதுதான் அனுபவபூர்வமான உண்மை .

கடைசிக் காலம் வரைக்கும் நமக்கு இது போதும் என்கிற ஒரு சிறு பிடிமானத்தையேனும் (சொத்தோ, பணமோ) வைத்துக் கொள்ள வேண்டும். ஒன்றும் இல்லாதபடி எல்லாவற்றையும் வழித்துத் துடைத்து எழுதிக் கொடுத்துவிட்டு, மகன் வேளாவேளைக்குச் சோறு போடுவான்; மூக்குப் பொடிக்கும் வெற்றிலை பாக்கிற்கும் வழிச் செலவுக்கும் மகள் பணம் தருவாள் என்றெல்லாம் கணக்குப் போட்டால் அது பெரும்பாலும் தப்புக் கணக்காகவே முடியும்.

அத மட்டுமல்ல,

இதுவரை பார்த்திராத தங்கள் பிள்ளைகளின் மோசமான மறுபக்க முகத்தை அவர்கள் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டு விடலாம்.

**லேனா தமிழ்வாணன்**

# 2000 ஏற்றுமதியாளர்களை ஸ்தாபிப்பதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம் யாழில் நேற்று ஆரம்பம்



படங்கள்: பொ.சோபிகா

2000 ஏற்றுமதியாளர்களை ஸ்தாபிப்பதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் தேசிய ரீதியிலான முதலாவது விழிப்புணர்வு செயலமர்வு நேற்றைய தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இலங்கையில் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தும் ஒரு அங்கமாக 2000 ஏற்றுமதியாளர்களை ஸ்தாபிப்பதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தினை இந்த வருடம் ஆரம்பிப்பதற்கு அரசு திட்டமிட்டிருந்தது.

அதன் அடிப்படையில் அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் ஆதரவின் கீழ் இயங்கும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை இத் திட்டத்தை நடைமுறைப் படுத்தவுள்ளது.

சர்வதேச தரத்திற்கு நிகரான ஏற்றுமதியாளர்களை உருவாக்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இதன் மூலம் 2020 இல் சுமார் 2000 புதிய ஏற்றுமதியாளர்களை உருவாக்குவதே இத் திட்டத்தின் இலக்காகும்.

மாறிவரும் உலக வர்த்தக போக்கிற்கு அமைவாக புதிய தொழில்நுட்ப யுத்திகளைக் கையாண்டு ஏற்றுமதிகளை மேம்படுத்துவது இத்திட்டத்தின் மற்றுமொரு நோக்கமாகும்.

இந்த தேசிய செயற்றிட்டத்தின் ஒரு அங்கமாக யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றைய தினம் கண்காட்சி ஒன்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தது. அதில் எமது நாட்டின் பல்வேறு உற்பத்திகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வில் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, இராஜாங்க அமைச்சர் சுஜீவசேனசிங்க, இராஜாங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன், வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை தலைவி திருமதி இந்திராமல்வத்த, யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், வடமாகாணத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1022

Search for people, places and things — Nagendram Home

ரவி




குலம்




யானுஷா




மிது




கனி




ரதன்





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்கள்

**(2017-03-22 அன்று வெளியான பகுதி-1இன் தொடர்ச்சி)**

♦ வரைபையும் அட்டவணையையும் அவதானிக்குக.




| தினங்கள் | விற்பனை ரூபாவில் |
|---|---|
| திங்கள் | 100 |
| செவ்வாய் | 120 |
| புதன் | 110 |
| வியாழன் | ......... |
| வெள்ளி | 90 |

(22) வரைபில் உள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையில் உள்ள வெற்றிடத்தை நிரப்புக.
(23) அட்டவணையில் உள்ள தகவல்களுக்கேற்ப வரைபைப் பூரணப்படுத்துக.

♦ சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

(24) நீரில் கரையாத பொருள்
1) உப்பு 2) சீனி 3) மெழுகு 4) மை

(25) நுளம்பின் மூலம் பரவும் நோய் அல்லாதது.
1) டெங்கு 2) மலேரியா 3) வாந்திபேதி 4) யானைக்கால்

(26) வடமாகாணத்தை சேர்ந்த ஒரு நகரம்.
1) பரந்தன் 2) காலி 3) கண்டி 4) திருகோணமலை

(27) கறையான் அமைத்த புற்றைத் தனது வீடாகப் பயன்படுத்துவது.
1) எலி 2) கறையான் 3) பாம்பு 4) முயல்


(28) சீவுளி எனும் ஆயுதத்தை பயன்படுத்துபவர்.
1) மேசன் 2) தச்சன்
3) சிகை அலங்கரிப்போர் 4) கொல்லன

♦ கீழே தரப்படும் சொற்றொடர்களுக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.

(29) பாடசாலை நடவடிக்கைகள் ஆரம்பமாவதற்கு இசைக்கப்படும் கீதம்......................

(30) பொது நூலகத்தில் இரவல் பெற முடியாத புத்தகத்தை அங்கு இருந்து படித்து குறிப்பு எடுக்க உகந்த பகுதி ..............................................................


இவ்வுருவில் 5cm என்பது ஒரு மீற்றரைக் குறிக்கும்.




(31) இவ்வுருவின் சுற்றளவு யாது? .......................
(32) இவ்வுருவின் பரப்பளவு யாது? .....................

♦ 33 முதல் 37வரையிலான வினாக்களின் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

(33) மாகாணம், நாடு, கிராமம், மாவட்டம் என்பதைக் குறித்துக் காட்டப்பட்ட சரியான அடங்கல் படம் எது?




(34) 8#4 =6 * 2 = 16 ⊕ 4 எனும் கணிப்புக் கோவையில் # ,* ,⊕ என்னும் குறியீடுகள்குறித்து நிற்கும் கணிப்புகள்.
1) + ,x,- 2) x,+ ,- 3) - ,x,+

(35) கழுகு, சிங்கம், நாய், புலி, பசு, பாம்பு, தவளை, குதிரை, நரி போன்றவற்றில் ஊன் உண்ணி அல்லாதவை எவை?
1) பசு, பாம்பு 2) பசு, தவளை 3) பசு, குதிரை

(36) எறும்பு, தேனீ, காகம், கறையான், ஆந்தை இராமபாணம் போன்ற பிராணிகளில் புத்தகங்களைஅரித்து சேதமாக்குபவை எவை?
1) எறும்பு, தேனீ 2) கறையான், இராமபாணம் 3) காகம், ஆந்தை

(37) இரு நூறாயிரத்து ஐந்நூற்றுறைம்பது என்பதை இலக்கங்களில் எழுதினால் வருவது எது?
1) 200, 505 2) 200, 550 3) 250, 050

38) தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை 247 ஆகும். அதேபோல் ஆங்கில நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை யாது?
1) 35 2) 26, 3) 12

39) ..................தன்னடி யாவதுண்டு சுடர் தலைநேர் எழுவதுண்டு.
1)தன் நிழல் 2) தன்முகம் 3) சூரியன் )

40) உலகச் சிறுவர்கள் தினம் கொண்டாடப்படும் தினம் யாது?
1) யூன் 5 2) மார்ச் 10 3) ஒக்ரோபர் 1 4) ஜனவரி 30

**2017-03-22 புதன் அன்று வெளியான பகுதி-1இன் விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 3 | 9) 3 | 17) 9 | 24) 3 | 31) 80 cm |
| 2) 2 | 10) 4 | 18) இரத்தம் | 25) 3 | 32) 375 $cm^2$ |
| 3) 3 | 11) உப்பு | 19) விரைவாக | 26) 1 | 33) 1 |
| 4) 2 | 12) இளநீர் | 20) 4 | 27) 3 | 34) 1 |
| 5) 3 | 13) ஒட்டகம் | 21) 3 | 28) 2 | 35) 3 |
| 6) 2 | 14) 1 | 22) 80 | 29) தேசிய கீதம் | 36) 2 |
| 7) 3 | 15) 4 | 23) வரைபு | 30) உசாத் துணை | 37) 2 |
| 8) 4 | 16) 3 | 120 வரை | நூலகம் | 38) 2 |
| | | | | 39) 1 |
| | | | | 40) 3 |

குறிப்பு : 2017-03-17 அன்று வெளியான பகுதி-2 இன் விடை 14) 8) இல் சுற்றளவு 12 cmஐ 14 cm என திருத்தம் செய்க.

**மாதிரி வினாத்தாள் பகுதி-2**

1 தொடக்கம் 3 வரையிலான வினாக்களுக்கு வெற்றிடங்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையை அடைப்புகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
குமாரனின் கடைக்கு நல்ல புகழ் ,திறமான பொருட்களை 1. .................(பணம், கூலி, சம்பளம்) கொடுத்து வாங்க வசதி படைத்த 2. .................(பிச்சைக்காரர்கள் , பாவனையாளர்கள், நாடோடிகள்) பலர் அவனிடமே வருவது வழக்கமாகி விட்டது. அதனால் அயற்கடைக்காரர்களுக்கு குமாரன் மேல் ஓரளவுக்கு 3. .................(அன்பு, ஆத்திரம், பொறாமை) உண்டாகியது.

4. "உடைமையும் கடமையும்" எனும் பாடலின் படிமுறைகள் சரியான ஒழுங்கில் இடம் பெறும் விடையைத் தெரிவு செய்க.

A - இனிய பழத்தின் இன்சுவையாய் - நீ
B- ஓம்புதல் தானே உன் உடைமை
C - இயம்புதல் என்றும் உன் கடமை
D - ஒழுக்கம் உயர்வு தந்திடுமே - அதை

1. D,C,A,B 2. A,C,B,D 3. D,B,A,C

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிலும் உள்ள நான்கு சொற்களுள் மூன்று சொற்கள் ஏதோவொரு விதத்தில் ஒத்துள்ளன. அவற்றுள் வித்தியாசமான ஒரு சொல்லின் கீழ்க் கீறிடுக.

5. 1. கடிதம் 2. முத்திரை 3. வெளிநாடு 4. தபாற்கந்தோர்

6. 1. துறப்பணம் 2. உளி 3. மண்வெட் டி 4. சீவுளி

7. 1. எலி 2. பாம்பு 3. நத்தை 4. அட்டை


8 தொடக்கம் 10 வரையிலான வினாக்களுக்கு சொற்றொடர் குறித்து நிற்கும் மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க.


8. போர் வீரர் அணியும் இரும்புச் சட்டை
1. சீருடை 2. பட்டி 3. உறை 4. கவசம்


9. இந்துமதப் பெண்கள் நெற்றியில் வைக்கும் பொட்டு
1. ஒட்டுப்பொட்டு 2. கும்குமப்பொட்டு 3. திலகம் 4. சந்தனப்பொட்டு

10. இந்துமத ஆண்கள் காதுகளில் அணியும் காதணி
1. தோடு 2. கடுக்கண் 3. ஜிப்சி 4. ஒட்டுத்தோடு

♦ கீழேயுள்ள அட்டைக்கீலங்களை மடித்து ஒட்டுவதன் மூலம் கிடைக்கும் உருவத்தின் பெயரைத் தெரிவு செய்க.

11. 
1. சதுரமுகி 2. கூம்பு 3. அரியம் 4. கூம்பகம்

12. 
1. சதுரமுகி 2. கூம்பு 3. அரியம் 4. கூம்பகம்

13. 
1. சதுரமுகி 2. கூம்பு 3. அரியம் 4. கூம்பகம்

♦ பந்தியை வாசித்து விளங்கி வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

உலகிற்கு உணவு அளிக்கும் விவசாயியின் வீடோ ஓலைக்குடிசை. கணவன், மனைவி இருவரும் பிள்ளைகளின் வயிற்றுப் பசிக்காக வேலை செய்கின்றார்கள். அந்திசாயும் வேளை கமகம என மணக்கும் கூழ் தயாரிக்கிறாள் இல்லத்தரசி. குடிசை வாயிலில் முழுமதி நிலவில் எல்லோரும் கூழ் குடிக்கிறார்கள். விவசாயி குடும்பம் பகல் முழுவதும் பாடுபட்ட உடம்பின் களை தீர நிம்மதியாக நித்திரைக்குச் செல்கின்றனர். இதுவே விவசாயியின் வாழ்க்கை ஆகும்.


14. யாருடைய வாழ்க்கை பற்றி இப்பந்தியில் விபரிக்கப்படுகின்றது?
(ஏழையின் வாழ்வு பற்றி, தொழிலாளியின் வாழ்வு பற்றி, கமக்காரனின் வாழ்வு பற்றி)

15. ஓலைக்குடிசை எதனால் வேயப்பட்டிருக்கும்?
(ஓட்டினால், தகரத்தகடுகளால், கிடுகினால்)

16. பந்தியில் வரும் இரட்டைக்கிளவிச் சொல் எது?
(வயிற்றுப்பசி, கமகம, மணக்கும் கூழ்)

17. இல்லத்தரசி எனும் சொல்லுக்கு ஒத்ததாக பந்தியில் வரும் வேறொரு சொல் எது?
(இல்லாள், கணவன், மனைவி)

18. நகர்ப்புற கடைத்தெருவில் காணப்படும் இவ்வீதிச் சமிக்ஞையின் கருத்து யாது?




1. இவ்விடத்தில் வாகனம் நிறுத்தலாம்.
2. இவ்விடத்தில் வாகனம் நிறுத்தக்கூடாது
3.இவ்விடம் பஸ் தரிப்பு இடமாகும்.

இலங்கையின் தேசியக்கொடி ஏற்றுவது சம்பந்தமான சரியான தகவலுக்கு எதிரே 'சரி' எனவும் பிழையான(தவறான) தகவலுக்கு எதிரே 'பிழை' எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

19. தேசியக் கொடியை காலையில் சூரியன் உதித்த பின் ஏற்றி மாலையில் சூரியன் மறைவதற்குமுன் இறக்க வேண்டும் (..........................................)

20. பழுதடைந்த, கிழிந்த தேசியக் கொடியை சூரியஒளி படும் இடங்களில் ஏற்ற வேண்டும் (..........................................)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்-பகுதி 2

21. தேசியக் கொடி ஏற்றும் போது இலகுவாய் நிற்றல் வேண்டும்.
(.........................................)


22. தேசிய பிரமுகர்களுக்கு முன் தேசியக் கொடியை தாழ்த்திப் பிடிக்கக் கூடாது.
(.........................................)

23. ஊர்வலங்களின் போது தேசியக் கொடி நிலத்தில் படாதவண்ணம் தூக்கிச் செல்ல வேண்டும்.
(.........................................)


24. தேசியக் கொடி தூக்கிச் செல்பவர் அக்கூட்டத்திலுள்ளவர்களில் மிகவும் வயது கூடிய முதியவராக இருக்க வேண்டும்.
(.........................................)

25. தேசியக் கொடிக்கு மதிப்பளிப்பது இந்நாட்டு சகல மக்களினதும் கடமை ஆகும்.
(.........................................)

26. வினாவின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை B குறிப்பிடும் திசை வழியே பார்க்கும் போது அது தோன்றும் விதத்தைக் காட்டும் விடையின் கீழ்க் கீறிடுக.




27. அவ்வுருவை A குறிப்பிடும் திசை வழியே பார்க்கும் போது அது தோன்றும் விதம்.




சரியான விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

28. எட்டுப்பேர் 4 நாட்களில் செய்து முடிக்கும் வேலையை இருவர் எத்தனை நாட்களில் செய்வார்கள்? (.........................................)

29. காலை 8:00 மணிக்கு பயணத்தை ஆரம்பித்த ஒருவர் அன்றைய தினம் மாலை 3:00 மணிக்கு பயணத்தை முடித்துக் கொண்டார். அவர் பயணத்தில் செலவிட்ட மணித்தியாலங்கள் எத்தனை?
(.........................................)

30. ரூபா 286.45 ஐக் குறியீடுகளில் JEC.LK எனக் காட்டலாமாயின் ரூபா 685.45 ஐ எவ்வாறு குறியீடுகள் மூலம் காட்டலாம்?

(.................................)

பின்வரும் வினாக்களுக்கான சரியான விடையை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து வினாவுக்கு எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

பனை, தாமரை, மல்லிகை
நாகதாளி, வேம்பு, ஐதரில்லா
முல்லை, குருவிச்சை, தென்னை

31. நீரினுள் பூரணமாக மூழ்கியிருந்து வளரும் தாவரம் எது?
(.............................)

32. இலைகள் இல்லாது முட்கள் மட்டும் கொண்ட தாவரம் எது?
(.........................................)

33. தண்டு, வேர், நீரினுள் அமிழ்ந்து பூ மட்டும் வெளியே பூக்கும் தாவரம் எது?
(.................................)

34. முத்திரை ஒட்டுவதற்கு பயன்படும் பிசின் பெறக்கூடிய தாவரம் எது?
(.........................................)

நேற்று மாலை பூந்தோட்டத்தில் நீர் ஊற்றிக் கொண்டு இருந்தேன். அவ்வேளை ஒரு அழகிய கிளி தோட்டத்து மாமரத்தில் வந்து இருந்தது. அதன் அழகு என்னைப் பெரிதும் கவர்ந்தது.அது எவ்வளவு ஆனந்தமாக இருக்கின்றது? இதைப் போன்று நானும் ஒரு பறவை யானால்.........


இத்தனைத் தொடர்ந்து உமது மனதில் தோன்றும் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது ஐந்து சொற்களாவது இடம்பெறுதல் வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய் பயனிலைத் தொடர்பு திருத்தமாக இருத்தல் வேண்டும்.)

35. ..........................................................................................
..........................................................................................


36. ..........................................................................................
..........................................................................................

37. ..........................................................................................
..........................................................................................


38. பின்வரும் உருக்களின் சுற்றளவைக் காணுங்கள்




39. பின்வரும் உருக்களின் பரப்பளவைக் காணுங்கள்.




40. இக் கோலத்திற்கேற்ப அடுத்ததாக இடப்பட வேண்டிய உருவைத் தெரிவு செய்க.




### 2017-03-24 வெள்ளி இன்று வெளியாகின்ற பகுதி-1 இன் விடைகள்

| | |
|---|---|
| 1) பணம் | 21) பிழை |
| 2) பாவனையாளர்கள் | 22) சரி |
| 3) பொறாமை | 23) சரி |
| 4) 3 | 24) பிழை |
| 5) 3 | 25) சரி |
| 6) 3 | 26) 1 |
| 7) 1 | 27) 1 |
| 8) 4 | 28) 16 |
| 9) 2, 3 | 29) 7 |
| 10) 2 | 30) CEK.LK |
| 11) 4 | 31) ஐதரில்லா |
| 12) 3 | 32) நாகதாளி |
| 13) 2 | 33) தாமரை |
| 14) சமகாரனின் வாழ்வுபற்றி | 34) வேம்பு |
| 15) கிடுகினால் | 35-37) கருத்துள்ள வாக்கியங்கள் |
| 16) கமகம | 38) 32 cm, 80 cm, 50 cm |
| 17) மனைவி | 39) 36 $cm^2$, 24 $cm^2$, 12 $cm^2$ |
| 18) 1 | 40) 3 |
| 19) சரி | |
| 20) பிழை | |

## பொது மைதானம் அமைக்க ஆரம்ப அளவீட்டு வேலைகள்



வடக்கு மாகாண சபையின் 780 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 32 ஏக்கர் பரப்பளவில் முல்லைத்தீவு மாவட்டத் துக்கான பொது மைதானம் அமைப்பதற்கான ஆரம்ப அளவீட்டு வேலைகள் நடைபெற்றுள்ளன. இந்த ஆரம்ப அளவீட்டு வேலைகள் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த மைதானம், முல்லைத்தீவு பரந்தன் வீதியில் உள்ள வட்டுவாகல் பாலத்துக்கு அண்மையாக 32 ஏக்கர் நிலப்பரப்பில் அமையவுள்ளது. (2-15)

## கொக்கிளாய் தமிழ் மீனவர்களுக்கெதிராக வழக்கு ஏப்ரல் மாதம் வெளியாகும்

(முல்லைத்தீவு)

கொக்கிளாய் தமிழ் மீனவர்களுக் கெதிராக கடற்றொழில் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குத் தீர்ப்பு எதிர்வரும் ஏப்ரல் மாதம் வெளியாகவுள்ளது.

கொக்கிளாய் தமிழ் மீனவர்களுக்கான இறங்குது றையை ஒதுக்குவதில் கடற்றொழில் திணைக்களம் ஈடு படவில்லை. அதனால் மீனவர்கள் தமக்கென முன்பு தீர்மானிக்கப்பட்ட இடத்தில் வாடி அமைத்து தொழில் செய்ய தீர்மானித்தனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு கடற்றொழில் திணைக் களத்தினால் தமிழ் மீனவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதன்படி கடந்த 2017. 03.13 ஆம் திகதி நடைபெற்ற தவணையின் போது குறித்த வழக்கானது எதிர்வரும் 2017.04.03 ஆம் திகதி க்கு ஒத்திவைக்கப்பட்டது.

இது தொடர்பில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் கொக்கிளாய் பகுதிக்கு கடந்த 2017.03.15 ஆம் திகதி நேரில் சென்று மீனவ சார் பாளர்களுடனும் அங்கு வந்திருந்த கடற்றொழில் பணி யாளர்களுடனும் நேரில் கலந் துரையாடினார்கள். அங்கு சட்டத்திற்கு முரணான தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்கள் பற்றியும் சுட்டிக்காட்டப்பட் டது.

இவை தவிர கொக் கிளாய் நீரேரியில் சட்டத் திற்கு முரணான தொழில் நடவடிக்கைகள் தொடர் வ தையும் மீனவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

அதனைத் தொடர்ந்து அவற்றைப் பார்வையிடும் பொருட்டு திணைக்களப் பணியாளர்கள் நீரேரிப் பகு திக்குச் சென்றனர். (2)



வைத்தியர் விமல் ஜயரட்ணத்தின் 30 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளை நிதியத்தின் ஏற்பாட்டில் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள தேசிய பாடசாலையான மு/மல்லாவி மத்திய கல்லூ ரியில் அமைக்கப்பட்ட "ராஜ்அகம்" மாணவிகளுக்கான தங்கும் விடுதி வைபவரீதியாக அண்மையில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

(படம்: மல்லாவி செய்தியாளர்)




# வேறு எதையும் நான் கேட்கவில்லை இரு பிள்ளைகளையும் தாருங்கள்

## தாயொருவர் கண்ணீர் மல்க கதறல்

என்னுடைய கணவர் இல்லையென்றாலும் பரவாயில்லை எனது இரண்டு பிள்ளைகளையும் தாங்கோ உங்களிடம் நான் வேறு எதனையும் கேட்கவில்லை என தாயொருவர் கதறி அழுத சம்பவம் அனைவரையும்



கண்கலங்க வைத்துள்ளது.

கிளிநொச்சியில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு "உண்மையான மாற்றத்திற்கான கருவி பெண்கள்" என்ற தொனிப்பொருளில் இலங்கை பாராளுமன்ற பெண் உறுப்பினர்கள் சங்கமானது நேற்று முன்தினம்கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் விசேட நிகழ்வொன்றை நடத்தியிருந்தது.

இந்த நிகழ்வின் இறுதியில் பாராளுமன்ற பெண்



உறுப்பினர்களின் சங்க அங்கத்தவர்களுடனான கலந்துரையாடல் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதன் போது எழுந்து மேடைக்கு அருகில் சென்ற தாயொரு வர் தனது கணவர் மற்றும் இரண்டு பிள்ளைகள் காணாமல் போயுள்ளதாகவும் அவர் களை விடுதலை செய்யு மாறும் அனைவருக்கும் முன் கண்ணீர் மல்க கதறி அழுதார்.

கடவுளே அம்மா என்னு டைய கணவர் இல்லையென் றாலும் பரவாயில்லை. எனது இரண்டு பிள்ளைகளையும் தாங்கோ. நான் என்னுடைய பிள்ளைகள் இன்றி அவலத் தில் வாழ்கின்றேன்.

உழைக் கின்ற பிள்ளைகள் இன்றி குடிசை வீட்டில் மழைக்கும் வெயிலுக்கும் முகம் கொடு த்து வாழ்ந்து வருகின்றேன். எனது பிள்ளைகளை விடு தலை செய்யுங்கள் எனக் கதறி அழுத சம்பவம் அனை வரையும் மனம் நெகிழ வைத்தது. (2-312)

# வீட்டுத்திட்டமின்றி வாழ்கின்றோம் காணி உரிமத்தை வழங்குங்கள்

## பன்னங்கண்டி மக்கள் மீண்டும் போராட்டம்

(பரந்தன்)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிற் குட்பட்ட பன்னங்கண்டி கிரா மத்தில் சரஸ்வதி கமம், ஜொனி குடியிருப்பு ஆகியவற்றில் வாழ்ந்து வரும் மக்கள் நேற்று முன்தினம் முதல் காணி அனுமதிப்பத் திரம் கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில் கடந்த 4 ஆம் திகதி முதல் சிவாபசுபதி கமம் மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு 15 ஆம் நாள் காணி உரிமையாளரின் சம்மதத்துடன் வீட்டுத் திட்டம் வழங்கப்படும் என கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்ததையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

இந்நிலையில் மற்றைய இரு கிராமங்களையும் சேர்ந்த மக்கள் நேற்று முன்தி னம் முதல் கவனயீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

சரஸ்வதி கமம் என அழைக்கப்படும் 47 ஏக்கர் காணி சுமார் 30 ஏக்கர் பகுதியில் 106 குடும்பங் களைச் சேர்ந்த 400 இற்கு




மேற்பட்ட குடும்ப அங்கத்த வர்களும் ஜொனி குடியி ருப்பு என அழைக்கப்படும் பகுதி யில் 16 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 60 இற்கு மேற்பட்ட குடும்ப உறுப்பினர் களும் வாழ்ந்து வருகின்றனர்.

தமது குடியிருப்பு காணிக்கான ஆவணங்கள் இல்லா மையால் அடிப்படை வசதி கள் மற்றும் நிரந்தர வீட்டுத் திட்டம் என்பன இதுவரை கிடைக்கவில்லை. எனவே இவ்வளவு காலமும் அடிப்படை உரிமை இல்லாத மக்களாக வாழ்ந்து விட்டோம். இனியும் வாழ முடியாது தயவு செய்து எமக்கான காணி உரிமத்தை வழங்குங்கள் எனக் கோரி கவனயீர்ப்பு போராட்ட மொ ன்றை ஆரம்பித்துள்ளனர்

அத்துடன் தமக்கான காணி உரிமம் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (2-312-15)

# போதைப்பொருள் பாவனையால் காசநோயாளர்கள் அதிகரிப்பு

உலக காசநோய் தினம் இன்றாகும். இதனை முன்னிட்டு இக் கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.



காச நோய் பரவும் விதம்


சுவாசப்பையில் காசநோய் உள்ள ஒருவர் (Smear (+)ve Pulmonary Tuberculosis)

1. இருமும் போதும்
2. தும்மும் போதும்
3. பலமாகக் கதைக்கும் போதும்
4. பலமாகச் சிரிக்கும் போதும் வாய்க்குழியிலிருந்து வெளிவரும் திரவத்துணிக்கைகள் இந்த பக்றீரியாக்களை கொண்டிருக்கும் மேற்படி துணிக்கைகள் உட்சுவாசிக்கும் காற்றுடன் மற்றவர்களுக்கு தொற்றுகிறது.

காற்றில் இருக்கும் கிருமிகள் நல்ல காற்றோட்டமான இடத்தில் இருக்கும் போது ஐதாக்கப்படும். அதேவேளை நல்ல சூரியவெளிச்சத்தில் இருபது நிமிடத்தில் அழிந்தும் போகும். ஆகவே காசநோயாளர்கள் நல்ல காற்றோட்டமானதும் சூரிய வெளிச்சம்படக்கூடியதுமான இடங்களில் பராமரிக்கப்பட வேண்டும்.

● உலகில் ஒவ்வொரு செக்கனுக்கும் ஒருவர் தொற்றுக்குள்ளாகின்றார். இவர்களில் 10 வீதமானோரே நோயாளர் ஆகின்றனர்.

இவ்வாறு சுகதேகி ஒருவரின் சுவாசப்பாதையூடாக உட்செல்லும் கிருமி சுவாசப்பையை அடைந்து அங்குள்ள கலங்களை அழித்து அங்கு பல்கிப்பெருகி பின்னர் குருதிச்சுற்றோட்டத்தில் இணைந்து எமது உடலின் எல்லாப்





பகுதிகளுக்கும் சென்று நோய்த்தாக்கத்தை ஏற்படுத்தும். எமது உடலில் நோய் எதிர்ப்புசக்தி நன்னிலையில் காணப்பட்டால், திண்குழியச்செயற்பாடு மூலம் இக்கிருமிகள் அழிக்கப்படும் அல்லது சிறைபிடிக்கப்படும். இவ்வாறு சிறை பிடிக்கப்பட்ட கிருமிகள் எமது உடலில் நீண்ட காலத்திற்கு காணப்படலாம். நோய் எதிர்ப்புசக்தி குறைவடையுமாயின் மீண்டும் கிருமி சிறையிலிருந்து வெளியேறி நோய்த் தாக்கத்தை உண்டு பண்ணக்கூடியது.

## இந்நோயால் அதிகளவில் பாதிப்படையக்கூடியவர்கள்

1. மதுபானப் பாவனையுள்ளோர்
2. புகைப்பிடிப்போர்
3. போதைப்பொருளுக்கு அடிமையானோர்
4. நீரிழிவு நோயாளிகள்
5. சிறுநீரக நோயாளிகள்
6. மந்தபோசாக்குள்ளோர்
7. மற்றும் நீண்டகால நோய்களினால் பாதிக்கப் பட்டோர்

## காசநோய்க்கானஅறிகுறிகள்

1. இரண்டு கிழமைகளுக்கு மேலாகத் தொடர்கின்ற இருமல்.
2. சளியுடன் இரத்தம் வெளியேறல்
3. மார்புப்பகுதியில் நோவு ஏற்படல்
4. உணவில் விருப்பமின்மை



சளியுடன் இரத்தம் வெளியேறல்



உணவில் விருப்பமின்மை

5. உடல் மெலிதல், நிறை குறைவு ஏற்படுதல்
6. இரவு வேளைகளில் மெல்லிய காய்ச்சலுடன் வியர்த்தல்.

இவ்வறிகுறிகள் ஒருவரில் காணப்படுமாயின் அவர் காசநோய்த்தொற்றுக்கு ஆளாகியுள்ளாரென 85% சந்தேகிக்க முடியும்.

## ஒருவர் காசநோய்த் தொற்றுக்குள்ளாகியுள்ளாரா என்பதைக் கண்டறியும் முறைகள்

■சளிப்பரிசோதனை

காசநோயை இனங்கண்டுகொள்வதற்கு பிரதான பரிசோதனை சளிப்பரிசோதனை ஆகும். இதற்கு நோயாளி மூன்று சளி மாதிரிகள் கொடுக்கவேண்டும். சளி மாதிரியினைக் கொடுக்கும்போது நோயாளி காற்றோட்டமான வெளியான இடத்திற்குச் சென்று நன்கு இருமி சளியைக் கொடுக்கவேண்டும். எச்சிலைக் கொடுக்கக் கூடாது. அதாவது இருதடவை ஆழமான சுவாசம் உள்ளெடுத்து வெளிவிட வேண்டும். பின் மூன்றாவது ஆழமான உட்சுவாசத்துடன் நன்றாக இருமி சளிமாதிரியைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

● முதலாவதுமாதிரி

நோயாளி முதலாவது தினத்தில் சிகிச்சை நிலையத்தில் நேரடியாகக் கொடுக்கவேண்டும். (Spot Sputum Sample)

● 2 ஆவது மாதிரி

நோயாளி காலை எழுந்தவுடன் தனதுவீட்டில் சேகரித்துக் கொள்ளவேண்டும். (அதற்கான பாத்திரம் சிகிச்சை நிலையத்தில் வழங்கப்படும்)

● 3ஆவது மாதிரி

இரண்டாவதுநாள் 2ஆவது மாதிரியை கொடுக்கச் செல்லும் போதுசிகிச்சை நிலையத்தில் மூன்றாவது சளி மாதிரிகொடுக்கப்படவேண்டும்.

● சளிப்படலம் சாயமூடப்பட்டு நுணுக்குக்காட்டியூடாக அவதானிக்கப்படும்.

■சளிப்பரிசோதனையானது,

நம்பகத்தன்மையானது, செலவுகுறைந்தது, விரைவாக செய்யலாம், விரைவாக முடிவை அறியலாம்,

■நெஞ்சுகதிர்ப்படம் ( X-Ray)

நெஞ்சுகதிர்ப்படத்தின் உதவியுடன் சுவாசப்பையில் கிருமித் தாக்கமேற்பட்டு அழிவடைந்த அல்லது நாரிழையங்களாக்கப்பட்ட பகுதிகளைக் கண்டறியமுடியும்.

## காசநோய்க்கான சிகிச்சையின் நோக்கம்

❖ நோயாளியை காசநோயில் இருந்து பாதுகாத்தல்
❖ இறப்பை தவிர்த்தலும் பிந்திய விளைவுகளைத் தவிர்த்தலும்
❖ மீளவும் காசநோய் ஏற்படுவதைத் தவிர்த்தல்
❖ காசநோய் சமூகத்தில் பரவுவதைத் தவிர்த்தல்

## காசநோய்க்கான சிகிச்சை

❖ புதிதாகப் பாதிக்கப்படும் காச நோயாளர்கள் (New cases) ஆறு மாதங்களும், மீண்டும் பாதிக்கப்படும் நோயாளர்கள் (Relapes> Defaulters> Treatment failures) எட்டுமாதங்களும் சிகிச்சைபெறவேண்டும்.

❖ நோயாளியின் உடல் நிறைக்கேற்ப மருந்துகள் வழங்கப்படும்.

❖ காசநோய்க்குரிய மருந்துகள் காலை சாப்பிடமுன் அரை மணித்தியாலங்களுக்கு முன்பாக மட்டுமே உட்கொள்ளவேண்டும்.

## காசநோய்க்கட்டுப்பாடு

காசநோய்க் கட்டுப்பாட்டில் முக்கியமானசெயல்கள் நோயாளிகளை இனம்காணல், நோயாளிகளுடன் தொடர்புடையவர்களைப் பரிசோதித்தல், மருந்துகளை இடையில் கைவிட்டவர்களை மீளவும் ஒழுங்காக மருந்தினை எடுப்பதற்கான நடவடிக்கையினை எடுத்தல், காசநோய் அதிகம் உள்ள சிறைச்சாலைகளில் விசேட கவனம் செலுத்தல், அதேபோல் காசநோயால் பாதிக்கப்பட்டோர் அதிகளவில் உள்ள பிரதேசங்களிலும் விஷேட மருத்துவ முகாம்களை ஒழுங்கு செய்து நடத்துதல், நீரிழிவு நோயாளிகளில் காசநோயின் அறிகுறிகளை ஆராய்தல், முதியவர்களில் காசநோய் அறிகுறிகளைஆராய்தல் என்பன. வேலைசெய்யும் இடங்களில் காசநோய் அறிகுறிகளிற்கு விசேட மருத்துவ பரிசோதனையினை ஊக்குவிக்கவேண்டும்.

காசநோயாளி பூரணமாகவும் இடைவிடாது சிகிச்சையைப் பெறுவதால்

1. காசநோயிலிருந்து நோயாளியை பாதுகாக்க முடியும்.
2. இறப்பிலிருந்தும் பிந்திய விளைவுகளிலிருந்தும் நோயாளியை பாதுகாக்க முடியும்.
3. மீளவும் நோயாளிக்கு காசநோய் ஏற்படுவதைத் தடுக்கமுடியும்.
4. காசநோய் சமூகத்தில் பரவுவதைத் தடுக்கமுடியும்.

சோமசுந்தரம் ரூபதாஸ்
பொதுச் சுகாதார பரிசோதகர்,
மார்புநோய்ச் சிகிச்சை நிலையம்,
யாழ்ப்பாணம்.

இலங்கையைப் பொறுத்தளவில்

| ஆண்டு | சளியில் கிருமி காணப்படுவோர் Smear (+)ve Pulmonary Tuberculosis | சளியில் கிருமி காணப்படாதோர் Smear (-)ve Pulmonary Tuberculosis | சுவாசப்பை தவிர்ந்த ஏனைய பகுதிகளில் காசநோயால் பாதிக்கப்பட்டோர் Extra Pulmonary Tuberculosis | மொத்தமாக பாதிக்கப்பட்டோர் Total cases |
|---|---|---|---|---|
| 2014 | 4801 | 1962 | 2710 | 9473 |
| 2015 | 4745 | 2058 | 2772 | 9575 |
| 2016 | 4517 | 1781 | 2591 | 8889 |


யாழ். மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டு 256 பேரும் 2015 ஆம் ஆண்டு 274 பேரும் 2016 ஆம் ஆண்டு 291 பேரும் காசநோயாளிகளாக இனங்காணப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தளவில்

| ஆண்டு | சளியில் கிருமி காணப்படுவோர் Smear (+)ve Pulmonary Tuberculosis | சளியில் கிருமி காணப்படாதோர் Smear (-)ve Pulmonary Tuberculosis | சுவாசப்பை தவிர்ந்த ஏனைய பகுதிகளில் காசநோயால் பாதிக்கப்பட்டோர் Extra Pulmonary Tuberculosis | மொத்தமாக பாதிக்கப்பட்டோர் Total cases |
|---|---|---|---|---|
| 2014 | 108 | 60 | 88 | 256 |
| 2015 | 121 | 64 | 89 | 274 |
| 2016 | 102 | 101 | 88 | 291 |

# மகிந்த ராஜபக்ஷ மீதான அச்சமே கால அவகாசத்திற்கான பின்னணி

## கூட்டு எதிர்க்கட்சி கூறுகிறது



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சிக்கு வந்து விடுவார் என்கின்ற அச்சம் அரசாங்கத்திற்கு உள்ளது. அவ்வாறு அவர் ஆட்சிக்கு வந்தால் சர்வதேச நாடுகள் அவரை நெருக்கடிக்குள்ளாக்குவதற்கான உபாயமாகவே இலங்கை அரசாங்கம் மனித உரிமைகள் பேரவையில் இரு வருட கால அவகாசம் கோரியுள்ளது. மேலும் அக்கால அவகாசத்திற்கு சில தமிழ் பிரிவினைவாதிள் எதிர்ப்புத் தெரிவித்தாலும் அதிகளவானோர் அதனை ஏற்றுக்கொண்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் பொரளையிலுள்ள என்.எம். பெரேரா நிலையத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"சர்வதேச நீதிபதிகளை அனுமதிக்கும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை. மேலும் அவ்வாறான விடயம் ஒன்றுக்கு உடன்படவில்லை" என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றில் குறிப்பிட்டிருந்தார். எனினும் அது உண்மைக்குப் புறம்பானதாகும். ஏனெனில் 2015 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். ஏனெனில் தமது நாட்டுக்கு எதிரான பிரேரணை ஒன்றுக்கு இலங்கையே முன்வந்து அனுசரணை வழங்கியிருந்தது. அவ்வாறானதொரு விடயத்தை வேறு நாடுகள் செய்திருக்கவில்லை.

எனவே அப்பிரேரணையின் ஆறாம் உறுப்பிரையின் பிரகாரம் யுத்தக்குற்றம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு பொதுநலவாய நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளைச் சேர்ந்த நீதிபதிகள், விசாரணையாளர்கள், சட்டத்தரணிகள் பங்கு கொள்ள முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே இலங்கை சட்டமா அதிபர் மற்றும் பொலிஸாரின் பணிகளையும் வெளிநாட்டவர்கள் மேற்கொள்ளும் அடிப்படையில் அதன் உள்ளார்ந்த அர்த்தம் அமைந்துள்ளது.

"2015 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட பிரேரணைக்கு அனுசரணை வழங்கியதுபோல் இம்முறை கொண்டுவரப்படவுள்ள பிரேரணைக்கும் அனுசரனை வழங்குகிறோம். ஆனால் திருத்தம் ஒன்றை மேற்கொள்வதற்கு இடமளிக்குமாறு அரசாங்கம் கோரியிருக்கலாம். அவ்வாறு செய்யாது 2015 ஆம்ஆண்டுநிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டு அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் இரு வருட கால அவகாசம் கோரியுள்ளது.

இரு வருட கால அவகாசம் கோருவதற்கு பின்னணி ஒன்றுள்ளது. அப்பின்னணியை அடிப்படையாகக் கொண்டுதான் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர செயற்பட்டுக்கொண்டிருக்கிறார். அதாவது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சிக்கு வந்துவிடுவார் என்ற அச்சம் அரசாங்கத்திற்கு உள்ளது. மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தால் மேற்கத்தேய நாடுகள் அவரை நெருக்கடிக்குள்ளாக்கும் துருப்புச் சீட்டொன்று தேவையாக உள்ளது.

எனவேதான் யுத்த குற்ற விடயத்தை ஒரே முறையில் தீர்த்துக்கொள்ளாமல் கால நீடிப்பு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. ஆகவேதான் தமிழ் பிரிவினைவாதிகளில் சிலர் இரு வருட கால அவகாசம் வழங்குவதை எதிர்த்தாலும் அதிகளவானோர் அதற்கு உடன்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஐ.நா.அறையில் ஈழத்தமிழர்களுடன் அன்புமணி ராமதாஸ் விசேட சந்திப்பு



பா.ம. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அன்புமணி ராமதாஸ் ஈழத்தமிழர்கள் குறித்து, மனித உரிமைகள் ஆர்வலர்கள் உள்ளிட்டவர்களுடன் ஐ.நா.அறையில் அவசர சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 34ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் இடம்பெற்று வரும் நிலையில், இலங்கை குறித்த மனித உரிமைகள் ஆணையரின் அறிக்கை நேற்று முன்தினம் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.


இந்நிலையிலேயே இந்த அவசர சந்திப்பு இடம்பெற்றுள்ளது. மேலும், அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

லவ்சான் மாநில உறுப்பினர் நமசிவாயம், வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன், எம்.கே. சிவாஜிலிங்கம், மனித உரிமைகள் ஆர்வலர்கள், சுவிஸ் இளையோர் அமைப்பினர் எனப் பலரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும், தமிழின உணர்வாளரும், திரைப்பட இயக்குநருமான வ.கௌதமன் உள்ளிட்டவர்களும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நல்ல தீர்வை பெற்றுத் தாருங்கள்

## காணாமற் போனவர்களின் உறவினர்கள் பிரதேச செயலாளரிடம் கோரிக்கை



நல்லதொரு தீர்வை தங்களின் உயர் அதிகாரிகளின் மூலம் பெற்றுத்தர ஆவன செய்யுமாறு கோரி மருதங்கேணிப் பிரதேச செயலருக்கு காணாமற் போனோரின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காணாமற் போனோரின் உறவினர்கள் மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் கவனயீர்ப்புப் போராட்டத்தினை நடத்தி வருகின்றனர்.

இப்போராட்டத்தில் எட்டாம் நாளான நேற்று முன்தினம் போராட்டம் இடம்பெறும் பகுதிக்கு சென்ற மருதங்கேணிப் பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் மக்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தாங்கள் எட்டு வருடங்களாக பிள்ளைகளைத் தேடித் திரிகின்றோம். பதிவுகளை மேற்கொண்டு எவ்வித தீர்வும் கிடைக்கப் பெறாத நிலையில் வீதியில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

எங்களின் போராட்டத்தை தங்களின் மேலதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய தீர்வினை பெற்று தருவதற்கு ஆவன செய்யுமாறு தங்களை இருகரம் கூப்பி வேண்டி நிற்கின்றோம் என்றனர். (இ-60)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 30 | 80 | 50 | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 80 | 100 | 90 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 90 | 120 | 120 | 100 | 100 |
| தக்காளி | 120 | 100 | 40 | 100 | 100 | 120 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 80 | 80 | 60 |
| கோவா | 30 | 60 | 20 | 30 | 40 | 50 | 40 |
| கரட் | 80 | 60 | 80 | 80 | 60 | 160 | 70 |
| பூசணி | 50 | 60 | 30 | 60 | 60 | 80 | 60 |
| புடோல் | 80 | 60 | 50 | 90 | 60 | 80 | 50 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 60 | 60 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 60 | 80 | 80 | 80 | 120 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 60 | 75 | 100 | 90 | 100 | 90 |
| பாகற்காய் | 200 | 60 | 150 | 240 | 160 | 160 | 100 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 80 | 120 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 50 | 100 | — | 50 | 100 | 100 | 70 |
| பயற்றங்காய் | 120 | 100 | 90 | 100 | 60 | 120 | 120 |
| லீக்ஸ் | 50 | 100 | 60 | 100 | 60 | 100 | 50 |
| பீற்றூட் | 50 | 100 | 40 | 60 | 80 | 80 | 50 |
| கறிமிளகாய் | 160 | 100 | 80 | 160 | 120 | 160 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 400 | 320 | 350 | 400 | 300 |
| போஞ்சி | 150 | 100 | 50 | 240 | 120 | 200 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 20 | 10 | 50 | — | 30 | 20 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 20 | 30 | 30 | 40 | 50 |
| தேசிக்காய் | 80 | 20 | 100 | 80 | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 50 | 70 | 70 | 30-60 | 60 |
| இராசவள்ளி | 200 | 300 | 180 | 180 | 200 | 200 | 140 |
| வெங்காயப்பூ | 80 | 100 | 40 | 100 | 100 | 200 | 160 |
| முள்ளங்கி | 60 | 60 | 25 | 60 | 60 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 15 | 30 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 70 | 60 | 50 | 60 | 50 | 60 | 100 |

# பிரிட்டன் பாராளுமன்றம் அருகே தீவிரவாதி துப்பாக்கிச் சூடு!

## 5 பேர் பலி! பலர் படுகாயம்





(லண்டன்)

லண்டனில் நடந்த தீவிரவாத துப்பாக்கிச்சூடு தாக்குதலில் பலி எண்ணிக்கை 5 ஆக உயர்ந்துள்ளது. படுகாயமடைந்த 40 பேர் தொடர்ந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

பிரிட்டன் தலைநகரம் லண்டனில் தேம்ஸ் நதிக்கரையையொட்டி பாராளுமன்ற கட்டடம் உள்ளது. நேற்று முன்தினம் இங்கிலாந்து நேரப்படி பிற்பகல் 2.30 மணிஅளவில் பாராளுமன்ற கூட்டம் நடந்து கொண்டிருந்தது. பாராளுமன்றத்தையொட்டி தேம்ஸ் நதியில் வெஸ்ட்மினிஸ்டர் பாலம் இருக்கிறது. இந்த பாலத்தின் மக்கள் கூட்டமாக நடந்து வருவது வழக்கம்.

தீவிரவாதி ஒருவன் மிக வேகத்தில் இந்த பாலத்தின் வழியாக காரை செலுத்திக் கொண்டு பாராளுமன்றம் நோக்கி வந்தான். இதில் பாலத்தில் நடந்து வந்தவர்கள் மீது கார் மோதியது.

அப்போது பாராளுமன்ற வளாகத்தையொட்டி அமைக்கப்பட்டுள்ள இரும்பு வேலியில் கார் மோதியது. காரை ஓட்டிவந்த தீவிரவாதி அதில் இறங்கிபாராளுமன்றவாசலை நோக்கி ஓடிவந்தான். அவனது கையில் கத்தி ஒன்று இருந்தது.

இதை பார்த்ததும் அங்கு பாதுகாப்புக்கு நின்ற பொலிஸ் அதிகாரி கெய்தர்பால்மர் அவனை தடுப்பதற்காக ஓடினார். அந்த பொலிஸ்காரரர் கையில் ஆயுதம் எதுவும் இல்லை. தீவிரவாதி பொலிஸ் அதிகாரியை கத்தியால் குத்தினான். இதில் அந்த இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

பின்னர் பாராளுமன்றத்தில் நுழைவதற்காக தீவிரவாதி ஓடினான். இதற்குள் உஷாரடைந்த பொலிஸார் அவனை நோக்கி சரமாரியாகச் சுட்டனர். இதில் தீவிரவாதி உயிரிழந்தான்.

பாலத்தில் தீவிரவாதி கார் மோதியதில் 2 பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். 41 பேர் படுகாயமடைந்திருந்தனர். அவர்களில் ஒருவர் வைத்தியசாலையில் உயிரிழந்தார். 40 பேர் தொடர்ந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இந்த தாக்குதலில் பொலிஸ் அதிகாரி உள்ளிட்ட 4 பேரும் தீவிரவாதியும் இறந்துள்ளனர். இதன்படி பலி எண்ணிக்கை 5 ஆக உயர்ந்துள்ளது. (இ)




## பிரித்தானியாவிற்கு அமெரிக்கா முழு ஒத்துழைப்பை வழங்கும்

### ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவிப்பு

(லண்டன்)

பிரித்தானியாவில் 5 பேரின் உயிரை காவுகொண்ட நாடாளுமன்ற வளாகத் தாக்குதலுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன்னிறுத்துவதற்கு முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்குவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

குறித்த தாக்குதலை அடுத்து பிரித்தானிய பிரதமர் தெரேசா மே-ஐ தொலைபேசியில் தொடர்புகொண்ட ட்ரம்ப் இவ்வாறு தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்.

தீவிரவாத செயற்பாடுகள் எம்மை துயரில் ஆழ்த்தியுள்ளன. பிரித்தானிய மக்கள் இன்று அனுபவிக்கும் வேதனையை எம்மால் நன்கு உணர முடியும் என பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்சுவா ஹொலண்ட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜேர்மன், ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா மற்றும் ரஷ்யா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களும் பிரித்தானியாவிற்கு தமது ஆறுதலையும் ஆதரவையும் வெளிப்படுத்தினர்.

லண்டனிலுள்ள பிரித்தானிய நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற தாக்குதலில் பொலிஸ் அதிகாரி உட்பட நால்வர் உயிரிழந்தனர். அதனை தொடர்ந்து பாதுகாப்பு அதிகாரிகள் நடத்திய பதில் தாக்குதலில் தாக்குதல்தாரியும் கொல்லப்பட்டுள்ளார்.

சர்வதேச தீவிரவாதிகளின் தூண்டுதலுக்கு அமையவே குறித்த தாக்குதல் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படுவதாக பெருநகர உதவிப் பொலிஸ் ஆணையாளர் மார் ரௌளி தெரிவித்துள்ளார். (இ-12)

## லண்டன் தாக்குதல் குறித்து இந்தியப் பிரதமர் வருத்தம்



(டில்லி)

லண்டனில் நடந்த தீவிரவாதத் தாக்குதல் ஆழ்ந்த கவலை அளிப்பதாக உள்ளது. இந்த கடினமான நேரத்தில் இங்கிலாந்துக்கு இந்தியா எப்போதும் துணை நிற்கும் என்று பிரதமர் மோடி டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

லண்டன் பாராளுமன்ற வளாகத்தில் நடந்த தாக்தல் தொடர்பாக பிரதமர் மோடி தனது டுவிட்டரில் கூறியிருப்பதாவது,

லண்டனில் நடந்த தீவிரவாதத் தாக்குதல் ஆழ்ந்த கவலை அளிப்பதாக உள்ளது.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர்களை நினைத்து அவர்களுக்காக பிரார்த்தனை செய்கிறோம்.

இந்த கடினமான நேரத்தில் இங்கிலாந்துக்கும் அதன் பிரதமர் தெரசாவுக்கும் இந்தியா எப்போதும் துணை நிற்கும். இவ்வாறு மோடி தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார். (இ-12)

## பணத்துக்கும் பாசத்துக்கும் இடையே போட்டி நடக்கிறது - மதுசூதனன்



ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் பணத்துக்கும் பாசத்துக்கும் இடையேதான் போட்டி நடக்கிறது என ஓ.பி.எஸ். அணியைச் சேர்ந்த மதுசூதனன் கூறியுள்ளார். ஆர்.கே.நகர் தொகுதியில் ஓ.பி.எஸ். அணி சார்பில் போட்டியிடும் மதுசூதனன் நேற்றுக் காலை அண்ணா, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா சமாதிகளில் மலர்தூவி அஞ்சலி செலுத்திவிட்டு நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-12)

## ரக்கா பாடசாலை மீது விமானத் தாக்குதல்

### 33 பேர் உயிரிழப்பு

(ரக்கா)

ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடிக்குள் சிக்கியுள்ள சிரியாவின் ரக்கா நகரிலுள்ள கிராமமொன்றில் பாடசாலை மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட விமான தாக்குதலில் 33 பேர் உயிரிழந்துள்ளதாக மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பு குழு தெரிவித்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் தங்கி யிருந்த பாடசாலை கட்டடம் மீதே குறித்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கட்டடத்தில் மோதல்களினால் இடம்பெயர்ந்த சுமார் 50 குடும்பங்கள் தங்கியிருந்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் இடம்பெற்ற பகுதியில் தொடர்ந்து மீட்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், கட்டடத்தின் இடிபாடுகளுக்குள் சிக்கி மேலும் பலர் உயிரிழந்திருக்கலாம் என அஞ் சப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-12)

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு
– திருவள்ளுவர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## போரில் கொல்லப்பட்ட ஆத்மாக்கள் நாம் ஒருபோதும் மன்னிக்கமாட்டோம்...

அஃதொரு பிரபஞ்ச அண்டவெளி. நாம் சமயப் பாடங்களில் கற்ற தெய்வேந்திர மாளிகைகள். இது தேவலோகமாக இருக்கும் போலும்.

ஒரு மறு உலகில் நிற்பதை உணர முடிகிறது. இங்கு ஏன்தான் வந்தேன். ஒன்றும் புரியவில்லையாயினும் அங்கு நடக்கின்ற காட்சிகள் நமக்கு அதிசயமாகவே இருந்தன.

வெண்ணிற ஆடை அணிந்த பல்லாயிரக் கணக்கானவர்கள் ஒரு மண்டபத்தில் கூடியிருக்கின்றனர்.

இங்கு போல் அங்கு தலைமை இல்லை. அனைவரும் சமம். இவர்கள் யார்? ஏன் கூடியிருக்கிறார்கள்? எதுவும் புரியவில்லை.

அட! அவர்களின் உலகுக்கு வந்துவிட்டு எதுவும் புரியவில்லை என்று புலம்புவது அர்த்தமில்லை என்பதை மட்டும் உணர்ந்து கொண்டேன்.

மறைந்திருந்து பார்ப்பது மட்டுமே ஒரே வழி என்று அங்கிருக்கக்கூடிய மண்டபத்தில் மறைந்து நின்றேன்.

கூட்டத்தின் தொடக்கம் இறைவணக்கமாக இருக்கிறது. எல்லாம் வல்ல பரம்பொருளே இலங்கைத் தீவில் நடந்த கொடும் யுத்தத்தில் கொல்லப்பட்ட தமிழர்கள் நாம்.

எங்களுக்கு நடந்த அநீதிக்கு இன்னமும் பூலோகத்தில் தீர்ப்பு வழங்கப்படவில்லை.

ஐ.நா சபையின் கூட்டத்தொடரில் இலங்கை அரசுக்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது. ஈழத் தமிழர்களின் அரசியல் தலைமை என்று தங்களை அடையாளப்படுத்துவோர் எங்களுக்குத் துரோகம் இழைத்துள்ளனர்.

எங்களை நினைந்து எங்கள் உறவுகள் கண்ணீர் விடும் கொடூரம் எங்களை வாட்டுகிறது.

இந்த வார்த்தையோடு அந்த மண்டபத்தில் இருந்தவர்கள் அழுது கண்ணீர் விடுகின்ற காட்சிகளைப் பார்த்தபோது என் இதயம் வெடிக்கும் போல் இருந்தது.

இறைவா! எங்கள் உடல் இலங்கையில் வைத்து அழிக்கப்பட்டுவிட்டது. தமிழர்கள் என்பதற்காக நடந்த அநீதி அது.

துப்பாக்கியால் சுட்டு, கத்தியால் குத்தி, நெருப்பால் எரித்து, மண்ணில் புதைத்து, கயிற்றில் கட்டி கடலில் வீசி... இப்படி மிகக் கொடூரமான முறையில் எங்கள் உடலில் இருந்து எம் உயிர் பிரிக்கப்பட்டது.

இந்த வேதனை கொஞ்சமல்ல. பழுத்து விழும் பழம் போல, எங்கள் உயிர்களும் பழுத்த உடலில் இருந்தே பிரிய வேண்டும்.

ஆனால் வாழ வேண்டிய வயதில், எங்கள் உயிர்களைப் பிரித்ததால், எங்கள் ஆத்மா இன்னமும் அவலத்தை உணர்கிறது. எனினும் இந்த உண்மையை பூலோகத்தார் புரியாமல் உள்ளனர்.

எங்கள் உறவுகள் எங்களை நினைந்து நெக்குருகும் போது அதை எம்மால் காண முடிகிறது. தாங்க முடியவில்லை.

இந்த உண்மையும் பூலோகத்தில் உணரப்படவில்லை. ஒன்று மட்டும் சொல்கிறோம். எங்களைக் கொன்றவர்களையும் நாம் மன்னிப்போம்.

ஆனால் எங்கள் உறவுகளின் வாக்குகளில் பதவியைப் பெற்றுவிட்டு எங்களைக் கொன்றவர்களுக்கு – எங்களை வதைத்தவர்களுக்கு தண்டனை கிடைப்பதைத் தடுத்து,

கால அவகாசம் வழங்குவதற்கு உதவிய எம் இனத்துரோகிகளை நாம் ஒருபோதும் மன்னிக்கமாட்டோம். இது சத்தியம்... இது சத்தியம்...

இந்தக் கோசத்தால் அந்த மண்டபம் அதிர்ந்தது. விடமாட்டோம் விடமாட்டோம் தண்டிப்போம். எங்களுக்குப் பாதகம் செய்த பாதகர்களைத் தண்டிப்போம்.

எங்கள் உறவுகளை நம்பவைத்து ஏமாற்றிய நாசகாரர்களை வதைப்போம். வாட்டுவோம். இது சத்தியம்... இது சத்தியம்...

ஓ! ஆத்மாக்களின் குரல் தேவலோகத்தை அதிர வைக்க பயத்தின் பீதியால் எடுத்தேன் ஓட்டம்.

அம்மா! என்ற சத்தத்தோடு கட்டிலில் இருந்து கீழே விழுந்தேன். ஓ! கண்டது கனவு என்றாலும் அந்தச் சம்பவம் நீங்கா நினைவாயிற்று.

# பிரபாகரனிடம் இருந்து கிடைக்கப்பெற்ற கைக்கடிகாரத்தையே கட்டியிருக்கின்றேன்

## ஜெனிவாவில் அருட்தந்தை இம்மானுவேல் தெரிவிப்பு

(ஜெனிவா)

நான் ஆரம்ப காலங்களில் எமது இனத்துக்காக குரல் கொடுத்ததாகவும் தற்போது எதனையும் செய்வதில்லை எனக் கூறுவது பிழையான விடயமாகும். சம்பந்தன், விக்னேஸ்வரன் ஆகியோருக்கு முன்பாகவே தமிழர் பிரச்சினையை சர்வதேசத்தில் பகிரங்கப்படுத்தினேன். என்மீது எந்த குற்றம் சுமத்தினாலும் நான் கடவுளுக்குள் பிரமாணிக்கமாக இருக்கின்றேன்.

பிரபாகரன் பிறப்பதற்கு முன்னரே எமது இனத்துக்கான போராட்டத்தை ஆரம்பித்தவன் நான். நான் இன்று கட்டியிருக்கும் கடிகாரம் கூட பிரபாகரனால் வழங்கப்பட்டது என ஜெனிவாவில் அருட்தந்தை எஸ்.ஜே.இம்மானுவேல் தெரிவித்தார்.

எமது நாட்டில் இடம்பெற்ற இன அழிப்பு தொடர்பில் 15 வருடங்களுக்கு முதலே அமெரிக்காவில் தெரிவித்தேன். விக்னேஸ்வரன், சம்பந்தன் ஆகியோருக்கு முன்னரே இலங்கையில் இடம்பெற்ற இனவழிப்பு தொடர்பில் சர்வதேசத்துக்கு பகிரங்கப்படுத்தினேன். இதனை எனது புத்தகங்களிலும் தெரிவித்துள்ளேன்.

69 ஆண்டுகளாக இடம்பெற்ற இன அழிப்பு என்ற கருத்தில் எவ்வித மாற்றமும் இல்லை.

இலங்கையில் இன அழிப்பு நடைபெறவில்லை என நான் எங்கும் தெரிவித்ததில்லை. இது தொடர்பில் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் பல கடிதங்களை எழுதியுள்ளேன்.

1956 ஆம் ஆண்டு நான் படித்துக்கொண்டிருந்த போது சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து என்னை மல்வானை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றார்கள்.

1958 ஆம் ஆண்டு நான் யாழ்ப்பாணத்தில் போரிட்டேன்.

செல்வநாயகம், பிரபாகரன் ஆகியோர் எமது இனத்துக்காக போராடியவர்கள். நான் இயேசுவுக்கு பிரமாணிக்கமாக இருக்கின்றவன். என் மீது குற்றம் சுமத்தி கொடும்பாவி எரித்தாலும் நான் இறைவனுக்குள் உண்மையானவனாக இருக்கின்றேன்.

இன்று நான் கட்டியிருக்கும் கடிகாரம் கூட பிரபாகரனிடம் இருந்து கிடைக்கப்பெற்றது. பிரபாகரன் இன்று இருந்திருந்தால் எதனை செய்திருப்பார்.

நீங்கள்தான் நினைக்கின்றீர்கள் பிரபாகரனின் பிள்ளைகள் என்று. தற்போதைய இளைஞர்கள் எதனையும் அறியாது நான் இனத்தைக் காட்டிக் கொடுத்தவன், எமது இனத்தை கைவிட்டவன் என்று என் மீது குற்றம் சுமத்துகின்றார்கள்.

நான் யாருக்கும் அடிமையாகவோ அல்லது எந்தக் கட்சியையும் சார்ந்தோ இருக்கவில்லை. குறிப்பாக பிரபாகரன் பிறப்பதற்கு முன்னரே எனது போராட்டத்தை ஆரம்பித்து விட்டேன்.

இந்தப் போராட்டத்தை நான் ஒரு கிறிஸ்தவன் என்ற ரீதியிலேயே நோக்குகின்றேன். ஒரு மனிதனுக்கு எதிரான அநீதி என்ற அடிப்படையிலேயே நோக்குகின்றேன்.

நான் மரணிக்கும் வரை கடவுளுக்குள் பிரமாணிக்கமாக இருப்பேன். கடவுள் என்னைக் காப்பாற்றுவார். என் மீது குற்றம் சுமத்துபவர்கள் குற்றம் சுமத்திக் கொண்டு இருக்கட்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## யாப்பகூவாவைப் புரிந்து கொள்ளுதல்

(யாழ்ப்பாணம்)

ஆவணக் காப்பகத்தினால் ஒழுங்கமைக் கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் 44 ஆவது நிகழ்வாக "யாப்பகூவாவைப் புரிந்து கொளளுதல்" என்ற தலைப்பில். கலை வரலாற்றாளரும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளரும் கவிஞருமான "பாக்கியநாதன் அகிலன் உரை நிகழ்த்தவுள்ளார்.

தேசியவாதப் பின்புலத்தில் வரலாற்று இடங்களைக் கட்டமைத்தல் என்ற செயற்பாடானது இலங்கைக் கலை வரலாற்றை எழுதுவதற்கான சவாலாகவும். அதன் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதாகவும் உள்ளது. ஜனரஞ்சகமான வரலாற்று எடுத்துரைப்புக்களின் தேசத்தை கட்டமைக்கும் மேற்படி திட்டத்தினை யாப்பகூவாவை முன்வைத்து விவாதிக்கிறது.

, இந்நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை 26 ஆம் திகதி முற்பகல் 10 மணிதொடக்கம் 12 மணி வரை சமகாலக் கலை. கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகம், 199.கோவில் வீதி,நல்லூரில் இடம்பெறும். (இ-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை 8 மணியிலிருந்து மாலை 6 மணிவரை யாழ்.பிரதேசத்தில் நெடுந்தீவு பிரதேசம், தோப்பு, அச்சுவேலி ஆஸ்பத்திரி, அச்சுவேலிநகர், பத்தமேனி, கதிரிப்பாய், இடைக்காடு, தம்பாலை, செல்வநாயகபுரம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் சாந்தசோலை கிராமம், தேக்கவத்தை பிரதேசம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் அத்திக்குளி, மாதோட்டம், இலுப்பைக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.(இ-9)

## சங்கிலி கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டு போதனா வைத்தியசாலை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி காரியாலய காசாளரிடம் பெற்றுக்கொள்ள முடியும் என பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சமாதான நீதவான்கள், சங்க உறுப்பினர்கள் யாழ்.மாவட்ட தேசோதய சபை உறுப்பினர்கள், சர்வோதய நிறுவன உறுப்பினர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அரியாலையிலுள்ள யாழ்.மாவட்ட சர்வோதய நிறுவன மண்டபத்தில் மாவட்ட தேசோதய சபைத் தலைவர் கலாநிதி. நா. தனேந்திரன் தலைமையில் இடம்பெறும்.

இக்கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## பிளாஸ்டிக் கொள்வனவு

(கரணவாய்)

சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை கருத்திலெடுத்த கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் பிளாஸ்டிக் போத்தல்களை கொள்வனவு செய்து மீள் சுழற்சிக்கு உபயோகப்படுத்தவுள்ளது. இக் கொள்வனவை சங்க எல்லைப் பரப்பிலுள்ள கிளைகள் ரீதியில் மேற்கொள்ள சங்க நிர்வாகம் தீர்மானித்துள்ளது என பொது முகாமையாளர் எஸ். நேசராசா அறிவித்துள்ளார் . (இ-60)

## சாஸ்திரங்கள்

✦ தெய்வச் சிலைகள் கண்ணைத் திறந்து பார்ப்பதும் சிரிப்பதும் கண்ணை மூடிக் கொள்வதும் எங்கு நிகழ்கிறதோ அங்கு கலகம் உண்டாகும். கற்களில் நீர் கசிவது பயம் உண்டாக்கும். அரசனுக்கோ பெரிய மனிதருக்கோ மரணம் வரும்.

-நாரதர் தர்மருக்கு கூறியது

✦ கோயிலிலும் மாளிகையிலும் ஆயுதக் கிடங்கிலும் தேன்கூடு கட்டியிருந்தால் நாடே அழியும். பூமி வெடித்தால் தேசம் கெடும். மன்னன் இறப்பான்.

-நாரதர் தர்மருக்கு கூறியது

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### இறை வழிபாடு ஒரு பயிற்சி

❖ இறைவன் அனைவருக்கும் நெருக்கமானவன். எவர் பரிந்துரையுமின்றி அவனை நேராக நெருங்க முடியும். அவனிடம் உதவி கோர முடியும்.

❖ எவர் தன் இறைவனின் சந்திப்பை எதிர்பார்த்தவராய் இருக்கின்றாரோ, அவர் நற்செயல்புரியட்டும். அடிபணிவதில் தன் இறைவனுடன் யாரையும் இணை வைக்காதிருக்கட்டும்.

❖ உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டிருக்கின்றது (அதன் மூலம்) நீங்கள் இறை அச்சமுடையவர்களாய்த் திகழக்கூடும்.


❖ இறைவழிபாடுகள் சடங்குகள் அல்ல. இறையச்சம், ஒழுக்கம் ஆகியவற்றை அடைவதற்கான பயிற்சிகளே அவை.


❖ சேமிப்பில் நிர்ணயிக்கப்பட்ட ஒரு பகுதியை தானத்ர்மமாக கட்டாயம் வழங்க வேண்டும். "ஜகாத்" என்று அழைக்கப்படும் இக்கடமை தொழுகைக்கு அடுத்த கடமையாகும்.

❖ எங்கள் இறைவனே! நிச்சயமாக நீ தான் எல்லாவற்றையும் செவியேற்பவனாகவும், நன்கறிபவனாகவும் இருக்கின்றாய். உனக்கே நாங்கள் அடி பணிகிறோம். மேலும் உன்னிடமே நாங்கள் உதவி கேட்கிறோம்.

- வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து

# புங்குடுதீவில் நடைபெற்ற தாயகம் அமைப்பின் உதைபந்தாட்ட போட்டியும் பரிசளிப்பு விழாவும்







"புங்குடுதீவு தாயகம் சமூக சேவையகம்" அமைப்பின் சார்பாக புங்குடுதீவிலுள்ள அனைத்து விளையாட்டுக் கழகங்களுக்குமிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி கடந்த சனிக்கிழமை காலை ஆரம்பமாகி நடைபெற்று, இறுதிப் போட்டி நடைபெற்றதுடன் பரிசளிப்பு விழாவும் நடைபெற்றது.


மேற்படி உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி, "தாயகம்" அமைப்பின் நிறுவனர்களான, அமரர்கள் சொக்கலிங்கம் சீதேவிப்பிள்ளை (நாகேஷ்) அவர்களில் அமரர் திருமதி சொக்கலிங்கம் சீதேவிப்பிள்ளை (நாகேஷ்) அவர்களின் பிறந்த தினத்தை (19.03.2017) முன்னிட்டு, மேற்படி விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

அன்றையதினம் அரையிறுதிப் போட்டி, இறுதிப் போட்டி, பரிசளிப்பு விழா போன்றவற்றுக்கு முன்பாக, புங்குடுதீவில் "வரலாற்றில் முதன் முறையாகக் களம் கண்ட" இரண்டு விளையாட்டுக் கழகங்களான, "தாயகம்" விளையாட்டுக் கழகமும், "வயலூர் முருகன்" விளையாட்டுக்கழகமும், "காட்சி உதைபந்தாட்டப் போட்டி"யில் ஈடுபட்டு நீண்டநேர பிரயத்தனங்களில் மத்தியிலும் சமநிலையில் முடிவடைந்ததைத் தொடர்ந்து, சமநிலை தவிர்ப்பு உதையில் "வயலூர் முருகன்" விளையாட்டுக் கழகம், "தாயகம்" விளையாட்டுக்கழகத்தை மூன்றுக்கு இரண்டு (3 - 2) கோல் கணக்கில் வெற்றியீட்டி, "வயலூர் முருகன்" விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டி உள்ளது.

முதலில் "நண்பர்கள்" விளையாட்டுக் கழகமும், "சன் ஸ்ரார்" விளையாட்டுக் கழகமும் அரை இறுதிப் போட்டியில் மோதி, "சன் ஸ்ரார்" விளையாட்டுக் கழகம், "நண்பர்கள்" விளையாட்டுக் கழகத்தை இரண்டுக்கு சைபர் (2-0) கோல் கணக்கில் வெற்றியீட்டி, "சன் ஸ்ரார்" விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டி இறுதிப் போட்டிக்கு தெரிவாகி உள்ள மற்றொரு விளையாட்டுக் கழகமான "சென் சேவியர்" விளையாட்டுக் கழகத்துடன் இறுதிப் போட்டியில் மோதியது.

இறுதிப் போட்டியில் "சென் சேவியர்" விளையாட்டுக் கழகமும், "சன் ஸ்ரார்" விளையாட்டுக் கழகமும் இறுதிப் போட்டியில் மோதி, "சென் சேவியர்" விளையாட்டுக் கழகம், "சன் ஸ்ரார்" விளையாட்டுக் கழகத்தை இரண்டுக்கு சைபர் (2-0) கோல் கணக்கில் வெற்றியீட்டி, "சென் சேவியர்" விளையாட்டுக் கழகம்" தாயகம் சமூக சேவை அகத்தின்", அமரர் சொக்கலிங்கம் சீதேவிப்பிள்ளை (நாகேஷ்) வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இதேவேளை இரண்டாவது இடத்தைப் பிடித்த "சன் ஸ்ரார்" விளையாட்டுக் கழகத்தினர் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.



சிறந்த விளையாட்டு வீரர்களாக, இறுப்பிட்டி "ஐங்கரன்" விளையாட்டுக் கழக வீரராக செல்வன். அஜந்தன், "காந்தி" விளையாட்டுக் கழக வீரராக. அமல்ராஜ், "நண்பர்கள்" விளையாட்டுக் கழக வீரராக. அஜய், "வயலூர் முருகன்" விளையாட்டுக் கழக வீரராக. அருண்குமார், "அம்பாள்" விளையாட்டுக் கழக வீரராக நிசாந்தன், "பாரதி" விளையாட்டுக் கழக வீரராக. சாருஜன், "ஈஸ்ரன்" விளையாட்டுக் கழக வீர ராக சுதர்சன், "சன் ஸ்ரார்" விளையாட்டுக் கழக வீர ராக கலிதரன், "சென் சேவியர்" விளையாட்டுக் கழக வீரராக எமோஷன், "தாயகம்" விளையாட்டுக் கழக வீரராக நிரோ ஆகியோருக்கு அமரர் சொக்கலிங்கம் சீதேவிப்பிள்ளை (நாகேஷ்) ஞாபகார்த்த கிண்ணம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

சிறந்த விளையாட்டுக் கழகமாக "நேர்மை, ஒழுங்கு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" போன்ற அடிப்படையில், "வயலூர் முருகன்" விளையாட்டுக் கழகம் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டது. அத்தோடு "தாயகம்" விளையாட்டுக் கழகத்துக்கு, "நேர்மை, ஒழுங்கு" என்பதை கருத்தில் கொண்டு, வளர்ந்து வரும் விளையாட்டுக்கழகம் என்ற ரீதியில் "தாயகம்" விளையாட்டுக் கழகத்துக்கு சிறப்புப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

அத்தோடு, பாரதி விளையாட்டுக் கழகத்தினர், மைதானம்தந்து உதவியமைக்காக "நினைவுப் பரிசில்" வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (க-281)

# வல்வை வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி இறுதிப் போட்டியில் இளங்கதிர்





விளையாட்டுச் செய்திகள்

வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் விளையாட்டுப் போட்டியின் ஓர் அங்கமான உதைபந்தாட்ட போட்டியின் அரையிறுதி ஆட்டமானது (22. 03.2017) அன்று தீருவில் மைதானத்தில் இடம்பெற்றது.

அந்த வகையில் இடம் பெற்ற அரையிறுதியாட்டத்தில் ரேவடி அணியினை எதிர்த்து இளங்கதிர் அணி மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இவ்வாட்டத்தில் இளங்கதிர் அணியானது 3-1 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது.

இளங்கதிர் அணி சார்பாக ஜெகதாஸ் , தனுசன் , கபில்ராஜ் ஆகியோர் தலா ஒரு கோல்களை பெற்றுக் கொடுத்தனர்.

இறுதிப்போட்டியில் இளங்கதிர் அணியானது நேதாஜி அணியினை எதிர்த்து விளையாடவுள்ளது.

இரு அணிகளும் இறுதிப் போட்டியில் கிட்டத்தட்ட மூன்று வருடங்களின் (கடற்கரை உதைபந்தாட்டத்தை தவிர்த்து ) பின் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# 3 ஆம் சுற்றில் கலைமதி



யாழ்ப்பாணம், வலிகாமம், பருத்தித்துறை, வடமராட்சி தீவக லீக்குகளின் அனுமதியுடன் நடைபெறும் புதிய விடியல் உதைபந்தாட்ட தொடரில் நேற்று முன்தினம் 22 ஆம் திகதி நடைபெற்ற இரண்டாம் சுற்றில் நவிண்டில் கலைமதி வி.க எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் வி.க.மோதவிருந்தது. போட்டியில் குறித்த நேரத்திற்கு யங்கம்பன்ஸ் சமுகமளிக்காததால் எதிரணிக்கு வெற்றி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதனூடாக கலைமதி மூன்றாம் சுற்றுக்கு முன்னேறியது. (க)

# துறையூர் ஐயனார் அணி அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்



புதிய விடியல் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், வலிகாமம், பருத்தித்துறை, வடமராட்சி தீவக லீக்குகளின் அனுமதியுடன் நடைபெறும் புதிய விடியல் உதைபந்தாட்ட தொடரில் கடந்த 20 ஆம் திகதி நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் பொலிகண்டி பாரதி அணியை எதிர்த்து துறை யூர் ஐயனார் அணி மோதியது. பரபரப்பாக நடைபெற்ற போட்டியில் துறையூர் ஐயனார் அணி 6.1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

துறையூர் ஐயனார் அணி அசோக் 3, சோனா 1, இகிந்தன்1, பிரதீ பன்1 கோல் போட்டனர். (க)

# முள்ளிக்குளம்...

மாறியுள்ள தமது கிராமத்தை மீட்டு குறித்த கிராமத்தில் தங்களை மீள்குடியேற்றம் செய்ய வலியுறுத்தி முள்ளிக்குளம் கிராம மக்கள் நேற்று வியாழக்கிழமை காலை தொடக்கம் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் முள்ளிக்குளம் பிரதான வீதியில் உள்ள முள்ளிக்குளம் கிராமத்திற்குச் செல்லும் பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக குறித்த கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பெண்கள், ஆண்கள் ஒன்றிணைந்து கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

நாட்டில் ஏற்பட்ட போர் காரணமாக கடந்த 2007ஆம் ஆண்டு கடற்படையினரால் முள்ளிக்குளம் கிராம மக்களாகிய தாம் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு தற்போது 10 வருடங்களை கடந்த நிலையில் பல்வேறு இடங்களிலும் பல்வேறு துன்ப துயரங்களுக்கு மத்தியில் தாம் வாழ்ந்து வருவதாக அந்த மகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தாம் நிர்க்கதியாகி பத்து வருடங்களை எட்டியுள்ள நிலையில், இன்று வரை தமது கிராமத்தை விடுவிப்பது தொடர்பாக அரசாங்கத்திடமிருந்து எந்த வித பதிலும் கிடைக்கவில்லை என பாதிக்கப்பட்ட முள்ளிக்குளம் கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

முள்ளிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 245 குடும்பங்கள், மலங்காடு, காயாக்குளி ஆகிய கிராமங்களில் அடிப்படை வசதிகள் இன்றி பல்வேறு இடர்பாடுகளுடன் வாழ்ந்து வருகின்றனர்.

மேலும் பல குடும்பங்கள் மன்னாரில் உள்ள உறவினர்களின் வீடுகளில் வாழ்ந்து வருவதாகவும் அந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தொடர்ந்தும் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தும், நல்லாட்சி அரசின் ஜனாதிபதிக்கு பல தடவைகள் மகஜரை அனுப்பி வைத்தும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத நிலையிலே எமது பூர்வீக காணிகளில் நிலை கொண்டுள்ள கடற்படையினரை வெளியேற்றி மக்களை மீள் குடியேற்றக் கோரி குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாக அந்த மக்கள் தெரிவித்தனர்.

நேற்று வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் முள்ளிக்குளம் கிராமத்திற்கு செல்லும் நுழைவாயிலுக்கு முன்னால் ஒன்று கூடி அமைதியான முறையில் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்த போது போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை அவ்விடத்தில் இருந்து அகற்றுவதற்கு கடற்படையினரும், பொலிஸாரும் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும் மக்கள் அவ்விடத்தில் இருந்து செல்லவில்லை.

இந்த நிலையில் முசலி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் விக்கிரமசிங்க சம்பவ இடத்திற்கு வந்து மக்களுடன் உரையாடி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதாகவும், உடனடியாக போராட்டத்தை கைவிட்டுச் செல்லுமாறும் கோரிக்கை விடுத்தார்.

எனினும் தமக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை தாம் போராட்டத்தை கைவிடப்போவதில்லை எனவும், தொடர்ச்சியாக தமது போராட்டம் முன்னெடுக்கப்பட்டு உண்ணாவிரத போராட்டமாக மாறும் என அந்த மக்கள் தெரிவித்தனர்.

மேலும் தமது கோரிக்கை அடங்கிய மகஜரையும் மக்கள் முசலி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளரிடம் கையளித்தனர்.

தற்போது கடற்படையினர் நிலை கொண்டுள்ள முள்ளிக்குளம் கிராம மக்களின் காணியல் பல நூற்றுக்கணக்கான விவசாய காணிகள், குடியிருப்புகாணிகள், 7 குளங்கள், பாடசாலை, ஆலயம், சேமக்காலை மற்றும் கரை வலைபாடுகள் 2 போன்றவை காணப்படுவதாக அந்த மக்கள் தகவல் தெரிவித்தனர்.

இந்நிலையில் தமது காணிகளை விட்டு கடற்படையினர் வெளியேறும்வரை தமது போராட்டம் தொடரும் என அந்த மக்கள் உறுதிபட தெரிவித்தனர்.

குறித்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரனும் அதில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4,9)

# ஆபத்தான வெடி...

காணிகளை சுத்தப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்வதில் தமக்கு பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். அண்மையில் கூட ஒருகாணியில் துப்புரவு செய்து தீ வைக்கும்போது வெடி பொருள் ஒன்று வெடித்ததாகவும் என்றும் அதனால் தெய்வாதீனமாக எவருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் தகவல் தெரிவித்தனர்.

தற்போதும் அநேகமானவர்களின் காணிகள் பற்றைகள் சூழ்ந்து காணப்படுவதால் அதனை சுத்தம் செய்வதில் வெடிபொருட்களால் இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது. எனவே விரைவில் உரியவர்கள் அனைவரும் காணிகளில் வெடிபொருட்கள் அபாயம் ஏற்படாத வகையில் சுத்தம் செய்து தரவேண்டும் என்று கேப்பாப்பிலவு பிலக்குடியிருப்பு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (செ-281)

# விபரங்கள்...

தகவல்கள் எம்மிடத்தில் இல்லை என ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான கஜந்த கருணாதிலக்க சபையில் அறிவித்தார்.

அதேநேரம் இக்காலப்பகுதியில் அரச பாதுகாப்புத் தரப்பில் பொலிஸ் தவிர்ந்து ஏனைய படைகளில் 25ஆயிரத்து 363 பேர் மரணமடைந்துள்ளதாகவும், 38 ஆயிரத்து 675 பேர் காயமடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டு எதிர்க்கட்சி ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில,

1972ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் தமிழ் பிரிவினைவாதப் பயங்கரவாதம் காரணமாக மரணமடைந்த மற்றும் காயமடைந்த சிவில் பாதுகாப்பு படையினர் உள்ளிட்ட இராணுவ அங்கத்தவர்களின் எண்ணிக்கை, போராளிகளின் எண்ணிக்கை, பொதுமக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவிடம் கேள்வியெழுப்பினார்.

பதிலளிப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் இல்லாத நிலையில் ஆளும் கட்சி பிரதம கொறாடா கயந்த கருணாதிலக்க மேற்படி பதிலை வழங்கினார். (செ-11)

# காணாமலாக்கப்...

டைக்கப்பட்ட நிலையிலும் மற்றும் ஏனைய வழிகளாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து தமக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தீர்வு கிடைக்கும் வரை கவனயீர்ப்பு போராட்டத்தை தொடரப் போவதாக தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்து நேற்று வியாழக்கிழமை 16ஆவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

கடந்த 8ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30, மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாகவுள்ள வீதியின் அருகாமையில் இந்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு தீர்வு எதுவும் கிடைக்காத நிலையில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந் நிலையில், நேற்றைய தினம் முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விபரங்களை ஆவணப்படுத்து முகமாகவும் மற்றும் தகவலறியும் உரிமைச் சட்டத்தை பயன்படுத்தி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தகவல்களை பெற்றுக் கொள்வதற்காகவும் பதிவுகளை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக மேற்கொண்டுள்ளனர்.

நேற்றையதினம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் 250, பேருடைய விபரங்களை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பதிவு செய்துள்ளனர்.

இந்த பதிவு வேலைகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 03, மணி வரை நடைபெறவுள்ளதால் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அனைத்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களும் தமது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பான விபரங்களை பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து தகவலறியும் உரிமைச் சட்டத்தை பயன்படுத்தி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தகவல்களை அரசாங்கத்திடம் இருந்து அறிந்து கொள்வதற்காக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனிடம் இப் பதிவு விபரங்கள் இன்று மாலை 5 மணிக்கு கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்றையதினம் நண்பகல் 12.45, மணியளவில் த.தே கூட்டமைப்பின நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் முன்னாள் வவுனியா நகர சபை உறுப்பினர் ரதன் ஆசிரியர் ஆகியோர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களினால் முன்னெடுக்கப்பட்டுள்ள கவனயீர்ப்பு போராட்ட இடத்திற்கு வருகை தந்த போது, அவர்களின் கைகளைப் பிடித்து உறவுகள் நீண்டநேரம் கதறியழுத சம்பவங்களும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-15,281)

# கடற்படை படகு...

மேற்படி சம்பவம் மன்னார் விடத்தல் தீவு கடற்பகுதியில் நேற்றிரவு 8.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இதில் விடத்தல் தீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கீச்சான் (வயது 35) என அழைக்கப்படும் கடற்தொழிலாளியான குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

மேற்படி பகுதியில் பிரஸ்தாப மீனவர் தனது படகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளையில் அங்கு ரோந்துப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இலங்கைக் கடற்படையினரின் அதிவேக படகு வேகமாக வந்து மோதியுள்ளது.

இதன்போது நிலை குலைந்து கடலில் வீழ்ந்த மீனவர் கடற்படையினரின் அதிவேக படகின் மோட்டார் விசிறியால் வெட்டுண்டு சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். உயிரிழந்த மீனவரின் சடலம் கடலில் இருந்து மீட்கப்பட்டு மரண விசாரணைக்காக விடத்தல் தீவு பள்ளமடு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இதையடுத்து சம்பவம் தொடர்பான விசாரணைகளை அடம்பன் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (செ)

# முக்கிய...

சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்ன தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கல ந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,


ஆட்சி மாற்றத்தின் பின்னர் நாம் கடந்து வந்தகாலம் குறித்து சிந்தித்து பார்க்கின்ற போது ஜனநாயகத்தை வலுப்படுத்தி கருத்து சுதந்திரம் பூரணமாக பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்ததை சகலரும் அறிவர். அதனை தவறாக பயன்படுத்திய சந்தர்ப்பங்களும் இருந்தது.

நாட்டின் பொருளாதார நிலைமையை பார்க்கின்ற போது மகிழ்ச்சியடைய முடியாத நிலைமை உள்ளது. ஏற்றுமதி வருமானத்தில் குறைவு ஏற்பட்டுள்ளது. அரச செலவுகளும் அதிகரித்துள்ளன. அரசின் வருமானம் அதிகரித்து வருகின்றது அதற்கு நிகராக செலவீனங்களும் அதிகரித்து வருவதால் நெருக்கடியான நிலைமைக்கு நாம் முகங்கொடுக்க நேரிடும்.

அதற்கான வெளிநாட்டு முதலீடுகளை அதிகரித்து ஏற்றுமதி வருவாயை அதிகரிக்க வேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தினதும், அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் அரசியல், பொருளாதார ரீதியில் ஜனாதிபதி சில முக்கிய தீர்மானங்களை மேற்கொண்டுள்ளார்.

எதிர்வரும் 4 ஆண்டுகளுக்குள் நாட்டை வலுவான முறையில் முன்னெடுத்துச் செல்வதே இதன் நோக்கமாகவே மேற்படி தீர்மானங்களை ஜனாதிபதி எடுத்துள்ளார். இது அரசியல் ரீதியான தீர்மானமன்றி நாட்டுக்கான தீர்மானமாகும். இதன்மூலம் நாட்டின் பொருளாதாரத்தை சரியான திசையில் முன்னெடுப்பது ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (செ-11)

# ஜனாதிபதிக்கு வரலாற்றுப்...



ரஷ்யாவில் மூன்றுநாள் விஜயத்தில் ஈடுபட்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கும் உத்தியோக பூர்வ சந்திப்பு நேற்று பிற்பகல் இடம்பெற்றது. சந்திப்பின் விசேட நினைவாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் அவர்கள் சிறப்பு பரிசொன்றை வழங்கினார்.

19ஆவது நூற்றாண்டுக்குரிய கண்டி யுகத்தின் அரச வாள் விளாடிமிர் புட்டினால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது. 1906 ஆண்டளவில் பிரித்தானியாவுக்கு கொண்டுசெல்லப்பட்ட இந்த வாள் பிரித்தானியாவில் நடைபெற்ற Sotheby எனப்படும் புராதனப் பொருட்கள் ஏல விற்பனையில் ரஷ்யாவினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

இருநாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய உறவின் அடையாளமாக இந்த புராதன வாள் ஜனாதிபதி விளாடிமிர் புட்டினினால இலங்கை ஜனாதிபதி இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது. (செ-11)

# இந்.மீனவர்கள் 8 பேருக்கு மறியல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டதாகத் தெரிவித்து, கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 08 பேரும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 4ஆம் திகதி வரை இந்திய மீனவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், அனலைத்தீவு கடற்பரப்பில் வைத்து தமிழகம்-நாகை மாவட்டத்தைச் சேர்ந்த 08 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் நேற்றைய தினம் கைதுசெய்யப்பட்டதுடன், இவர்கள் பயணித்த படகும் கைப்பற்றப்பட்டன.

இந்த நிலையில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் காங்கேசன்துறை கடற்றொழில் திணைக்களங்களில் கையளிக்கப்பட்ட நிலையில், ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போதே எதிர்வரும் 4ஆம் திகதி வரை இந்திய மீனவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, தம்மை இலங்கை கடற்படையினர் சித்திரவதை செய்து, துன்புறுத்தியதாக கைது செய்யப்பட்ட ஜெகதாப்பட்டிணத்தைச் சேர்ந்த மீனவர் இருவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (செ-11)

யாழ்ப்பாண பொதுநூலகம்



## மேலதிக விசார...

தனர்.

இச் சூட்டுச் சம்பவத்தில் துப்பாக்கிச் சூடு மற்றும் அதனால் ஏற்பட்ட விபத்தின் காரணமாக சுன்னாகத்தினைச் சேர்ந்த விஜயகுமார் சுலக்ஸன் (வயது 24), கிளிநொச்சியினைச் சேர்ந்த நடராஜா கஜன்(வயது 23) என்பவர்கள் உயிரிழந்திருந்தனர்.

இச் சம்பவத்தினை அடுத்து யாழ்.பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய 5 பொலிஸ் உத்தியோகஸ்தர்களுடைய பதவிகள் பறிக்கப்பட்டு நிலையில் அவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களுக்கு எதிராக யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று மீண்டும் யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ்.சதீஸ்கரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது சந்தேக நபர்கள் 5 பேரும் மன்றில் முற்படுத்தப்பட்டிருந்தனர். இவ் வழக்குத் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் குற்றப் புலனாய்வுப்பிரிவின் அதிகாரியும் மன்றில் தோன்றியிருந்தார்.

இந்நிலையில் உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர்கள் சார்பில் சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கம் ஆஜராகியிருந்தார்.

மன்றில் தோன்றிய குற்றப் புலனாய்வு பிரிவின் அதிகாரி இதுவரை நடைபெற்ற விசாரணைகள் தொடர்பிலான மேலதிக அறிக்கை ஒன்றினை மன்றிடம் சமர்ப்பித்திருந்தார்.

அத்துடன் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது என்றும், அதற்கான அனுமதியினை மன்று வழங்க வேண்டும் என்றும் கோரியிருந்தார்.

குற்றப் புலனாய்வு பிரிவினரின் சமர்ப்பணத்தினை ஏற்ற நீதவான் மேலதிக விசாரணைகளை நடத்துவதற்கான அனுமதியினை வழங்கியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து மன்றில் தோன்றிய சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கம், குறித்த வழக்குத் தொடர்பான விசாரணைகளை யாழ். நீதிமன்றம் நடத்தி வருகின்ற நிலையில், முல்லைத்தீவு சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சர் குறித்த வழக்கில் தலையீடு செய்யும் வகையில், உயிரிழந்த மாணவர்களுடைய பெற்றோரை அழைத்து பேசியுள்ளார்.

குறித்த சம்பவம் யாழ்ப்பாணத்தில் நடந்துள்ள நிலையிலும்,முல்லைத்தீவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இவ் வழக்கில் தலையீடு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டமை ஏன்? என்று இதுவரை தெரியப்படுத்தப்படவில்லை.

குறித்த பொலிஸ் அதிகாரியின் இந் நடவடிக்கை தொடர்பான உரிய பதில் மன்றில் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

இதற்குப் பதிலளித்த நீதவான் இது தொடர்பான உயர் பொலிஸ் அதிகாரிகளிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவர்களினால் குறித்த சம்பவம் தொடர்பான விளக்கம் மன்றுக்கு வழங்கப்படும் என்றார்.

அத்துடன் சந்தேக நபர்கள் 5 பேரையும் எதிர்வரும் மாதம் 6 ஆம் திகதி வரைக்கும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார். (செ-4)

## போர்க்குற்றங்க...

த்தங்களுக்கு அரசு அடிபணியாது என்றும் போர்க்குற்ற விசாரணையையும், நல்லிணக்கப் பொறிமுறையையும் ஒரே தடவையில் முன்னெடுக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற கைமீட்கப்பட முடியாத நன்கொடை உறுதிகளை முழுமையான நன்றியீனம் என்னும் ஏதுவின்மீது கைமீட்டல் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

2009ஆம் ஆண்டு போர்முடிவடைந்த போது ஐ.நாவுக்கும் அதன்கீழான சபைகளுக்கும் கடந்த அரசாங்கத்தினால், சில உறுதிமொழிகள் வழங்கப்பட்டன.

ஐ.நாவின் முன்னாள் செயலாளர் நாயகத்துடன் முன்னாள் ஜனாதிபதி கைச்சாத்திட்ட கூட்டறிக்கையின் பிரகாரமே தருஸ்மன் தலைமையிலான குழுவும் அமைக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்றன.

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு கடந்த அரசாங்கம் முயற்சித்திருந்தாலும் அந்த நடவடிக்கைகள் திருப்தியாகவும் இராஜதந்திர கட்டமைப்புடனும் இருக்கவில்லை.

இந்த நிலையில், உண்மையைக் கண்டறியும் குழுவை அமைக்குமாறு தற்போது கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பொறுப்புக்கூறல் பொறிமுறையின்போது சர்வதேச நீதிபதிகள் உள்வாங்கப்பட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், இலங்கையின் அரசமைப்பை சவாலுக்குட்படுத்தும் அதை மீறும் வகையில் செயற்படுவதற்கான அதிகாரம் அரசாங்கத்திற்கு இல்லை. இதனை நாம் 2015 ஆம் ஆண்டிலேயே ஐ.நாவுக்கு அறிவித்து விட்டோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் அரசமைப்பில் சர்வதேச நீதிபதிகளை அனுமதிக்க இடமில்லை. ஆனால், வெளிநாட்டு பங்களிப்பு அவசியம் என ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட அமைப்புகள் வலியுறுத்துகின்றன.

இலங்கையின் அரசமைப்பை மீறிச் செயற்படுமாறா மேற்படி நாடுகள் கூறுகின்றன? இது நாட்டின் சுயாதீனத்துக்கு விடுக்கப்படும் சவாலாகவே கருதப்படுகின்றது.

எமது நாட்டு மக்களின் மனித உரிமைகளை காக்கும் கடப்பாடு எமக்கு உள்ளது. இது விடயத்தில் சர்வதேசம் அழுத்தங்களை பிரயோகிக்கமுடியாது. அரசுக்கு இல்லாத அக்கறையா அனைத்துலக சமூகத்துக்கு இருக்கப்போகின்றது?

புதியதொரு அரசமைப்பை உருவாக்கி நல்லிணக்கத்தை நோக்கிப் பயணிப்பதற்கு அரசு தயாராகிவரும் நிலையிலும் அது குறித்து தவறான கருத்துக்கள் பரப்பப்படுகின்றன. ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்களை பகிரவே அரசாங்கம் தயாராக இருக்கின்றது. பௌத்த மதத்திற்குள்ள முன்னுரிமையும் அப்படியேதான் இருக்கும்.

இந்த நிலையில், விசாரணை நடத்தி தண்டனை வழங்குமாறும், நல்லிணக்கத்தை எற்படுத்துமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கப்படுகின்றன.

ரயில்பாதையின் தண்டவாளத்தின் இரண்டு நிரல்கள் எப்படி ஒன்று சேராதோ, அது போல்தான் போர்க்குற்ற விசாரணையையும், நல்லிணக்கத்தையும் ஒன்று சேர்க்க முடியாது.

அதையும் மீறி, இவர் தான் அதைச்செய்தார், இது தான் போர்க்குற்றம் என சாட்சியங்கள் வழங்கப்பட்டால் அது நாட்டுக்காக இத்தனை ஆண்டுகளாகப் போராடிய இராணுவத்தினருக்கு கவலையையும், கலங்கத்தையும் தான் ஏற்படுத்தும்.

மேலும் சிங்கள, தமிழ் மக்களிடையே விரிசல் ஏற்படுவதோடு, மீண்டுமொரு போருக்குகூட அது வழியமைத்து விடும் ஆபத்து காணப்படுகின்றது என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## கலப்பு நீதிமன்...

ங்கை அரசாங்கம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

உள்ளக பிரச்சினையை நாட்டிற்குள்ளேயே தீர்த்துக்கொள்வதற்கான இயலுமை இலங்கைக்கு காணப்படுவதாகவும் இராஜாங்க நிதியமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள நிதியமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அவர், சர்வதேச நீதிபதிகளை ஏற்கப்போவது இல்லை என்ற நிலைப்பாட்டில் மாற்றமில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு மேலும் உரையாற்றிய லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன,

எந்தவொரு காரணத்திற்காகவும் சர்வதேச நீதிபதிகளை ஏற்றுக்கொள்ளப்போவது இல்லை என ஜனாதிபதி தீர்க்கமாக அறிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியும் சர்வதேச நீதிபதிகள் அவசியமில்லை என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றது. பிரதமரும் அதனையே தெரிவித்துள்ளார்.

இதுவே இலங்கையின் நிலைப்பாடு. மனித உரிமைகள் ஆணையாளர் வெளிநாட்டு நீதிபதிகள் அவசியம் எனக் குறிப்பிட்டு 24 மணித்தியாலங்களுக்குள் ஜனாதிபதி தனது கருத்தை வெளியிட்டிருந்தார்.

இது உள்நாட்டு பிரச்சினை, சர்வதேச நீதிபதிகளை நியமிக்க வேண்டுமென்ற தேவை யாருக்காவது இருந்தாலும் அதனை நாங்கள் ஏற்பதற்கு தயாரில்லை. எங்கள் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்றார். (செ-11)

## போர்க்குற்றமே...

சியமும் இல்லை என்ற நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இருப்பதாகவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றைய தினம் கொழும்பிலுள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது. இதில் அக்கட்சியைச் சேர்ந்த மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபாவும், பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சந்திம வீரக்கொடியும் கலந்துகொண்டிருந்தனர்.

ஐ.நா மனித உரிமைப் பேரவையில் நேற்று முன்தினம் உரைநிகழ்த்திய ஆணையாளர் செயித் ராட் அல் ஹுசைன், கலப்பு நீதிமன்றம் மற்றும் சர்வதேச நீதிபதிகளின் அவசியத்தை மீண்டும் வலியுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில் இதுகுறித்து ஊடகவியலாளர்கள் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பின்போது வினா எழுப்பினர்.

இதன்போது உரையாற்றிய அமைச்சர் பைஸர் முஸ்தபா, ஜனாதிபதி தான் பதவியேற்ற காலம் தொடக்கம் கூறிவருவதாவது,

சர்வதேச நீதிபதிகளையும், விசாரணையாளர்களையும் ஒருபோதும் இலங்கை அனுமதிக்காது என்றும், அரசமைப்பு அதற்கு இடமளிக்கவில்லை என்றுமே.

அதேபோல், 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் சர்வதேச விசாரணையாளர்கள் வழக்குகளை விசாரிக்க வேண்டும் என்று இங்கும் குறிப்பிடவில்லை.

எனவே, இலங்கையின் இறையாண்மையை ஜனாதிபதி ஒருபோதும் காட்டிக் கொடுக்க மாட்டார். வரலாற்றில் அவர் இலங்கையின் சுயாதீனத்திற்கான உழைத்தவர் என்று அனைத்து மக்களுக்கும் தெரியும்.

அத்துடன், சகவாழ்வை ஏற்படுத்த ஜனாதிபதி பாரிய முயற்சிகளை எடுத்துள்ளார். அதற்கு மக்களின் மனங்களை ஒன்றிணைக்க வேண்டும் என்பதே அவரின் நிலைப்பாடு. அதனையே செய்கிறார்.

எந்தவொரு நாட்டுக்கும் அடிபணியாத வெளிவிவகாரக் கொள்கையை இலங்கை கடைப்பிடிப்பதால் 40 வருடங்களின் பின்னர் ஜனாதிபதிக்கு ரஷ்யா அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கையில் போர்க்குற்றங்கள் என்றும் ஒன்றும் இடம்பெறவில்லை என்பதை நான் உறுதியாக கூறுகின்றேன். அரசியல் இலாபங்களுக்கான ஒருசிலர் கலப்பு நீதிமன்றம், சர்வதேச நீதிபதிகள் என்று பொய் பிரசாரங்களை கட்டவிழ்த்துவிட்டு வருகின்றனர் எனவும் அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார். (செ-11)

## மகிந்தவிடம் இன்று...

தேர்தல் காலத்தின் போது, அரச உடைமைகளை மோசடி செய்ததாக கூறப்படும் சம்பவம் குறித்து வாக்குமூலம் வழங்கவே அவர் அழைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த 16ஆம் திகதி அவர் வாக்குமூலம் வழங்க அழைக்கப்பட்டிருந்த நிலையில் மகிந்த ராஜபக்ஷ முன்னிலையாகவில்லை.

தனிப்பட்ட காரணங்களால் மகிந்த பிறிதொரு நாளை அறிவிக்குமாறு தனது சட்டத்தரணிகள் மூலம் தெரிவித்திருந்த நிலையில் இன்று அவரிடம் வாக்குமூலம் பெறப்படவுள்ளது. (செ-11)


வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
◆கணக்காளர் சேவை
◆SLAS
◆முகாமைத்துவ உதவியாளர்
◆தகவல் திணைக்கள விநியோக உதவியாளர்
◆வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்
◆சட்டக்கல்லூரி சட்டமாணி
◆வெளிநாட்டு சேவைகள்
போன்ற பரீட்சைகக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
தொடர்பு
076 688 3394,
021 222 3382
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

உடனடியாக தேவை
01.மேசன் 03.டிப்பர் சாரதி
02.லேபர் 04.உப ஒப்பந்தகாரர்
கதிர் கட்டுமான நிறுவனத்துக்கு மேற்குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அனுபவம் வாய்ந்தவர்கள் விரும்பப்படுகின்றனர். உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
077 241 7103, 021 492 7911
kathircons12@gmail.com
(8389)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
விரைவில் ஆரம்பம். உடன் பதிவை உறுதிப்படுத்துக.
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்
(8379)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
070 330 5500
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com
லண்டனுக்கு (UK) 5kg க்கு மேல் மிகக் குறைந்த கட்டணம்
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | நவாலி | சாவகச்சேரி | மீசாலை | மல்லாவி
முல்லைத்தீவு | கிளிநொச்சி | திருகோணமலை | வவுனியா
(சி-7890)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண்,மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு
UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(சி-7858)

கனடாவில் நிரந்தர குடியேறல்/வேலைவாய்ப்பு/கல்வி- கருத்தரங்கு
இனிமேலும் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல வேண்டாமே!
குறைந்த கட்டணத்துடன் சட்டபூர்வமாக குடும்பத்துடன் கனடாவில் குடியேற இலகுவான அரிய வாய்ப்புகள்
8ம் ஆண்டு வரை படித்தவர்கள் முதல் பல்கலைக்கழக கல்வி முடித்தவர்கள் வரை அனைவருக்கும் கனடாவில் வேலைவாய்ப்புக்களுடன் குடும்பமாக நிரந்தர குடியுரிமை (PR) பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்கள் பல உண்டு. இதுவரை எம்மவர்கள் கனடாவில் குடியேற பயன்படுத்தாத பலகுடியேற்ற வழிமுறைகள் பற்றி கனடாவில் இருந்து வருகை தந்திருக்கும் Immigration அலுவலரால் உங்களுக்கான வாய்ப்புக்கள் பற்றி முழு விபரமும் விளக்கமும் தரப்படும்.
கருத்தரங்கு நாள்
26-03-2017
ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி
IMMIGRATION APPROVED Canada
V2 Travels
முற்பதிவு அவசியம் - இன்னும் சில ஆசனங்கள் மட்டுமே உள்ளன
0768226236
49 A சப்பல் லேன் யாழ்ப்பாணம்
(சி-7864)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.